விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3397)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (08.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 141

# சித்திரவதைகள் தொடர்வதாக ஐ.நா நிபுணர்கள் கவலை!


★சட்டப் பொறிமுறையில் குறைபாடு

★போராளிகளின் கைது தவறல்ல

★இரகசிய தடுப்பு முகாமைக் கண்டோம்

(நியூயோர்க்)


இலங்கையில் போர் நடந்த காலத்துடன் ஒப்பிடுகையில், தற்போது சித்திரவதைகள் குறைந்துள்ள போதிலும் அதற்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை என ஐ.நாவின் இரண்டு உயரதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.



இலங்கை அரசின் அழைப்பை ஏற்று அங்கு ஒரு வார காலம் பயணம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான நிபுணர்கள் மொனிக்கா பின்டோ மற்றும் யுவான் இ மெண்டிஸ் தமது பயணத்தின் முடிவில் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர்

15 ஆம் பக்கம் பார்க்க....

## முதலீடு செய்ய சம்பந்தன் அழைப்பு



(கொழும்பு)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் மேம்பா

15 ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக யாழ குடாநாடு முழுவதும் மற்றும் கிளி

15 ஆம் பக்கம் பார்க்க....

## புகையிரதம் மோதி இருவர் பலி!



15-ம் பக்கம் பார்க்க

## மற்றொரு விபத்திலும் இளம்பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதம் மோதியதில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக தெரிய வருவதாவது,

நேற்று இரவு காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதம் மோதியதில் யுவதியொருவர் படுகாயமடைந்த நிலையில்யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் சுன்னாகம் பகுதி

15 ஆம் பக்கம் பார்க்க....

## கடன் தொகை அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

இலங்கைக்கான கடன்தொகையை மேலும் அதிகரிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மட்டு. மேற்கு எல்லையில் காடுகள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையில், சிங்களவர்களால் ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதாகவும், அங்கு சிங்களக் குடியேற்றம் ஒன்று நிறுவப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மற்றும் செங்கலடி பிரதேச செயலருடன் இணைந்து, காடுகள்

15 ஆம் பக்கம் பார்க்க....

## “இலங். தமிழர் நலனுக்காக யாழ். சென்ற முதல் பிரதமர்”

### மோடி பேச்சு



(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் முனனேற்றத்திற்காகவும், அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகவும் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற முதலாவது இந்தியப் பிரதமர் தாமே என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்ட

15 ஆம் பக்கம் பார்க்க....

அக்ஷய திருதியை நன்நாளில் தங்க நகைகளை வாங்கிட ராசியான தங்க மாளிகைக்கு வாரீர் வாரீர்
யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
திங்கட்கிழமை 09.05.2016 நாளை அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு விசேட கழிவுகளுடன் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
K.T.பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே:- 021 321 2399
குறிப்பு :- தங்கநகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்
(C-4523) நிபந்தனைக்குட்பட்டது தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயப் பரிசில்கள் வழங்கப்படும்.



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனை

யாழ்.ஆஸ்பத்திரி வீதி வேம்படிச் சந்தி, Insurance Corporationக் கும், அடைக்கல மாதா கோவிலுக் குமிடையில் 3 பரப்புக் காணி விற் பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு;-0778730129 (4414)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சிவராசா
### (பொன்சிவாஸ்)



யாழ்.புளியங்கூடலைப் பிறப்பிட மாகவும் 74/1, விசுவமடு பிரதான வீதி, முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவராசா 06. 05.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம் பலம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - ராஜே ஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் மணிவண்ணன் (சுவிஸ்), மலர்விழி (ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பொன்விழி (லண்டன்), கயல்விழி (கனடா), சுடர்விழி (பிரான்ஸ்) ஆகியோரது அன்புத் தந்தையும் நந்தினி (கொழும்பு), வெங்கட்றமணா (விரிவுரையாளர்-யாழ். பல் கலைக் கழகம்), சத்தியசீலன் (லண்டன்), பாலகுமாரன் (கனடா), நவநீதராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனா ரும் கிரிசாந்த், தரணிகா, துளசிப்பிரியா, சசிஸ்னுராம், கவி ஸ்னு, பவிஸ்னு, அஜித்தா, அரிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் நீலாம்பிகை, பத்மராஜா, உமாராணி, செல்வ ராசா, காலஞ்சென்ற தர்மராஜா ஆகியோரின் அன்புச் சகோதர னும், காலஞ்சென்ற மனோகரன், லீலாவதி, சந்திரமதி, சிவபாலன், சாரதா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் விஸ்வமடு 12ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:-மனைவி +94774324245
சத்தியசீலன் (லண்டன்) +44751212821,
பாலகுமாரன் (கனடா) 0016478304513,
(சி-4554) நவநீதராசா (பிரான்ஸ்) +33667219592

## சித்த ஆயுர்வேத வைத்தியசாலை இடமாற்றம்
### (விசேட விஷகடி வைத்தியசாலை)

ஏழாலை மேற்கு, சிவகுரு வீதியில் இதுநாள் வரை இயங்கிவந்த எனது வைத்தியசாலை 09/05/ 2016 தொடக்கம் அச்செழு வடக்கு, நீர்வேலி எனும் முகவரியில் இயங்கவுள்ளது என்பதை அறியத் தருவதுடன், சிகிச்சை பெற வருபவர்கள் புதிய முக வரியில் அமைந்துள்ள எனது வைத்திய நிலை யத்தில் மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ளு மாறும் கேட்டுக் கொள்கிறேன்.

*தகவல்:*
*வைத்தியர் வீரசிங்கம் திருத்தணிகைவேல்*

தொ.பே.இல.
076 638 5424
077 051 9852
077 189 5718

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

(4397)

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் ரெயில் ஸ்டேசனுக்கு அருகாமையில் (A9 வீதியில்)
9 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

4392 தொடர்புகளுக்கு: 077 821 3707
077 234 7837

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42ஆவது வீதியில் 3ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/கிழமை/மாத/வருட வாடகைக்குண்டு (4502)

தொடர்பு- 0778378597

## காணி விற்பனை

A9 வீதி, நுணாவில் சந்தியில் பரு த்தித்துறை வீதி மட்டுவில் தெற்கு, துர் க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 27 பரப்பு காணி பிரித்து (2,3, 7,10) கொடுக்கப்படும். தென்னை, மா வைப் பதற்கும் வீட்டுத்திட்டத்திற்கும் ஏற்றது.

0778730129 (4414)

## SPOKEN ENGLISH AND SPOKEN SINHALA

ஓய்வுபெற்ற ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ அல்லது குழுக்களாகவோ கற் பிக்கப்படும்.

தொடர்பு:-0774041904 (4396)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் நான்கு பேருக்கு சமையல் செய் வதற்கு பெண் தேவை. காலை வந்து மாலை போகலாம். சம்பளம் மாத மொன்றுக்கு 15,000/- ரூபாய் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0773611282
(4555)

## வேலை வாய்ப்பு

18 வயது தொடக்கம் 65 வயது வரையான ஆண், பெண் இரு பாலாருக்குமான வேலைவாய்ப்பு. உடனடியாக தொடர்பு கொள்ள

தொ.இல:-
0768836495 (4505)

## கேள்வி கோரல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

05.05.2016ந் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி கோரலுக்கு மேலதிகமானது,

கீழ்க் குறிப்பிடப்பட்ட திருத்தங்களுடன் ஏனைய விடயங் கள் நடைமுறையில் இருக்கும்.

பந்தி 3 இல "C5" என்னும் சொல் நீக்கப்பட்டு அதற்காக "C6" பிரதியீடு செய்யப்படுகிறது. பந்தி 11இன் கீழ் உள்ள அட்டவ ணையில் நிரல் 5இல் தேவையான தரம் CIDA"C5" என் னும் சொல் நீக்கப்பட்டு அதற்காக "C6"பிரதியீடு செய்யப்படுகிறது.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்.மாவட்டம். (சி-4556)

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
(C-4528) தொ.பே - 021 - 222 2567

## மோகன் மியூசிக் & சவுண்ஸ்

தென்னிந்திய திரை இசைப் பாடகர்கள், Super singer பாடகர்கள், தென்னிந்தியாவின் பிரபல்யமடைந்த பாடகர் கள் மேலும் தென்னிந்திய இசைக்குழுக்கள் போன்ற கலைஞர்களை தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வந்து இலங்கையின் வடபுலத்தில் இசை நிகழ்ச்சி செய்வ தற்கு தொடர்பு கொள்ளவும்.

மோகன் சவுண்ஸ் 0777030234 (சி-4558)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



பேரின்பநாதன் ஸ்ரீஜெயா
அவர்களின்
செல்வ புதல்வன் **கபில்**
இலங்கை மாதாவின்
முத்தாக விளங்கும்
தென்பல்கலைக்கழகத்தில்
விஞ்ஞானமாணி
பட்டம்பெற்ற ஆசை
பேரனையும்,
மருமகனையும்,
மைந்தனையும்,
மைத்துனனையும்
மனமார வாழ்த்தி இன்னும்
பல பட்டங்களை பெற்று
உயர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
சி.கோபாலபிள்ளை குடும்பம்
பொ.பஞ்சலிங்கம் குடும்பம்
கோ.புவீந்திரன் குடும்பம்
கோ.நரேந்திரன் குடும்பம்
சி.மகேந்திரன் குடும்பம்
ந.சதீஸ்குமார் குடும்பம்
க.துஷ்யந்தன் குடும்பம்
ம.ஜேந்திரன் குடும்பம்
அ.சுஜீகரன் குடும்பம்

(4509)

# ஆச்சி ஹொட் பூட்

ஆச்சி என்றால் நம்பர் 1 சாப்பாடு, தாராள வசதிகளைக் கொண்ட மிகப் பிரமாண்டமான கைதடித் தொழிற்சாலை.
சுத்தம், சுகாதாரமான உணவுகளை உடனுக்குடன் வழங்கி அதிக வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தியுள்ளது.

**021 205 7455**
**021 205 7456**

(C-4557)

மற்றும் கிளைகள்
மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி, திருநெல்வேலி,
மருத்துபீடம் (Canteen), தொழில்நுட்பக் கல்லூரி

கைதடி கிழக்கு கைதடி (Factory)

# சிறுநீரக நோய் குறித்த ஆலோசனை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



நோய்க்கான காரணங்கள் அறியப்படாத சிறுநீரக நோய் தொடர்பான விசேட ஆலோசனை அறிக்கையொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது. உலக சுகாதார அமைப்பு மற்றும் சிறுநீரக ஒழிப்பு தொடர்பிலான ஜனாதிபதி செயலணி ஆகியன இணைந்து நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த செயலமர்வின் போது இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தன.

இலங்கையின் 54 நிபுணர்களும், இந்தியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கியூபா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த செயலமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

காரணங்கள் அறியப்படாத சிறுநீரக நோயினால் இலங்கையைப் போன்று மத்திய மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளும் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐ.நா.பொதுச்சபையில் சந்திரிகா விசேட உரை



(கொழும்பு)

ஐ.நா.பொதுச்சபையின் விசேட கூட்டத்தொடரில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றவுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி மற்றும் 11 ஆம் திகதிகளில் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்திலேயே இலங்கை சார்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றவுள்ளார்.

இதன்போது நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டுள்ள நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து இவர் உரையாற்றவுள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த கூட்டத்தில் ஐ.நா பொதுச் சபை தலைவர், ஐ.நா. உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், பார்வையாளர்கள், ஐ.நா அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.(இ-5)

# 50 இடங்களில் மனிதப் புதைகுழிகள்

(ஜெனீவா)

**ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து மீளக் கைப்பற்றப்பட்ட ஈராக்கின் பல பகுதிகளிலும் இதுவரை 50 இற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக ஈராக்கிற்கான ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் ஜன் குபிஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று முற்தினம் வெள்ளிக்கிழமை ஐ.நா. பாது காப்புச் சபையில், 'ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் இழைத்த கொடிய குற்றங்களுக்கான ஆதாரங்கள்' தொடர்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட குபிஸ், "ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, பின்னர் அரச படையினரால் மீளக் கைப்பற்றப்பட்ட பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்ட வெடிப் பொருட்கள் மீட்பு நடவடிக்கைகளின் போது, 50 இற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், கடந்த மாதம் 19 ஆம் திகதி அன்பர் மாகாணத்தின் மத்திய நகரான ரமாடியில் அமைந்துள்ள காற்பந்து மைதானத்திற்குள் 3 மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் 40 இற்கும் மேற்பட்டோரின் உடல் எச்சங்கள்கண்டெடுக்கப்பட்டுள்ளன" எனவும் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஆண்டு மே மாதம் முதல் ரமாடி நகரம் ஐ.எஸ் தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் ஈராக்கிய அரச படையினரால் மீளக் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



# சவுதியிலிருக்கும் இலங்கையர்களை திருப்பி அனுப்பத் துரித நடவடிக்கை

(றியாத்)

சவுதி அரேபியாவில், முகாம்களில் இருக்கும் இலங்கையர்களை துரிதமாக இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக சவுதி அரேபிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவுக்கு சென்று பல்வேறு காரணங்களினால் அநாதரவான நிலையில் இலங்கைக்கு திரும்ப முடியாது, நீண்ட காலமாக, அந்த நாட்டில் உள்ள நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள், நாடு திரும்ப அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாடு ஒன்றை ஏற்படுத்த சவுதி அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார பிரதியமைச்சர் கலாநிதி ஹர்சடி சில்வா அண்மையில் சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது அந்த நாட்டு தொழில் மற்றும் உள்துறை விவகார பிரதியமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பிரதிபலனாக சவுதி அரேபியா இந்த இணக்கத்தை வெளியிட்டுள்ளது. (இ-5)

# குற்றமற்றவர்களுக்கு வேட்புமனு வழங்கவும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

குற்றச்செல்களுடன் தொடர்புடைய மற்றும் குற்றச் செயல்களுக்கு காரணமானவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களின் போது வேட்டுமனுக்களை வழங்கக் கூடாது என்றும் அது குறித்து அரசியல் கட்சிகள் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் என்று தேர்தல்களை கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு கோரியுள்ளது.

குற்றங்களுடன்தொடர்புடையவர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் நாடாளுமன்றமும் செயலிழந்து போகும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி இவ்வாறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை நிராகரிப்பதுடன், அவர்கள் நாடாளுமன்றம் செல்வதைத் தடுக்கும் பொறுப்பு வாக்களர்களுக்கு இருப்பதாகவும், வாக்காளர்கள் பொருத்தமான நபரைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (இ-5)

# இராணுவத்தின் 4 மேஜர் ஜெனரல்கள் பசில் ராஜபக்ஷவுடன் இரகசிய சந்திப்பு



இலங்கை இராணுவத்தில் சேவையில் உள்ள நான்கு மேஜர் ஜெனரல்களும், ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியும், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளதாக, ராவய சிங்கள வாரஇதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அரசியல்வாதிகள், பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் மற்றும் ஏனைய அரச நிறுவன உயரதிகாரிகளைச் சந்திப்பதற்கு முன்னர், இராணுவத் தளபதியின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கா புறப்பட முன்னர், அவருடன் நடந்த சந்திப்பு ஒன்றின் போது, வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு அமையவே பசில்ராஜபக்ஷவுடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

பசில் ராஜபக்ஷவைச் சந்தித்த நான்கு மேஜர் ஜெனரல்களும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள் என்றும் கஜபா படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. இவருக்கு சேவை நீடிப்பு வழங்குவது தொடர்பாக இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

பசில் ராஜபக்ஷவைச் சந்தித்த மேஜர் ஜெனரல்களில் இருவர், இராணுவத் தளபதியாக நியமிக்கப்படாவிடின், 55 வயதை எட்டுவதால், எதிர்வரும் செப்டெம்பர் 25 மற்றும் செப்டெம்பர் 30ஆம் திகதிகளில் ஓய்வு பெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

கடந்த ஆண்டு நீர்கொழும்பில் நடந்த திருமண நிகழ்வு ஒன்றில், பங்கேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, கோத்தபாய ராஜபக்ஷவின் ஏற்பாட்டில், ஒன்பது மேஜர் ஜெனரல்கள் சந்தித்துப் பேசியிருந்தனர்.


போர்க்குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு வசதியாக தமக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட வேண்டும்என்று இவர்கள் கோரியிருந் தனர்.

இதனை அடுத்தே, இராணுவ அதிகாரிகள், முன் அனுமதி பெற்றே அரசியல்வாதிகள், உயர்மட்டத் தலைவர்கள், அதிகாரிகளைச் சந்திக்க முடியும் என்று இராணுவத் தளபதி சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

ஜனாதிபதியைச் சந்தித்து சேவை நீடிப்புக் கோரிய ஒன்பது மேஜர் ஜெனரல்களில், மகிந்த ஹத்துருசிங்க, ஜெகத் டயஸ், பிரசன்ன டி சில்வா ஆகியோர், 55 வயதை எட்டியுள்ள நிலையில் ஓய்வு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 26 - 05 - 1991



உதிர்வு 26 - 03 - 2016

## துரைசிங்கம் ஐங்கரன்

26.03.2016ல் இறையடி சேர்ந்த எமது பேரன்புக்குரிய துரைசிங்கம் ஐங்கரன் அவர்களது அந்தியேட்டி நிகழ்வுகள் 08.05.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கோண்டாவில் கிழக்கு வாமஸ் சந்தி கொட்டைக்காடு இல்லத்தில் நடைபெற்று பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் சந்தி தியாகி அறக்கொடை மண்டபத்தில் (TCT) ஆத்மசாந்திப் பிரார்த்தனை நினைவீடு வெளியிடல், மலர் அஞ்சலி என்பன நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு மதிய போசனமும் நடைபெறும்.

15.03.2016 புகையிரதம் மோதியதில் காயமுற்று 26.03.2016-இல் இறப்பெய்தினார். 27.03. 2016இல் அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்டும் அதன் பின்னர் இன்று வரை சகல கிரியைகள், சடங்குகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், மருத்துவசமூகம், யூனியன் வங்கி, யூனியன் அசுரன்ஸ் சமூகம், திரைப்படச்சமூகம், கணனிசமூகம், இலக்கியவட்ட சமூகம், சர்வதேச இணையங்கள் சகலருக்கும் நன்றி நவில்கின்றோம்

*குறிப்பு:-இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்*

கொட்டைக்காட்டு ஒழுங்கை,
வாமஸ் சந்தி
(டிப்போ அருகில், கோண்டாவில்)

தகவல்: கிருஸ்ணசாமி துரைசிங்கம்
(குடும்பத்தினரும், உறவினர்களும்)
0779839245

(4511)


என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை
அள்ளித் தரும் அட்ஷய திருதியை
திருநாளாம் 09.05.2016 அன்று எமது
ரூபி ஜுவல்லறியில் தங்க நகைகளை
கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை
அள்ளிச் செல்ல அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்.



Rube Jewellery Since 1982

ரூபி ஜுவல்லறி



நம்பிக்கை, கைராசி
மற்றும் தரம்குன்றா



தங்கநகை உலகில் 34 வருட
அனுபவம் வாய்ந்த நாங்கள்
உலகின் எப்பாகத்தில் இருக்கும்
எமது வாடிக்கையாளர்களுக்கு
சிறந்த சேவையினை
வழங்கிக்கொண்டிருக்கின்றோம்
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.




இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919, 0777 344 074

(சி-4525)



வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


**வீடு வாடகைக்கு தேவை**

OLR
சேர்ச்சையும்
அதனை
அண்டிய பகுதி
யிலும் சகல
வசதிகளுடனும்
கூடிய வீடு
வாடகைக்கு
தேவை.

தொடர்புகளுக்கு:
சன்சக்தி ரேடர்ஸ்/
கிக் விசன்
651, ஆஸ்பத்திரி
வீதி,
யாழ்ப்பாணம்.
077 5930335

(4513)

**தேவை**

நல்ல
நிலையில்
உள்ள தச்சு
வேலை
இயந்திரம்
விலைக்குத்
தேவை

T.P:
0774366704

(சி-4561)


50% கட்டணக் கழிவுடன்...

SPOKEN English With Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்களாக 3 மாதங்களுக்கும், பகுதிநேர பாடநெறி சனி or ஞாயிறு தினங்களில் நடைபெறும்

Course Fee : ~~13250/=~~ Offer Fee : 6625/=

Now prepare for your IELTS

மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு..

IELTS Life Skills

A1 | B1 தகைமைப் பரீட்சைகள்

கடந்த ஒரு வருடத்தினுள் 304 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்

German & Swiss மொழிப் பாடநெறி Deutsch

கடந்த 15/12/2015 இல் நடந்த பரீட்சையில் S. அன்பழகன், 15/03/2016. இல் நடந்த பரீட்சையில் V. ரிஸிகா ஆகிய எங்களது மாணவர்கள் இலங்கையில் அதிகூடிய மதிப்பெண்களைப் பெற்ற முதல் மாணவர்களாவர்

Netherlands மொழிப் பாடநெறி Dutch

French மொழிப் பாடநெறி French

அனுபவமும் திறமையும் கொண்ட ஆசிரியர்களினால் நடைபெறுகின்றது

Hot line : 077-6844016

BRITISH COUNCIL
IELTS Registration Centre

BRITISH COLLEGE OF EDUCATION

23, Kachcherinallur Rd, Jaffna.
Tel : 021-4927113, 077-3830671

103, Mannar Rd, Vavuniya.
Tel : 024-4930041, 077-0538523

51, Vayal Rd, Mannar.
Tel : 024-4930041, 076-8685922


13, Chapal Rd, Colomo-06, 565, Peradeniya Rd, Kandy.

(4504)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை இராசதுரை

(ஓய்வுநிலை பொறியியலாளரும், முகாமையாளரும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை)



கொக்குவில் கிழக்கு (காராளிகடை) பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசதுரை அவர்கள் நேற்று (07.05.2016) சனிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை -சின்னத்தங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், ஸ்ரீகாந்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி-கமலாசனி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் சகோதரனும், நடேசன், சாந்தி, ஜெயந்தி, கணேசன் ஆகியோரின் மைத்துனரும், சுதர்சினி (Account Executive), சுதர்சன் (Accountant) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. தமயந்தியின் மாமனாரும், ஸ்ரீகரியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (08.05.2016) இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

246/3, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
0774166380

தகவல்:மகன் (இ.சுதர்சன்)


(4508)

# நினைவஞ்சலிகள்

**7 ஆவது ஆண்டு நினைவு**

வே.முருகுப்பிள்ளை
பிறப்பு-1942-12-22
இறப்பு-2009-12-22

கண் கலங்கி நாங்கள் நிற்க
கடவுளிடம் நீங்கள் சென்ற
காலங்களோ 7 வருடங்கள்



**முதலாம் ஆண்டு நினைவு**

மு.சிவபாக்கியம்
மலர்வு-1946-10-20
உதிர்வு-2015-05-20

ஓர் ஆண்டு ஒரு நொடிப்பொழுதில்,
ஆனதம்மா உங்கள் இழப்பை
எம்மால் நம்பவே முடியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
09-05-2016 திங்கட்கிழமை அன்னாரது
இல்லத்தில் சாந்தி கிரியையும் மதிய போசனமும் நடைபெறும்
என்பதை அறியத்தருகின்றோம்.

(சி-4553)

4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:-பிள்ளைகள்


நியூ உதயா வின் மின்னி ஜொலிக்கும் தங்கத்தால் அட்ஷய திருதியை வரவேற்போம்.

தங்கம் வாங்கும் போது சகல
ஐஸ்வர்யங்களையும் தரும் சுப தினமான
அட்ஷய திருதியையில் தேர்ந்தெடுக்க நவீன
டிசைன்களிலான ஆபரணங்களை எம்
உறவுகளுக்கு நியூ உதயா ஏற்படுத்தியுள்ளது.

**தங்கப்பவுன் நகை வியாபாரம்**

நாங்கள் நம்புகிறோம்...
ஒவ்வொரு உறவும் தங்கமான உறவு என்று

அத்தோடு குலுக்கல் முறையில் தேர்தெடுக்கப்படும்
5 அதிர்ஷ்டசாலிகளுக்கு
**தங்க நாணயங்கள் வழங்கப்படும்.**
மற்றும் மேலும் பெறுமதிமிக்க பரிசில்களுடன்




நியூ உதயா ஜுவல்லர்ஸ்

மூன்று பவுனுக்கு மேல்
கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு லக்ஷ்மி
பென்ரன் இலவசமாக
வழங்கப்படும்.

NEW Uthayaa JEWELLERS

021 222 2031
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jwellrs
newuthayajwellrs@gmail.com
uthaya.new

(சி-4526)


# இராசி பலன்

08.05.2016
(சித்திரை 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துதியை முன்னிரவு 9.09 மணிவரை
கார்த்திகை காலை 6.52 மணிவரை
ரோகினி பின்னிரவு 5.35 மணிவரை
சுபநேரம்8.55-10.25மணிவரை
இராகுகாலம் 4.25-5.55 மணிவரை
மங்கையர்க்கரசியார் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக்,புத | சந் | |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் விசாகம் | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்**
முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்,போசன சுகமுண்டு.

**மேடம்**
மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்,துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் மாற்றம் செய்வீர்கள்,பல நாட்களாக இருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது,பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்**
பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்,தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, சுப காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்**
அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரலாம்,தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்**
உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்,அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**சிம்மம்**
சிறப்பான நாள்,வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்,சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**தனுசு**
வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தடைகள் ஈடுபடலாம்.

**விருச்சிகம்**
எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்,போசன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும்.

**துலாம்**
விட்டுக்கொடுத்துச் செல்வதால் வெற்றி கிடைக்கும் நாள், மனதில் கவலைகள் தோன்றி மறையும்,புதிய விடயங்களை யோசித்துச் செய்வது நல்லது.

**கன்னி**
மனதில் இருந்த பாரம் குறையும், தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை

## பிரதி சுகாதார அமைச்சர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதே சுகாதார அமைச்சின் முதற்கட்ட நடவடிக்கையாக இருக்கும். அவர்களுடைய பிள்ளைகளின் உடல் நிலை, சுகாதாரம், போசாக்கு தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டிய கடமை சுகாதாரதுறையினராகிய தமக்கு உண்டு என பிரதி சுகாதார அமைச்சர் பைசர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்றையதினம் பிரதி சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மாலிக் மஹிபால ஆகியோர் தலைமையில் மத்திய சுகாதார அமைச்சை சேர்ந்த அதிகாரிகள் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இந்த விஜயத்தின் பின்னர் வைத்தியசாலையில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் சுகாதார அமைச்சில் இருந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் 60 அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இன்று (நேற்று) யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளோம்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகள் நீண்டகாலமாக தீர்க்கப் படாத காரணத்தால் நாம் நேரடியாக விஜயம் செய்து பிரச்சினைகளை கேட்டறிந்து உடனுக்கடன் அதற்குரிய தீர்வுகள் கொடுக்கமுடியுமா? என்று ஆராய்ந்து இல்லாவிடின் கொழும்பு சென்று பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான ஒரு நடவடிக்கையே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

நாம் இதற்கு முன்பு குருநாகல் வைத்தியசால்லையில் இந்த நடமாடும் சேவையினை நடத்தி 80 வீதமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளது. மீதிகள் ஆவண பிரச்சினை காரணமாக தீர்க்க முடியாமல் உள்ளது. இன்று இங்கு வைத்தியசாலை ஊழியர்கள், அதிகாரிகள் தமது பல பிரச்சினைகளை முன்வைத்துள்ளனர். இயன்றளவிற்கு இவர்களது பிரச்சினைகளை தீரத்துக்கொள்ளலாம் என எதிர்பார்க்கிறோம்.

வைத்தியசாலையில் உள்ள நிபுணர்களுடன் பேசவுள்ளோம். அவர்களுடன் பேசி இப்பிரச்சினைக்குரிய தீர்வுத்திட்டத்தை முன்னெடுக்கமுடியும என நம்புகிறோம். தற்போது நவீனமயமான பரீட்சார்த்தமான நிலையமாக வைத்தியசாலை காணப்படுவதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்து பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையினை வழங்குவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதிகாரிகளது பிரச்சினைகளும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதி சுகாதார அமைச்சர் மேலும் உறுதியளித்தார். (இ-4)

# அச்சமும் பீதியும் நிறைந்த அவலநிலை



## உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் –யாழ். ஆயர் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

போர் இடம்பெற்ற காலத்தில் காணப்பட்ட அச்ச நிலையைவிட சமூக சீர்கேடுகள் நிகழ்கின்ற இன்றைய காலத்தில் அச்சமும் பீதியும் மக்களிடையே மிக உயர்வாகக் காணப்படுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இச்சமுதாய அவலநிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என யாழ்.ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் வலியுறுத்தியுள்ளார்.




யாழ்.ஆயர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாகக்குற்றச்செயல்கள் மிக மோசமாக அதிகளவில் அதிகரித்துக் கொண்டு செல்வதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

கொலை, களவு, வாள் வெட்டு, குழுச் சண்டைகள், போதைப் பொருள் பாவனை, கலாசார சீரழிவு போன்ற பல்வேறு விடயங்களால் யாழ். குடா நாட்டு மக்களின் வாழ்வியல் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றதா? என்கின்ற ஐயத்தை இச் சம்பவங்கள் தோற்றுவித் துள்ளன. இது தொடர்பில் விரைந்து செயற்பட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.எனவே இந்த விடயத்தில் புத்தி ஜீவிகள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், கல்வியாளர்கள், தொழில் சார் வல்லுநர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உரிய தரப்பினர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க முன்வருதல் அவசியமாகும்.

மேலும் குற்றச் செயல்களைத் தடுப்பது என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் விழிப்புணர்விலேயே தங்கியுள்ளது. அக்கம் பக்கத்தில்இடம்பெறும் போது வெறுமனே பார்த்துக் கொண்டிராது, இது தொடர்பில்தமது எதிர்ப்பினை வெளிக்காட்ட வேண்டிய பொறுப்பு சமூகத்திற்குள்ளது. சட்டம் ஒழுங்கை ,பாதுகாப்பவர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் இது விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதற்குத் தேவையான அழுத்தங்களை பிரயோகிக்க முன்வருதல் வேண்டும்.

ஒரு காலத்தில் கல்வியே எமது சொத்து எனவும் கல்வியால் மிகச் சிறந்த பிரதேசமாகவும் திகழ்ந்த யாழ்ப்பாணம் இன்று கல்வியில் கீழ் நிலைக்குச் சென்றமைக்கு இச் சமூக சீர்கேடுகளும் போதைப் பொருள் பாவனையுமே காரணமாய் அமைந்திருக்கும் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. போர் இடம்பெற்ற காலத்தில் காணப்பட்ட அச்ச நிலையை விட சமூகச்சீர்கேடுகள் நிகழ்கின்ற இன்றைய காலத்தில் அச்சமும் பீதியும் மக்களிடையே மிக உயர்வாக காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இச் சமுதாய அவல நிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு சமூக அக்கறை கொண்ட புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பெரியோர்கள் முன்வருதல் வேண்டும் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# பிரதி சுகாதார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம்





(படங்கள்:-உ.சாளின்)

பிரதி சுகாதார அமைச்சர் பைசர் ஹாசிம் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,விசேட வைத்திய நிபுணர் பாலித மகிபால ஆகியோர் உள்ளடங்கிய குழு நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சில் இருந்து 60 உயர் அதிகாரிகளுடன் இக்குழு விஜயம் செய்திருந்தது. நடமாடும் சேவையின் நிமித்தம் விஜயம் மேற்கொண்ட இக்குழு வைத்தியசாலையின் அனைத்து பிரிவுகளுக்கும் சென்று அங்குள்ள குறைபாடுகள், தேவைகள், பணி ஒழுங்குகள், சேவை விபரங்கள் போன்றவற்றை பார்வையிட்டதோடு உடனடியாக குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து தரவுகளை சேகரித்துக்கொண்டனர். இக்குழுவின் இரண்டாவது நடமாடும் சேவை குறைகளை நிவர்த்தி செய்தல் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சத்தியமூர்த்தி, பிரதி பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பவானந்தராஜா உட்பட பலரும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல்,இசை,நாடக அரங்கு-2016

**நேரம்- 4.30**
**08.05.2016 ஐந்தாம் நாள் ஞாயிறு**

தலைவர்
திரு.கு.பாலசண்முகன்
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
பிரதம விருந்தினர்
திரு.A.நடராசன்
(துணைத்தூதர், இந்திய துணைத் தூதரகம்)
பி.எஸ்.பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை
மங்கல விளக்கேற்றல்
திருமுறை:செல்வி ப.அனோஜா
ஆசியுரை:சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள்
(பிரதமகுரு-நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோவில்)
வாழ்த்துரை:திரு.சு.கணபதிப்பிள்ளை
சங்கீத பூசணம்,கலாவித்தகர்
(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்-இசைத்துறை)
(உபதலைவர்-வட இலங்கை சங்கீத சபை)
தலைமையுரை :தலைவர்
சைவவித்தியா விருத்திச் சங்க சைவ சிறுவர் இல்ல
மாணவிகள் வழங்கும் குழு நடனம்
நட்டுவாங்கம்:திருமதி.யாழினி ரதீஸ்வரன்
பாட்டு:செல்வி.ரா.அறிவழகி,
செல்வி. சி.கோகிலமதி
வயலின்:திருமதி.இந்துமதி தயாபரன்
மிருதங்கம்:திரு.கே.சிவகுமார்
"பரத கலாகேந்திரம்"
திருமதி.வசந்தி குஞ்சிபாதம் அவர்களின்
மாணவிகள் வழங்கும்
நாட்டியாஞ்சலி
சாரங்கம் இசைமன்றம் வழங்கும் மதுரகானம்
பாட்டு:திரு.ரஜீந்திரன் சுரகாகித்தியன்
வயலின்:திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்:திரு.நல்லை.ஜீ.கண்ணதாசன்
விரலிசை
கீதவாஹினி இசைக் கல்லூரியைச் சேர்ந்த
செல்வி. பிறிசில்லா ஜோஜ்
செல்வி. மதிவதனி குசேலராஜா
மிருதங்கம்:திரு.நல்லை.ஜீ.கண்ணதாசன்
"ஏழிசை" மிருதங்க நர்த்தனாலய மாணவிகள்
வழங்கும்
நாட்டிய அர்ப்பணம்
நட்டுவாங்கம்:திருமதி. பாலினி கண்ணதாஸ்
பாட்டு:திரு.தவநாதன் றொபேட்
வயலின்:திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்:திரு.நல்லை.ஜீ.கண்ணதாசன்
கலைஞர்கள் கௌரவிப்பு
பிரதம விருந்தினர் உரை
திருமறைக் கலாமன்றம் வழங்கும்
"குரு சபதம்"
(தென்மோடி நாட்டுக்கூத்து)
நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும்
வள்ளி திருமணம்(இசை நாடகம்)
நன்றி உரை
அனுசரணை
பெஷன் ஹவுஸ், கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(C-4527)



யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

**எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.**

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம்.
ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, நான்காம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்
**(021) 222 8117 / 077 900 8776**
(மு.ப. 9.00 - பி.ப. 1.00)
Sri Lanka Sumithrayo, Jaffna (Probationary Branch)
*(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*
*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*


## ஜே.வி.பியின் தலைமையில் மீளவும் மாற்றம்



(கொழும்பு)
ஜே.வி.பியின் தலைமையில் மீளவும் மாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் தலைமைத்துவம் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தற்போதைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் நடவடிக்கைகளுக்கு கட்சியின் அரசியல் பீட உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அநுரகுமாரவிற்கு எதிரான தரப்பினர் அவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துள்ளனர். கட்சித் தலைமையில் உடனடி மாற்றம் செய்யப்பட வேண்டுமென அந்த தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, புதிய தலைமைப் பதவிக்காக தொழிற்சங்கத் தலைவரான கே.டி. லால்காந்த மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கட்சியின் உள்ளகப் பிரச்சினைக்கு உறுப்பினர்கள் தீர்வு காண அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் அவசரமாக அயர்லாந்துக்கு விஜயம் செய்தார் என கட்சி உள் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சித் தலைமை குறித்து அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் தலவத்து கொட பிரதேச ஹோட்டல் ஒன்றில் வைத்து கட்சியின் சில உறுப்பினர்களுடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

எவ்வாறெனினும் கட்சித் தலைமைப் பதவி தொடர்பில் கட்சியின் அரசியல் சபை இது வரையில் உறுதியான தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லை என கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)


இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின்
உற்பத்தியான விற்பனை கிளையொன்றை
நடத்திக்கொண்டு செல்வதற்கான

## யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட்ட பிரதேசத்தினுள் கட்டடம் ஒன்று தேவையாகவுள்ளது.

ஆயுர்வேத மருந்து உற்பத்தியின் முன்னோடியான ஒரேயொரு அரச நிறுவனமான இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் "உற்பத்தி விற்பனை கிளை" நடத்திக் கொண்டு செல்வதற்கான யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 1000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடம் தேவையாகவுள்ளது.

அதற்கு விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் கட்டடத்தின் சகல விபரங்களும் குறிப்பிடப்பட்டு 10 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும். (கடித உறையின் இடதுமேல் மூலையில் "கட்டடம் வழங்கல்- யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசம்") எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம்,
இல. 94, பழைய கொட்டாவ வீதி,
நாவின்ன- மகரகம.
தொலைபேசி இலக்கம்: 011 285 1610
தொலைநகல்: 011 284 4357
மின் அஞ்சல்: ayurvedicdrugs@.sltnet.lk
வெப்தளம்: www.ayurvediccorp.gov.lk

(இ-4546)



### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:15<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4379 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 58<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/5281 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: AATலண்டன் PR<br>தொ.இ: B/4380 | பிறப்பு: 1989NONRC<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5285 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 31<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4381 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5286 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:B.Tec/பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4400 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 49<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/5287 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- [illegible], 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]



# செல்வம் அருளும் அட்ஷய திருதியை

## 09-05-2016



சித்திரை மாதத்தில் வளர்பிறை காலத்தில் வரும் திருதியை, "அட்ஷய திருதி யை" எனப்படுகிறது. "அட ஷயம்" என்றால் வளர்வது என்று பொருள். அட்ஷய திருதியை அன்று நாம் என்ன பொருள் வாங்கினா லும் அது பல மடங்கு வள ரும். அதனால் அட்சய திரு தியை அள்ள, அள்ள குறை யாமல் செல் வத்தை அள்ளி தரும் சிறப் புமிக்க திருநாள் என்று போற்றப்படுகிறது.

வனவாச காலத்தில், சூரிய பகவானை வேண்டி தர்மர் அட்ஷய பாத்திரம் பெற்றதும், மணிமேகலை அட்சய பாத்திரம் பெற்ற தும், பரசுராமர் அவதரித்த தின மும் இதே அட்ஷய திருதி யை தினத்தில்தான் என்று புரா ணங்கள் எடுத்துரைக் கின் றன. அன்னபூரணி தாயா ரிடம் இருந்து சிவ பெரு மான் தனது பிச்சைப் பாத் திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்று, பிரம் மஹஸ்தி தோஷத்தில் இரு நது விடுபட்டதும் இந்த நாளில தான்.

தங்கம் மட்டுமன்றி உப்பு, அரிசி, ஆடைகள், விலை உயர்ந்த பொருட் கள் என்ன வாங்கினாலும் மென்மேலும் பெருகும் என் பது ஐதீகம். மேலும் அன்று புதிதாக தொழில் தொடங் குவதும், பூமிபூஜை செய் வதும் நல்ல பலனைத் தரும். அட்சய திருதியை அன்று ஏழைகளுக்கு தானம செய்தால், அது பல மடங்கு புண்ணியத்தை தரும் என்று கூறப்படுகிறது. இந்த நாளில் செய்யப்படும் பிதுர் தர்ப் பணம், பல தலைமுறைக்கு முன் வாழ்ந்த மூதாதையர் களுக்கும் சென்றடையுமாம். அதே நேரத்தில் பிதுர் தர்ப் பணம் செய்பவர்களுக்கு, வறுமை நீங்கி வளமான வாழ்வு அமையும்.

### விரதம் இருக்கும் முறை

அட்ஷய திருதியை தின த்தில் அதிகாலை எழுந்து நீராடி, பூஜை அறையில் கோலமிட வேண்டும். லட் சுமி நாராயணன், சிவசக்தி, அன்னபூரணி, குபேரன் படங்கள் வைத்து, சந்த னம், குங்குமம் இட்டு மாலையிட வேண்டும். அந் தப் படங்களின் முன்பு குத்து விளக்கு, காமாட்சி விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். பூஜை அறையில் போடப் பட்ட கோலத்தின் மீது பலகை வைத்து, அதன் மீதும் கோலம் போட வேண்டும். ஒரு செம்பில் அரிசி, மஞ் சள், நாணயம், சிறிய நகை களை போட வேண்டும். பின்னர் அந்த செம்பில் நீர் நிரப்பி, அதற்கு சந்தனம், குங்குமம் இட வேண்டும். பின்னர் செம்பின் மேல் தேங்காய் வைத்து, அதைச் சுற்றிலும் மாவிலையை வைத்து கலசமாக தயார் செய்து பலகையில் வைக்க வேண்டும்.

பிறகு கும்பத்தின் முன்பு நுனி வாழை இலையில் அரிசியை பரப்பி, அதன் மீது விளக்கு ஏற்றிவைக்க வேண்டும். அதன் அருகில் மஞ்சள் பிள்ளையார் பிடி த்து, அதற்கு குங்குமம் இட்டு பூ போட வேண்டும். மேலும் பொன் மற்றும் புதியதாக வாங்கிய பொருட்களை கலசத்திற்கு அருகில் வைதது தீபாராதனை காட்டி வழிபட வேண்டும். இவ்வாறு செய்வ தால் அளவற்ற பலன் கிடை க்கும் என்பது ஐதீகம்.

அட்ஷய திருதியை நாளில் குலதெய்வ வழிபாடு செய் வதும் முக்கியமானது. தயிர் சாதம் தானம் செய்தால் ஆயுள் கூடும். இனிப்பு பொருள தானம் செய்தால் திரும ணத் தடை நீங்கும். உணவு தானி யம் அளித்தால் அகால மர ணத்தைத் தடுக்கலாம். கால் நடைகளை தானமாக வழ ங்கினால், வாழ்வு வளம் பெறும். மூதாதையர்களு க்கு தர்ப்பணம் செய்தால், பாவ விமோசனம் கிடை க்கும். ஏழைகளுக்கு தயிர் சாதம் தருவது, 11 தலை முறைக்கு குறையில்லா அன் பை கிடைக்கச் செய்யும்.

### அட்ஷய திருதியையில் நடந்த அற்புதங்கள்

❖ கௌரவர்களுடன் சூதாடியதன் காரணமாக தனது நாடு, சொத்து, தம்பி கள் அனைவரையும் தர்மர் இழந்தார். பின்னர் தனது மனைவி திரௌபதியையும் பந்தயப் பொருளாக வைத்து தோற்றுப்போனார். இதை யடுத்து திரௌபதியை சபை க்கு இழுத்து வரச் சொன்ன துரியோதனன், அவளை துகிலுரிக்க உத்தரவிட்டான். அதன்படி துச்சாதனன் துகி லுரிக்க முற்பட்டான். திரௌ பதி அபயம் வேண்டி சபை யோரிடம் வேண்டினாள். ஆனால் அந்த சபையில் பீஷ்மர், துரோணாச்சாரியார் போன்றோர் இருந்தும் அவ ளுக்கு உதவ முன்வரவி ல்லை. பின்னர் கண்ணனை நினைத்து கைகூப்பி வேண் டினாள்.

அப்போது கிருஷ்ணர் தன் கையை உயர்த்தி, "அட்ஷய" என்றார். அவரது கையில் இருந்து புறப்பட்ட ஆடை, திரௌபதியின் உடலை சுற்றி வளர்ந்து கொண்டே இருந்தது. துச்சாதனன், திரௌபதியின் புட வையை இழுத்து, இழுத்து கைசோர் ந்து மயங்கி விழுந்துவிட் டான். திரௌபதியின் மான த்தை கிருஷ்ண பகவான் காப்பாற்றிய தினம், "அடஷய திருதியை" ஆகும்.

❖ கிருஷ்ணனின் பால்ய நண்பர் குசேலன். இவர் வறுமையில் வாடிய நிலை யில், கிருஷ்ணரை சந்திப்ப தற்காகச் சென்றார். அவரை கண்ட மாத்திரத்தில் ஓடோடி வந்து வரவேற்ற கிருஷ் ணர், குசேலர் கொண்டு சென்ற அவலில் ஒரு பிடியை எடுத்து வாயில் போட்டு கொண்டு "அடஷயம்" என உச்சரித்தார். மறுவிநாடி குசேலன் வீட்டில் செல்வம் குவிந்தது. குழந் தைகளுக்கு நல்ல உணவு, ஆடைகள், ஆபரணங்கள் கிடைத்தன. குடிசை வீடு, பெரிய பங்களாவாக மாறி யது. இப்படி குசேலர் எல்லா செல்வங்களையும் பெற்ற திருநாள் "அடஷய திருதியை" தினமாகும்.

❖ நாட்டை இழந்த பாண் டவர்கள், வனவாசத் தின் போது சூரியனை வேண்டி அட்சய பாத்திரம் ஒன்றை பெற்றனர். அந்தப் பாத்திரத் தில் இருந்து உணவைப் பெற்று பாத்திரத்தை கழுவி விட்டால் மீண்டும் உணவு பெற முடியாது. மறுநாள் தான் அதில் இருந்து உண வைப் பெற முடியும்.

இந்த நிலையில் பாண்ட வர்களை துன்புறுத்த துரி யோதனன் திட்டமிட்டான். இதற்காக அடிக்கடி கோபம் கொள்ளும் துர்வாச முனி வரை அழைத்து உபசரித்து பணிவிடைகள் செய்தான். அவர் மகிழ்ந்து வேண்டிய வரம் கேட்கச் சொல்ல, "காட் டில் உள்ள எங்கள் சகோதர ர்களான பாண்டவர்களுக் கும் அருள்புரிய வேண்டும்" என கேட்டுக்கொண்டான். அவ்வாறே செய்வதாக கூறி துருவாசர் காட்டிற்கு சென்று பாண்டவர்களை சந்தித்தார்.

அப்போது பாண்டவர் கள் உணவருந்தி முடித்து விட்டு அட்ஷய பாத்திரத்தை கவிழ்த்து விட்டிருந்தனர். இதனால் கலக்கமடைந்த பாண்டவர்கள் முனிவரி டம், "ஆற்றுக்கு சென்று நீராடி விட்டு வாருங்கள" எனக் கூறினர்.

தங்கள் தர்ம சங்கட மான நிலையை நினை த்து திரௌபதி, கண்ணனை வேண்டினாள். பகவான் அங்கு தோன்றினார். அட்சய பாத்தி ரத்தை கொண்டுவரும்படி கூற, அதில் ஒரே ஒரு பரு க்கை சாதமும், கீரையும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை பகவான் எடுத்து வாயில் போட்டு வயிற்றை "அடஷய" எனக்கூறி தடவினார். அந்த நேரத்தில் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த துருவாச முனி வருக்கும், அவரது சீடர்க ளுக்கும் உணவை உண்ட திருப்தி ஏற்பட்டது. அவர் களால் இனி சாப்பிட முடியாது என்ற நிலையில் பாண்ட வர்கள் இல்லத்திற்கு வரா மல் திரும்பி சென்றுவிட் டனர். இவ்வாறு கண்ணன், பாண்டவர்களுக்கு அருள் புரிந்த தினமும் அட்ஷய திருதியை என்று புராண ங்கள் தெரிவிக்கின்றன.

### தண்ணீர் தானம

அடஷய திருதியை அன்று தண்ணீர் தானம் செய்வது சிறப்பானதாக கருதப்படு கிறது. இதற்கு ஒரு கதை கூறப்படுகிறது.

ஒருமுறை பாஞ்சாலை நாடு கடும் வறட்சியில் சிக்கித் தவித்தது. அப்போது பூரி யசஸ்என்ற மன்னன்நாட்டை ஆட்சி செய்து வந்தான். திடீரென்று அவனது நாட்டை, எதிரிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

மன்னன் எதிரிகளின் கையில் சிக்காமல், தன் மனைவியுடன் காட்டுக்குள் தப்பி ஓடினான். அங்கு சில முனிவர்களை சந்தித்தான். அவர்களிடம், "என்னுடைய இந்த நிலைக்கு என்ன கார ணம்?" என்று கேட்டான். பூர்வ ஜென்மத்தில் நீ செய்த பாவங்கள் காரணமாக உனக்கு இந்த நிலை ஏற் பட்டிருக்கிறது. அதே போல் அட்ஷய திருயை தினத்தில் நீ செய்த தண்ணீர் தானம் தான், உன்னை மன்னராக ஆக்கியிருக்கிறது. இருப் பினும் நீ செய்த பாவங் களின் பலனை அனுபவிக்க வேண்டும்" என்றனர்.

இதையடுத்து அந்த மன் னன் காட்டில் வசித்தபடி, நாராயணரை நினைத்து தியானம் செய்து வந்தான். மேலும் அட்ஷய திருதியை நாளில், வெயிலில் வருப வர்களுக்கு நிழல் கொடுத் தும், குடிநீர் தானம் செய்தும் தொண்டு செய்து வந்தான்.

மன்னனின் தொணடைக கண்டு ஸ்ரீமன் நாராயணர் அவனுக்குக் காட்சியளித் தார். மன்னன் இறைவனி டம், "சுவாமி! நான் அடுத்த பிறவியில் புழுவாய் பிறந் தாலும், உன்னிடம் மாறாத பக்தி கொண்டவனாக இரு க்க வேண்டும்" என்றான். அதற்கு இறைவனும் அவன எண்ணப்படியே வரம் கொடு த்தார்.

பூரியசஸ் மன்னனுக்கு, மகாவிஷ்ணு தரிசனம் கொடுத்த நாள் அட்ஷய திரு தியை ஆகும். அவன் செய்த தானத்தின் பலனாக, சில நாட்களில் உறவினர்கள் சிலர் உதவியுடன், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினான். அதன்பிறகு நல்ல முறையில் ஆட்சி செலுத்தினான்.

## மகிந்தவுக்கு பாதுகாப்பு வழங்கிய

# ராணுவத்தினருக்கு எதிராக பாரியளவு குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்த ராணுவ வீரர்களுக்கு எதிராக பாரியளவில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.**

மகிந்த ராஜபக்ஷவின் பாது காப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டி ருந்த ஒரு தொகுதி ராணுவ உத்தியோகத்தாகள் அண்மையில், அந்தக் கடமைகளிலிருந்து விடு விக்கப்பட்டு ராணுவத் தலைமை யகத்திற்கு அழைக்கப்பட்டிருந்த னர்.

இவ்வாறு மீள அழைக்கப்பட்ட வர்களில் அதிகமானவர்ளுக்கு எதி ராக பாரியளவிலான குற்றச்சாட்டுக் களும் முறைப்பாடுகளும் செய்யப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது புலனாய்வுப் பிரி வினர், நிதிக் குற்றவியல் விசா ரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவு மற்றும் ராணுவத்தினால் மேற்கொள்ளப் பட்டு வரும் பல்வேறு விசாரணை களில் இந்த படைவீரர்களின் பெயர்கள் தொடர்புபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரியளவிலான குற்றச் செயல் களுடன் இந்த ராணுவ உத்தி யோகத்தர்களுக்கு தொடர்பு இருப் பதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த ராணுவ வீரர்கள் ராணுவ ஒழுக்க விதிகளை மீறியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்ட போதி லும் இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ராணுவ சம்பளத்தின் ஊடாக ஈட்ட முடியாத அளவிற்கு சில படை வீரர்கள் சொத்துக்களை குவித் துள்ளனர்.

சொத்து குவிப்பு குறித்து இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசா ரணைப் பிரிவினர் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய காலத்தில் ராணு வத் தளபதிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை மதிக்காது செயற்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை, முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவின் பாது காப்புப் பிரிவிலிருந்து வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்ட இராணுவ உத்தியோகத்தர்கள், மகிந்தவின் காலில் வீழ்ந்து மண்டியிட்டு ஆசீர் வாதம் பெற்றுக் கொண்டதனை யும், மகிந்த தலையைத் தடவி அவர்களுக்கு ஆசி வழங்கும் காட்சிகள் ஊடகங்களில் வெளி யிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. (இ-5)



## மகிந்தானந்த, நாமல் ஆகியோரிடம் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

### அடுத்த வாரம் நடைபெறலாம்



முன்னாள் அமைச்சர் மகிந்தா னந்த அலுத்கமகே மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரிடம் பாரிய நிதி மோசடி கள் குறித்து ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணை நடத்தவுள்ளது.

நாவலப்பிட்டி நகரில் அரசாங்க காணியொன்றை பலவந்தமாக கையகப்படுத்தி அதில் நான்கு மாடி கட்டடமொன்றை அமைத்த சம்ப வம் தொடர்பில் மகிந்தானந்தவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

இது தொடர்பில் அடுத்த வார மளவில் மகிந்தானந்தவிடம் விசா ரணை நடத்தப்படவுள்ளது.

இலங்கை புகையிரத திணைக் களத்திற்கு சொந்தமான 79 பேர் சஸ் காணியை பலவந்தமாக கைப் பற்றி அந்தக் காணியில் நான்கு மாடி கட்டடம் அமைத்து, அந்தக் கட்டடத்தை அரசாங்க நிறுவன மொனறுக்கு ஒரு இலட்ச ரூபா வாடகை அடிப்படையில் மகிந்தான ந்த அலுத்கமகே வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வரு கின்ற நிலையில், ஏற்கனவே வரி ஏய்ப்பிலும், நிதிச் சலவையிலும் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி அவரி டம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உள்ளக விமான சேவை விமானங்களை துஷ்பிர யோகம் செய்ததாக நாமல் ராஜபகஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உள்ளக விமானப் பயணங் களுக்காக ஐந்து கோடி ரூபாவிற்கு மேல் நாமல் ராஜபக்ஷ செலவிட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2013 முதல் 2015ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இவ்வாறு விமானங்களைப் பயன்படுத்தியுள்ள தாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக அங்குரார்ப்பண நிகழ்விற்கான கலாசார நிகழ்ச்சிகளுக்காக பெருந் தொகை பணம் செலவிட்டமை குறித்தும் நாமல் ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

நாளை மறுதினம் 10ஆம் திகதி பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன் னிலையாகுமாறு நாமல் ராஜபக்ஷ விற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### ஆசிரியருக்கு அன்பளிப்பு

மாவீரன் அலெக்ஸாண்டரின் சின்னஞ்சிறு பருவம். அவன் லியோனிடாஸ் என்பவனிடம் கல்வி பயின்று வந்தான்.

ஒருநாள் பிரார்த்தனையின் போது அலெக்ஸாண்டர் சாம் பிராணிப் பொடியை அள்ளியள்ளித் தீயிலிட்டுப் புகைத்துக் கொண்டி ருந்தான். எங்கும் ஒரே நறுமணப் புகையின் சூழல். ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்க முடியாத அளவுக்குப் புகை மண்டியிருந்தது.

ஆசிரியர் லியோனிடாஸ் அவனைப் பார்த்து, அலெக்ஸாண்டர், சாம்பிராணி இப்போது நம்மிடம் குறைவாகவே உள்ளது. மட்டாகவே இதைச் செலவு செய்ய வேண்டும். இத்தகைய பொருட்கள் மிகுந்த நாடுகளை நீ கைப் பற்றும் போது இவ்வாறு மனம் போல் புகைத்துக் கொள்ளலாம் என்றுரைத்தார்.

பிற்காலம் அலெக்ஸாண்டர் சிரியா நாட்டைக் கைப்பற்றினான். இதில் ஆக்கிரமிப்புப் பொருட்கள் நிறைய வந்தன. இவற்றுடன் சாம்பிராணியும் குங்குலியமும் சேர்ந்திருந்தன.

இவற்றைக் கண்ட அலெக்ஸாண்டருக்கு தன் ஆசிரியர் லியோனிடாஸின் நினைவு வந்தது. சின்னஞ்சிறு பருவத்திய அந் நிகழ்ச்சி அவன் அகக் கண்ணில் துலக்கமிட்டது. அவர் சொன்ன மொழிகள் அவன் செவிகளில் ஒலித்தன.

அலெக்ஸாண்டர் தன் ஆசிரியருக்கு சாம்பிராணியும் குங்குலிய மும் ஏராள மாக அனுப்பி வைத்தான். அத்துடன் ஒரு கடிதமும் அனுப்பியிருந்தான். அதில் அவன் ஆசிரியர் அவர்களுக்கு, தங்க ளுக்குச் சாம்பிராணியும் குங்குலியமும் பெரும் அளவுக்கு அனுப்பி யுள்ளேன். இனி தாங்கள் ஆண்டவனிடம் சிக்கனம் காட்ட வேண்டா மல்லவா! என்று குறிப்பிட்டிருந்தான்.

கவிஞர் தே.ப.பெருமாள்

## மகிந்தவுக்கு அடுத்தவாரம் வீடு கையளிக்கப்படுமாம்



தேசிய அரசாங்கத்தினால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லம் அடுத்த வாரமளவில் மகிந்தவிடம் கையளிக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்காக விசேடமாக வழங் கப்படவுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அந்த இல்லம் மகிந்தவிடம் ஒப் படைக்கப்படவுள்ளதாகவும் கூறப் படுகின்றது.

குறித்த இல்லத்தின் நிர்மாணப் பணிகளை கடற்படை பொறியிய லாளர் பிரிவு மேற்கொண்டுள்ளது. கடற்படையைச் சேர்ந்த 20 வீரர் கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 70 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 100 | 80 |
| தக்காளி | 180 | 140 | 140 | 120 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 45 | 45 | 60 | 80 | 50 |
| கோவா | 100 | 70 | 70 | 80 | 120 | 90 |
| கரட் | 120 | 70 | 70 | 80 | 120 | 80 |
| பூசணி | 40 | 15 | 15 | 30 | 40 | 30 |
| புடோல் | 80 | 30 | 30 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 25 | 25 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 120 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 65 | 65 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 40 | 40 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | — | — | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 70 | 70 | 100 | 80 | 160 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 140 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 120 | 110 | 110 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 150 | 150 | 200 | 250 |
| போஞ்சி | 300 | 100 | 100 | 200 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 60 | — | 80 | 80 |
| கீரை – 1 பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 500 | 350 | 350 | 400 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 15-30 | 15-30 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 110 | 110 | 150 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 450 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 40 | 40 | — | 120 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 20 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | — | — | — | — | — |

# உலக செஞ்சிலுவை-செம்பிறை தினம்

இன்று மே 08ஆம் திகதி. உலக செஞ்சிலுவை- செம்பிறை (World Red Cross and Red Crescent Day) தினமாகும். உலகில் யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிப்படைவோருக்கு மனிதாபிமான நோக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக செஞ்சிலுவைச் சங்கம், மறறும் செம்பிறைச்சங்கம் ஆகியன சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன. செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன பெயரில் ஒரு வித்தியாசத்தைக் காட்டி நின்றாலும் கூட, அடிப்படையில இரண்டு அமைப்புகளும் ஒரே நோககத்தை முன்னெடுப்பவைகளே. குறிபபாக அரபுலக நாடுகளில் சிலுவை எனும் குறியீட்டுக்கும், வார்த்தை பபதத்திற்கும் பதிலாக பிறை எனும் குறியீடும், வார்த்தைபபதமும் பயன்படுத்தப்படுகின்றது. தற்போது உலக நாடுகளில் 178 தேசிய கிளைகளினூடாக இந்த அமைப்புகள் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகினறமை குறிப்பிடத்தககது.

உலக செஞ்சிலுவை - செம்பிறை தினத்தின் பிரதான கருப்பொருள் யுத்தங்களினாலும் அனர்த்தங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி உதவி செய்வதும் முரண்பாடுகள் மிக்க தரப்பினரிடையே நடுநிலை வகித்து சமாதானததிற்கு உதவுவது மாகும். இச்சஙகத்தின் ஸ்தாபகரான ஜீன் ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) பிறந்த தினமான மே மாதம் 8ஆம் திகதி அம் மனிதாபிமானமிக்க மனிதப் புனிதரைக் கௌரவிக்க இத்தினத்தை உலக செஞசிலுவைச் சங்க தினமாக உலகத்தோர் அனுஷ்டிக்கின்றனர். ஜெனீவாவில் பக்தியும் கருணையும் குடிகொண்டிருந்த குடும்பமொன்றில் 1828 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) பிறந்தார். தனது பெறறோரிடமிருந்து கற்ற அனுபவங்கள் காரணமாக சிறுபராயத்திலிருநதே சமூக சேவைகளில் ஆர்வமிக்கவராக விளங்கினார். சிறிய பராயததிலே அயலவர் படும் இன்னல் கண்டு வேதனையுறறார். சிறைக் கைதிகள் அனுபவிக்கும் கடும் தண டனைகளுக்காக மனம் நொந்தார். சிறைக் கூடங்களுககுச் சென்று கைதிகளுக்கு ஆறுதல கூறி வந்தார். பின்னர் வங்கித் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கையில் முன்னேறினார்.

1859 ஜூன் 25இல் அவர் வட இத்தாலிக்குச் சென்றபோது அங்கு சோல்பரினோ யுத்தம் நடைபெற்றிருந்தது. அவுஸ்திரேலிய, பிரான்ஸிய, இத்தாலிய படைகளின் 3 லட்சம் பேர 16 மணித்தியாலயங்கள் போரிட்டதன் விளைவாக 40,000 பேர் போர்க்களத்தில் குற்றுயிராய்க் கிடந்தனர். இவ்வாறு குற்றுயிராய்க் கிடந்தவர்களிடத்தே எத்தரப்பினரும் அக்கறை காட்டவில்லை. இந்தக் காட்சி டியூனண்ட்டின் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. ஊரவர் உதவியுடன் காயப்பட்டோருக்கு எத்தகைய பேதங்களுமின்றி சிகிச்சையளிததார்.

பகை நிரம்பிய அச்சூழலில் இவரது பணி புரட்சிகரமானதாக அமைந்தது. பின்பு ஜெனீவா திரும்பிய டியூனண்ட் "சோல்பரினோ நினைவுகள்" என்ற நூலை எழுதினார். இந்நூலில் அவர் மனித சமுதாயத்திற்கு உதவக்கூடிய அறிவுரைகளை வழங்கினார். இந் நிகழ்வினையடுத்து நாடு நாடாகச் சென்று யுத்தகளப் பணிகள் பற்றிய அவசியத்தை எடுத்துரைத்தார். பிற்காலத்தில் வறுமையின் பிடியில் அவர் சிக்கினாலும் ஈற்றில் நோபல் பரிசுக்குரியவரானார். 1910 ஒக்டோபர் 30 இல் உயிர் நீத்த ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) அவர்களின் பிறந்த நாளான (மே 8, 1828) இந்நாள் 1948ஆம் ஆணடிலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்பட்டது 1863 இல் போர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொண்டர்களை இனங் காட்டுவதற்காக வெள்ளைப பின்னணியில் செஞ்சிலுவைச் சின்னம் தெரிவு செய்யப்பட டது. 1864 இல் ஐவர் அடங்கிய குழுவொன்றினால் ஜென்வாவில் மாநாடொன்று இடம் பெற்றது. இம்மகாநாட்டில் ஏற்றுககொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களே ஜெனீவா சாசனத்தில் ஏற்றுக்கொளளப்பட்டன.

ஒவ்வொரு மனிதனையும் அவரின் பெருந்தன்மைகளையும் கௌரவிக்கவே ஜெனீவா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதில் தரையில் காயமடைந்த அல்லது நோய் வாய்பபட்ட அல்லது கப்பல் உடைந்ததால பாதிக்கப்பட்ட ஆயுதந்தரித்தோரைக் காப்பாற்றல்,யுத்தக் கைதிகளைப் பாதுகாத்தல்,பொதுமக்களைக் காததல், சர்வதேச ஆயுத மோதல்களினாலும உள்நாட்டில் ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டோரை பாதுகாத்தல் என்பன ஜெனீவா சாசனத்தில் காணப்படுகிறது.

முதலாம் உலகப் போரின் பின்னர சமாதானத்துக்கான தேவை உணரப்பட்டது. செக்கோஸ்லவாக்கியாவில சமாதானத்தை வலியுறுத்தி 1922 இல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்ததுக்கான வேணடுகோள் விடப்பட்டது. இதுவே பினனர் செஞ்சிலுவை மறறும் செமபிறை நாளாக அனுசரிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம். 1934 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம் பெற்ற செஞ்சிலுவைச சங்கத்தினரின 15வது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருப்பினும் 1948 ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரமபித்தவரான டியூனணட் அவர்களின் நினைவாக ஆண்டுதோறும கொண்டாடும் தீர்மானம் எடுக்கபபட்டது. முதலில் இந்நாள் செஞ்சிலுவைச் சங்க நாள் என்றே அழைக்கப்பட்டது. எனினும் பினனர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984ல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் என அழைக்கப்படுகிறது. செஞ்சிலுவை, செம்பிறை இயககம் உலகிலேயே மிக விரிவாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களில் ஒன்றாகும். செஞ்சிலுவை கிறிஸ்தவ சமயத்தைப் பிரதிபலிப்பதுபோல அமைந்துள்ளமையினால் இஸ்லாமிய நாடுகளில் அதன் சின்னம் செம்பிறையாகக் கொள்ளப்பட்டது.

ஆரம்பத்தில் யுத்தங்களினால் காயமுற்ற மக்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பின் செயற்பாடுகள் தற்போது விரிவடைந்துள்ளன. செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் ஏழு பிரதான கோட்பாடுகளின் அடிப்படையில் செயறபட்டு வருகின்றன. 01. மனிதாபிமானம் 02. பாரபட்சமின்மை 03. நடுநிலைமை 04. சுதந்திரத் தன்மை 05. தொண்டு புரிதல் 06. ஒற்றுமை 07. ச்ர்வ வியாபகத் தன்மை என்பனவே அவை. யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதப்புறும்மக்களுக்கு இன,மத மொழி பிரதேச பேதமின்றி இவவியக்கம் அன்புக்கரம் நீட்டி உதவுகின்றது. முரண்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் எத்தரப்பினரையும் சாராது, அரசியல் வேறுபாடுகளில் அக்கறை காட்டாது, நடுநிலைமையுடனும், சுதந்திரததுடனும் இது செயற்பட்டு வருகினறது. அதேவேளை அந்தந்த நாடுகளின் சட்டத்துக்கு உட்பட்டே கருமமாற்றுகிறது. 1936இல் இலங்கை மக்களைத தாக்கிய மலேரியா மற்றும் கொள்ளை நோய்களைக் கட்டுப்படுத்தவென இலங்கை அரசுக்கு உதவி புரியும வண்ணம் பிரித்தானிய செஞசிலுவைச் சங்கத்தின் மத்திய கிளையொன்று இலங்கையில் அமைக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இக்கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமென மாறியது. 1952 இல் சர்வதேச செஞ்சிலுவைச சங்கத்தில் இலங்கை இணைந்து கொண்டது. ஆரம்பத்தில் இரத்த தானம், முதற்சிகிச்சை முதலுதவிக்கான பயிற்சி வழங்கல், நடமாடும் சுகாதார சேவை வழங்கல, விபதுக்குள்ளானவர்களுக்கு உணவு உடை, உறையுள் என்ப வற்றை வழங்கல், வரட்சி, வெள்ளப பெருக்கு, யுத்தம்,குண்டு வெடிப்பு, வரட சிக்கு முகம் கொடுப்பதற்கான பயிற்சிகள், போன்ற சேவைகளை வழங்கியது. இலங்கையில் வடககுப் பிரதேசத்தில் யுத்தத்தில் பாதிக்கப பட்டோருக்கு உதவுவதில் இது முன்னின்று செயறபடுகின்றது. போரின் நிமித்தம் சிறைபட்டிருக்கும கைதிகளைப் பார்வையிடல், தடுப்புக காவல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடல், எதிர்த்



தரப்பினரின தடுப்புக்காவலிலுள்ள இராணுவ ததினரையும், பொதுமக்களையும் பார்வையிடல், காணாமற்போகும் நபர்களைக் கண்டுபிடிக்கும் விடயத்தில் அக்கறை காட்டுதல், யுத்தப் பிரதேசத்திலுள்ளவர்களை அழைத்து வருதல், குடும்பச் செய்திகளைப பரிமாறுதல் போன்றவற்றுடன் இரு தரப்பினரிடையே சமாதானததுக்கான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள் எடுத்துச் செல்லல், நோயாளிகளுக்குப் போக்குவரத்து வசதியளித்தல், தொழில் மீட்சிக்கு உதவுதல், மருத்துவ உதவி வழங்கல்,தற்காலிக கூடாரஙகளை அமைத்தல் போன்ற சமூகப பணிகளிலும் ஈடுபடுகிறது.

சர்வ தேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் அதன் அனுபவத்தையும் சர்வதேச அமைப்புக்களின் அனுபவமிக்க தொண்டர்களையும் இலங் கையில் நீண்டகால சேவையில ஈடு படுத்தி வருகினறது. எனினும் பய ங்கரவாத நடவடிக்கைகளினால இத் தொண்டர்கள் பாதிப்புக்குள்ளாகிய மையும் நோக்கத்தக்கது. செஞ் சிலுவைச் சங்கத்தினால் இலங கைக்கு வழங்கப்படும் சேவைகள, அண்மைக்காலத்தில் சுனாமி அனர்த்தத்தின் போது மேற் கொண்ட நடவடிக்கைகள்,தற்போ தைய யுத்த நிலையில் மேற் கொண்டு வரும் சேவைகள் எமக்கு கண்கூடான உதாரணங்களாகும்.




- 1450 - இங்கிலாந்தில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக் கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம பெற்றது.
- 1821 - கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1886 - ஜோன் பெம்பர்ட்டன் கொக்கா கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானதைக் கண்டுபிடித்தார்.
- 1902 - கரிபியன், மார்டீனிக் தீவில் பெலே எரிமலை வெடித்ததில் 30,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1914 - பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 - மகாத்மா காந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21-நாட்கள் உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1945 - அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடதில் நூற்றுக்காணக்கான அல்ஜீரியர்கள் பிரெஞ்சுப் படைகளினால் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தனர்.
- 1984 - லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிக்கப்போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 2007 - புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1828 - ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலு வைச சங்கத்தை நிறுவியவர். (இ. 1910)
- 1916 - சுவாமி சின்மயானந்தா, இந்திய ஆன்மிகவாதி. (இ. 1993)

**இறப்புகள**


- 1947 - ரொபேர்ட் ஹோர்விட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1951 - மு. நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

**சிறப்பு நாள்**

- உலக செஞ்சிலுவை நாள்
- ஐரோப்பா - வெற்றி நாள். (1945)
- தென் கொரியா - பெற்றோர் நாள்

## சுவாமிசின்மயானந்தா

### இந்தியஆன்மிகவாதி.



சுவாமி சின்மாயானந்தா ஒரு இந்திய ஆன்மீகவாதி. சின்மயா மிஷன் என்ற அமைப்பைத் தொடங்கி அதன் மூலம் உலகெங்கும் ஆன்மீக வேதாந்த கருத்துக்களை பரப்பியவர்.சின்மயானந்தா இந்தியாவின் கேரளா மாநிலத்தில் எர்ணாகுளம் என்ற இடத்தில் "பூதம்பள்ளி" என்ற பெயரைக் கொண்ட ஓர் இந்துக் குடும்பத்தில் இவர் பிறந்தார். இவரது இயற பெயர் பாலகிருஷ்ண மேனன் என்பதாகும். லக்னோ பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை முடித்து வெளியேறியவர் ஊடகவியல் துறையில் நுழைந்து இந்திய அரசியல், பொருளாதார மற்றும் சமூகவியலில் பணிகளை ஆற்ற முனை ந்தார். இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். பின்னர் "நாஷ்னால் ஹெரால்ட்" என்ற பத்திரிகையில் பணி யாற்றினார். ரிசி கேஷம் சென்று சுவாமி சிவானந்தரைச் சந்தித்தார். அன்றிலிருந்து அவர் இந்து சமய ஆன்மீகத்துறையில் அதிக அக்கறை கொண்டார.சுவாமி சிவானந்தரினால் 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 சிவராத்திரி நாளன்று பாலகிருஷ்ண மேனன் சந்நியாச தீட்சை பெற்றுக் கொண்டு "சுவாமி சின்மயானந்தா" என்ற பெயரையும் பெற்றார். இமயமலையில் சுவாமி தபோவன மகாராஜ் என்பவரிடம் 8 ஆண்டுகள் இந்து தத்துவத்தைப் பயின்றார். சுவாமிகளின் ஆசியுடன் வேதாந்தத்தை உலகெங்கும் பரப்ப இமாலயத்தை விட்டு சின்மயானந்தர் புறப்பட்டார்.உலகெங்கும் பல ஆசிரமங்களையும் மையங்களையும் ஆரம்பித்தார். பல பாட சாலைகளையும், மருத்துவ மனைகளையும் ஆரம்பித்தார். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவென கிராம நலத் திட்டமான சின்மயா அமைப்பை உருவாக்கினார். சுவாமி சின்மயானந்தா ஓகஸ்ட் 3, 1993 இல் சான் டியேகோ, கலிபோரனியாவில் மறைந்தார். இவரது சீடர்கள் இவர் அவ்விடத்தில் மகா சமாதி அடைந்ததாகக் கருதுகின்றனர். இவர் ஆரம்பித்த சின்மயா மிஷன் நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள அமைப்பாகும். 350 மையஙகளில் இது இயங்குகிறது.

# இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதி தடையை தளர்த்தியது அமெரிக்கா

(வோஷிங்டன்) —

**அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த ஆயுத ஏற்றுமதி தடை தளர்த்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பாதுகாப்பு வர்த்தக பிரிவு இது குறித்து அறிவித்துள்ளதாக பாதுகாப்பு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கைக்கு சட்ட ரீதியான ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி பத்திரங்களை விநியோகிப்பதற்கான தடை நிலவிவந்த நிலையில், தற்போது இந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி சான்றிதழுக்கான விண்ணப்பங்களை பரிசீலிக்க இராஜாங்க திணைக்களம் தீர்மானித்துள்ளதாகவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஊடகங்கள் பிழையான செய்தியை வெளியிட்டன

## ருவான் குணசேகர வாக்குமூலம்

யாழ்.சாவகச்சேரியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தான் சொல்லாத கருத்தொன்றை ஊடகங்கள் திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளதாக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி தற்கொலை அங்கி விடயமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்ததாக கூறப்படும் அறிவிப்பு குறித்து குற்றவியல் விசாரணைத் திணைக்களம் முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகரவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டுள்ளது.

இதன்போதே, தான் சொல்லாத செய்தியை ஊடகங்கள் திரிபுபடுத்தி கூறியுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தனது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சாவகச்சேரி தற்கொலை அங்கி தொடர்பில் அவர் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து, ருவான் குணசேகரவின் ஊடகப் பேச்சாளர் பதவி



பறிக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் ஊடக மத்திய நிலைய செயற்பாடுகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் தெரிவு

யாழ். மாநகரசபையின் ஆலோசனைச் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட க.பூரணச்சந்திரன், பா.கணநாதன், பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம், திருமதி. ரா. சாவித்திரிதேவி, பொ. ஈஸ்வரதாசன், க.மகேஸ்வரன், லிகோறி கிளமெண்ட் ஜெயசீலன், து.யோகேஸ்வரன், இ.இரத்தினசிங்கம், மு.உதயசிறீ, அ.ரஞ்சித், 11 உறுப்பினர்களும் மாதத்திற்கொருமுறை கலந்துரையாடலை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் தமது முதலாவது கலந்துரையாடலின் போது ஆலோசனைச் சபையின் நடப்பு வருடத் தலைவராக க.பூரணச்சந்திரன், செயலாளராக இ.இரத்தினசிங்கம் ஆகியோர் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டனர்.

பொது மக்கள் மேற்படி ஆலோசனைக் குழு கலந்துரையாடவென ஆலோசனைகள், கோரிக்கைகள், திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்ற விடயங்கள் ஏதுமிருப்பின் கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஆலோசனைக் குழு கோரியுள்ளது. மாநகர சபையின் உத்தியோக பூர்வ இணையத்தளத்திலுள்ள www.Jaffnamc.gov.lk "மக்கள் ஆலோசனை" என்ற பகுதியினூடாக தொடர்பு கொள்ளலாம். (இ

# ‘கடத்தல் வேண்டாம்’ மட்டக்களப்பில் பேரணி

காணாமற் போனோரின் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட ‘வெள்ளை வான் கடத்தல் வேண்டாம்’ என்ற தொனிப் பொருளிலான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி, காந்தி பூங்காவுக்கு முன்பாக ஆரம்பமாகி மாவட்டச் செயலகம் வரை சென்று அங்கிருந்து மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் வரை சென்று நிறைவடைந்தது. (இ-5)




# குடும்பஸ்தரை தாக்கிய ஆறு பேர் கைதாகினர்

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை தாக்கி காயப்படுத்திய ஆறுபேரினைத் தாம் கைது செய்துள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 45 வயதுடைய குடும்பஸ்தரே காயமடைந்தவராவார். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்று சனிக்கிழமை அதே இடத்தினைச் சேர்ந்த ஆறு பேரைக் கைது செய்துள்ளனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5-60)

# அவசர அம்புலன்ஸ் சேவை-வடமாகாணம் (021 222 4444, 021 222 5555)

அறிமுகம்

விபத்துக்களின் போதும் அவசர மருத்துவ நிலைகளின் போதும் நோயாளியை இயலுமான அளவு குறுகிய நேரத்திற்குள் வைத்தியசாலையில் அனுமதிப்பதன் மூலம் உயிரிழப்புக்களை குறைக்க முடியும். மேலும் அவ்வாறு கொண்டு செல்லும் போது மருத்துவ முதலுதவி வழங்கப்படுமாயின் உயிரிழப்புக்களை மேலும் குறைக்க முடியும். இதனை கருத்தற் கொண்டே உலகில் பல நாடுகளில் வைத்தியசாலைக்கு முன்னரான சேவை (Pre Hospital Care) உருவாக்கப்பட்டுள்ளது. அதன் ஓர் முக்கிய அங்கமாகவே அவசர அம்புலன்ஸ் சேவை விளங்குகின்றது.

எமது நாட்டில் வைத்தியசாலைக்கு முன்னரான சேவை மேல், தென் மாகாணங்களில் இந்திய அரசின் உதவியுடன் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் 2006 முதல் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகளின் வலைப்பின்னலுடன் யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரான காலத்திலும் அவசர அம்புலன்ஸ் சேவை இயங்கி வந்தது.

வடமாகாணத்தில் சுகாதார அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்களின் எண்ணக்கருவில் உதித்த வடமாகாண அவசர அம்புலன்ஸ் சேவை 06.01.2016 அன்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நோக்கம்

விபத்துக்கள், அவசர மருத்துவ நிலைகள், பிரசவம் போன்ற நிலைகளில் இயலுமான குறுகிய நேரத்தில் வைத்தியசாலையில் சேர்ப்பதன் மூலம் உயிரிழப்புக்களை குறைத்தல்.

சேவையை பெறும் முறை

பொதுமக்கள் 021 222 4444, 021 222 5555 ஆகிய தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொள்வதன் மூலம் இச் சேவையைப் பெறலாம்.

சேவையின் பரப்பெல்லை

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் எப்பகுதியிலிருந்தும் 24 மணிநேரமும் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். கட்டணம் முற்றிலும் இலவசம்

அழைப்பு நிலையம்

இச்சேவைக்கு கிடைக்கும் அழைப்புகளை ஒருங்கிணைத்து சேவையை வழங்கும் பொருட்டு ஓர் அழைப்பு நிலையம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அழைப்பு நிலைய இயக்குநர்கள் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் கடமையில் இருப்பர்.

அம்புலன்ஸ் வலைப்பின்னல்

வடமாகாண வைத்தியசாலைகளில் உள்ள 100 அம்புலன்ஸ் வண்டிகள் இவ்வலைப் பின்னலில் உள்ளன.

செயற்பாட்டு முறை

ஓர் அவசர அழைப்பு கிடைத்ததும் அழைப்பு நிலையத்தில் அந்த அழைப்பு கிடைத்த இடத்திற்கு அருகிலுள்ள வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி சாரதிக்கு அந்நோயாளியை உடனடியாக ஏற்றி வரும்படி தகவல் வழங்கப்படும். அம்புலன்ஸ் சாரதி ஸ்தலத்திற்கு சென்று நோயாளியை ஏற்றி அவரது நோய் நிலைக்கேற்ப அதற்கு சிகிச்சை வழங்கக் கூடிய அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வார்.

அழைப்பு கிடைக்கும் இடத்திற்கு அருகாமையிலுள்ள அம்புலன்ஸ் வண்டியை இனங்காண்பதற்கு GPS தொழில்நுட்பம் மூலம் வடமாகாணத்திலுள்ள சகல அம்புலன்ஸ் வண்டிகளும் அழைப்பு நிலையத்தில் கண்காணிக்கப்படுகின்றன.

கடந்த 3 மாத கால சேவையாற்றிய புள்ளி விபரங்கள்

இச் சேவை ஆரம்பிக்கப்பட்டது முதல் இச்சேவைக்கு ஜனவரி மாதம் 76 அழைப்புக்களும் பெப்ரவரி மாதம் 103 அழைப்புகளும் மார்ச் மாதம் 115 அழைப்புகளுமாக மொத்தம் 294 அழைப்புகள் கிடைத்துள்ளன. இவற்றில் 67%மான அழைப்புகள் யாழ். மாவட்டத்திலிருந்தும் 12% மான அழைப்புகள் கிளிநொச்சி மாவட்டத்திலுருந்தும் 10% மான அழைப்புக்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தும் 7% மான அழைப்புக்கள் மன்னார் மாவட்டத்திலிருந்தும் 4% மான அழைப்புகள் வவுனியா மாவட்டத்திலிருந்தும் கிடைத்துள்ளன. எனவே யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இச் சேவை பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் போதாமலுள்ளது.

முதல் மூன்று மாதங்களில் கிடைத்த அழைப்புகளில் 20% மான அழைப்புகள் வீதி விபத்துகளின் போதும் 17%மான அழைப்புகள் சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட அவசர நோய் நிலைகளின் போதும் 9% மான அழைப்புகள் நெஞ்சுவலியின் போதும் 8% மான அழைப்புகள் பிரசவத்தின் போதும் ஏனைய அழைப்புகள் பல்வேறு அவசர மருத்துவ நிலைகளின் போதும் விடுக்கப்பட்டன.

விழிப்புணர்வு

பொதுமக்களின் உயிர் காக்கும் உன்னத இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவையை பொதுமக்கள் பயன்படுத்தி பயனடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இதற்காக இச் சேவை பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போது வடமாகாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறும் வீதி விபத்துக்களில் பலர் அநியாயமாக பலியாகின்றனர். விபத்து இடம்பெறும் இடங்களில் நிற்பவர்கள் இச்சேவையை தொடர்பு கொண்டு காயப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவ முடியும். அம்புலன்ஸ் சேவைக்கு தகவல் வழங்குபவர்கள் வழக்குகளுக்கு சாட்சியாக செல்ல வேண்டுமென அச்சமடையதேவையில்லை. இதன் மூலம் அநியாயமாக பலியாகும் உயிர்களை நாம் பாதுகாக்க முடியும்.

எதிர்கால திட்டங்கள்

இச்சேவையை மேலும் வினைத்திறன் கூடிய சேவையாக மாற்ற அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் அம்புலன்ஸில் கூட செல்லும் சுகாதார பணியாளர்களுக்கும் விபத்துக்களின் போதும் அவசர மருத்துவ நிலைகளின் போதும் மேற்கொள்ள வேண்டிய சில அடிப்படையான முதலுதவிகள் பற்றிய பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் அவசர நோயாளர்களுக்கான முதலுதவி வழங்குவதற்கான அடிப்படையான மருத்துவ உபகரணங்களும் சாதனங்களும் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் இச் சேவையை வினைத்திறன் கூடியஓர் சேவையாக மாற்ற முடியும்.

முடிவுரை

உயிர்காக்கும் உன்னத இலக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை சிறப்பாக செயற்பட்டு மக்கள் பயனடைய அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானது. குறிப்பாக பொதுமக்கள் இச்சேவை பற்றி ஏனையவர்களுக்கும் இதனை தெரியப்படுத்தி இச் சேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உதவ வேண்டும். விபத்துக்களின் போதும் அவசர மருத்துவநிலைகளின் போதும் இச்சேவைக்கு அழைப்பை ஏற்படுத்தி உயிர்காக்க அனைவரும் முன்வர வேண்டும்.

**Dr. ஏ.கேதீஸ்வரன்**
**பி/மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்**
**வடமாகாணம்.**

## நகரத்திட்டமிடல், சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட பல விடயங்கள்

# கிளி.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின் மீளாய்வுக் கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டது



(மல்லாவி)

கிளிநொச்சிமாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் மீளாய்வு கூட்டம் இணை தலைமைகளான பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் சி.சிறிதரன் தலைமையில இடம்பெற்றது. இன்றைய கூட்டத்திற்காக் இணை தலைமைகளான வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் சமுகமளிக்கவில்லை. அவர்கள் சார்பில் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர். இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர், த.குருகுலராஜா மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், திணைக களம் சார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இன்றைய தினம் ஆராயப்பட்டது, குறிப்பாக கரும்பு உற்பத்தி, இறப்பர் செய்கை, நகர திட்டமிடல், சட்டவிரோத மண் அகழ்வு, பேருந்து நிலையம் அமைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. இன்றைய கூட் டத்திற்கான திணைக்களம் சார் உயரதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் அவரகள் வருகை தராமையால் சில திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் போனதாக அரசாங்க அதிபர் தெரிவிக்கின்றார்.

கூட்டத்தின் நிறைவில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன், கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் மீளாய்வு கூட்டமாக இடம்பெற்றதாகவும், இக்கலந்துரையாடலில் மேல குறித்த விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இராணுவம் காணிகளில் இருந்து வெளியேற்றுவது தொடர்பில் கடந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் பேசப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஊடகவியலாளர்கள் வினவியபோது, குறித்த விடயத்தில் தற்போது மக்கள் காணிகளில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்றும் நடவடிக்கையை எடுத்து வருவதாகவும், குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள கருமபு தோட்டக காணியில் இராணுவத்தினர் குடியிருப்பது தொடர்பிலும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அங்கஜன், குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும், நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற இரணைமடு குளத்திலிருந்து நீர் எடுதது செல்லும் திட்டம் தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் வினவியபோது அது தொடர்பில் குறிப்பிட்ட அங்கஜன், குறித்த திட்டம் தொடர்பில் ஆராய்ந்தே பதில் கூற முடியும் எனவும், குடிநீர் பிரச்சினை உள்ளமையும், நீர் அசுத்தமாக காணப்படுவது தொடர்பிலும் உண்மையான நிலைப்பாடே காணப்படுவதாக தெரிவித்த அவர், மக்களுக்கு குடிநீர் வழங்க வேண டிய தேவையை தானும் வலியுறுத்துவ தாகவும் குறிப்பிட்டார்.

இரணைமடு குளத்திலிருந்து நீர் எடுத்து செல்வது தொடர்பில் ஆராயாது தான் பதில் கூற முடியாதுள்ளதாக பதிலளித்தார். (2-15-312)




# பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்தில் அமைய வேண்டும்

## வவுனியாவில் அமைதிப் பேரணி




(கிளிநொச்சி)

மத்திய அரசின் கிராமிய பொருளாதார அமைச்சினால் வவுனியாவில் அமைப்பதறகு திட்டமிடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை தாண்டிக்குளம் விவசாய பண்ணையின் பயன்படுத்தப்படாத காணியில் அமைப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் அனுமதி வழங்க வேண்டும் என தெரிவித்து அமைதிப்பேரணியொன்று வவுனியா மொத்த வியாபார நிலையத்திலிருந்து நேற்று ஆரம்பமானது.

வவுனியா உள்ளூர்விளை பொருள் விற்பனையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இவ் அமைதிப் பேரணியில் "அபிவிருத்தியில் அரசியல் கலக்காதே, வலியவரும் வாய்ப்பை நழுவ விடாதே, மத்தியா - மாகாணமா இதுவல்ல எமது பிரச்சினை மாவட்டத்தின் அபிவிருத்தியே, சந்தை வாய்ப்பில்லாமல் நாம் படும் துன்பம் தெரியுமா, தரவில்லை என்று குறை கூறாமல் தந்ததை பயன்படுத்து, வேண்டாம் வேண்டாம் பொய்யான அறிக்கைகள் வேண்டாம்" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும்பேரணியில் கலந்து கொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை இவ் ஆர்ப்பாட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினரான சி. சிவமோகன், முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோததாரலிங்கம், ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணாதாச மற்றும் உறுப்பினர்கள், வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்கள் சங்க பிரதிநிதிகள், வவுனியா வர்த்தகர் சங்க தலைவர் மற்றும் செயலாளர் வியாபார சங்கங்கள், சமூக அமைப்புக்கள் உட்பட பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வவுனியா அரச அதிபர் ரோஹண புஸ்பகுமாரவிடம் மகஜர் ஒன்றினையும்வழங்கியிருந்தனர்.

இதில் கலந்து கொண்ட வன்னி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சி.சிவமோகன் கருத்து தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்த வன்னி மாவட்டத்திற்காக இவ்வருடத்தில் 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிலான பொருளாதார மத்திய நிலையம் அமைக்க மத்திய அரசு நடவடிககை எடுத்தது. இதுபோன்ற மத்திய பொருளாதார வலயங்களை நாடுபூராகவும் அமைக்க மைத்திரி அரசு தீர்மானித்திருந்தது.


நாடு பூராகவும் பல அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறையில் தொடங்கப்பட்ட நிலையில் வவுனியா மொத்த வியாபார நிலையத்துக்கென தீர்மானிக்கப்பட்ட வேலைத்திட்டம் உரிய காணி வழங்கல் செய்யாமல் வடக்கு மாகாண சபைமுடக்கியுள்ளது கவலைக குரிய நிகழ்வு, காலஇழுத் தடிப்புக்கள் செய்தது மக்களை போராடும் நிலைக்கு கொண்டுவந்தது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

வவுனியா அரச அதிபர் பணிமனையில் மேற்படி விடய முடிவுகள் எடுப்பதாக நடத்தப்பட்ட முக்கிய கலந்துரையாடலில் கலந்து கொள்ளாதவர்கள் தங்களது அதிகாரங்களை மக்களிடையே திணிக்க முறபடக் கூடாது.

மேலும் தாண்டிக்குளம் பண்ணையில் பேருந்து நிலையம் அண்டிய காணியையே உரிய மத்திய அமைசசர் கடிதம் மூலம் சிபார்சு செய்துள்ளார். எனவே அதனை உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (2-250)

# தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதுண்ட பேருந்து பாலத்தினுள் வீழ்ந்து விபத்து

## 23 கடற்படையினர் காயம்



(பரந்தன்)

வவுனியாவில் கடற்படையினர் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து தொலைத் தொடர்புக் கம்பத்துடன் மோதுண்டு பாலத்தினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 23 கடற் படையினர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று முன தினம் இரவு 8.30 மணியளவில் செட்டிகுளம் கல்லாறு பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,


மன்னார் முள்ளிக்குளம் பரண முகாமில் இருந்து விடுமுறையில் சென்ற கடற்படையினரை மதவாச்சி பேருந்து நிலையம் நோக்கி ஏற்றிச்சென்ற இரண்டு பேருந்துகளில் ஒன்றே அங்கிருந்த தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதுண்டு பாலத்தினுள் வீழ்ந்துள்ளது.

குறித்த பேருந்தில் 52 கடற்படையினர் பயணித்த போதும் 23 கடற்படையினர் காயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப பட்டுள்ளனர்.

அதில் இருவர் மட்டுமே கடுமையான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த கடற்படையினர் பயிற்சிக்கான பிரிவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-312-250)

# சர்வதேச சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப்பட்டறை

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது



கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் நன்னடத்தை மற்றும்பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால்ச்ர்வதேச சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப பட்டறையொன்று நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகமாநாட்டுமண்டபத்தில் இடம்பெற்றது. இப் பயிற்சிப்பட்டறையில் சிறார்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இதில்சிறுவர்கள்எதிர்கொளளும் பிரச்சினைகள் தொடர்பிலும், சிறுவர் பாதுகாப்பு தொடரபில் எவ்வாறான நடவடிக்கைகளை கையாள்வது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டதுடன், குழு செயற்பாடுகளும் இடம்பெற்றன.

நாட்டில் இடம்பெற்று வரும சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சிறுவர்களை பாதுகாக்கும்நோக்குடன்குறித்த செயலமர்வு மாவட்டங்கள் தோறும முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(2-15)

சுதந்திரம் பெறாதிருப்பது நல்லது – எப்போது?
பெற்றும் நாம் வாழ முடியாத போது.
கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழா... தமிழா... எழும்படா கண்டால் வாள்வெட்டாம் பாரடா

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரியதொரு பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு கட்டுமான பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தைப் பார்க்கும் போது பெரும் பிரமிப்பு.

இருந்தும் எதற்காக இவ்வளவு பெரிய கட்டிடம். நாளாந்தம் கொலை, கொள்ளை, களவு, வாள்வெட்டு, போதைப்பொருள் பாவனை அதிகரித்துக்கொண்டே வருகின்றபோது பொலிஸ் நிலையத்தை அமைத்து என்ன செய்வது?

பொலிஸார் தேவைதானா என்று கேள்வி எழுப்பும் அளவில் நிலைமை உள்ளது.

இது ஒருபுறம் இருக்க, வாள்வெட்டு கலாசாரம் ஒன்று இப்போது தாண்டவமாட தலைப்பட்டுள்ளது. இதை தடுக்காத பட்சத்தில் நிலைமை மோசமாகும் என்று சொல்வது எவருக்கும் தெரிந்த உண்மை.

களவு நடைபெறுகின்றபோது அந்தப் பக்கமாக யார் சென்றாலும் அவர்கள் மீது வாள்வெட்டு நடத்தப்படுவதான தகவல்கள் அதிர்ச்சிக்குரியவை.

இதனால் இரவு பயணத்தின் போது கடவுளே களவு நடக்கின்ற பக்கத்தால் யாம் செல்லாதிருக்க காத்தருள் என்று பிரார்த்தனை செய்ய வேண்டியுள்ளது.

இது தவிர வீடுகளில் இருப்பவர்களும் அன்புக்குரிய கொள்ளையர்களே! எங்கள் வீட்டு பெரிய அறை திறப்பு இந்த இடத்தில் இருக்கிறது. உங்களின் வருகைக்கும் இரவு நேர முயற்சிக்கும் பலன்தரும் வகையில் ஒரு தொகை பணமும் ஒரு சில தங்க ஆபரணங்களும் வைத்துள்ளோம். எடுத்துச் செல்க.

போதக்குறையிருந்தால் ஒரு மடல் எழுதி அனுப்புக. திருப்தி என்றால் குறைந்தது ஒரு வருடத்திற்கேனும் எங்கள் வீட்டுப்பக்கம் வருவதை தவிர்த்தருள்க என்று பெரிதாக எழுதி வைத்துவிட்டு ஒரு அறைக்குள் முடங்குவதை தவிர வேறு எதுவும் தெரியாமல் மக்கள் தவிக்கின்றனர்.

வீட்டுக்குள் நுழைகின்ற கொள்ளையர்களை சடுதியாக சந்திக்க நேர்ந்தால், அந்தோ கதிதான்.

இருப்பதையும் இழந்து கழுத்தில் வாள்வெட்டும் வாங்கும் பலன் ஆகிவிடும்.

ஆகையால் எங்கள் உழைப்பில் பாதி இரவு நேரக் கொள்ளையர்களுக்கு என்று பிரித்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கின்ற அளவிலேயே நிலைமை உள்ளது.

தகவல் தொடர்பாடல்கள், சம்பவங்களை அவதானிக்கும் கமராக்கள், மோப்பநாய்களின் பிரயோகிப்புக்கள் இருக்கின்ற போதிலும் பொலிஸாரால் கொள்ளை, களவைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், ஏன் எதற்காக என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

ஓ! யாழ்ப்பாணம் – வடபுலம் தமிழர் பிரதேசம்; இங்கு நடக்கின்ற எந்த சட்டவிரோத சம்பவங்கள் குறித்தும் நாம் அதிரடியாக நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று பொலிஸார் நினைத்தால், யாம் தமிழர்கள் என்று சொல்வதை தவிர வேறு எதுவும் இல்லை.

## சுவாமி சின்மயானந்தரின் சிந்தனைத் துளிகள்



### ஆளுமையின் கவர்ச்சி

ஆன்மீக வளர்ச்சியின் உச்சத்தை நாம் எட்டும் பொழுது நம் வாழ்க்கையே ஒரு புதிய அழகுடன் மிளிர்வதைக் காண்போம். இந்தக் கவர்ச்சி, இந்த அழகு நம் செயல்களில் மட்டும் வெளிப்படும் ஒன்றும் அல்ல. உதாரணமாக ஒருவரிடம் வினயம், பரிவு, இரக்கம், அன்பு, நேர்மை ஆகிய அனைத்தும் இருக்கலாம். ஆயினும் பிறரை வசீகரிக்கும் அழகு அவருடைய செயல்களில் இல்லாமல் போகலாம். நான் குறிப்பிடும் இந்த வசீகரம் அந்த மனிதரின் உள்ளத்தின் அழகைப் பொறுத்தது. வெளியுலகிற்கு ஒருவர் நன்னடத்தையும் நாகரிகமான போக்கும் உள்ளவராகத் தெரியலாம். அது ஒரு வெறும் வெளிப்பூச்சாகக்கூட இருக்கலாம். ஆனால் நன்னடத்தையுடன் மனதளவிலும் ஒருவர் உண்மையானவராகவும் மதிக்கத்தக்க புத்தியுள்ளவராகவும் இருந்தா லொழிய அந்தக் கவர்ந்திழுக்கும் அழகு அவருக்கு அமையாது. இதைத்தான் ஆளுமையின் கவர்ச்சி என்று கூறுகிறோம்.

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

**வினா இல.15**

**(அத்:2.ஸ்லோ:45)**

**மனித அமைப்பில் மூன்று வகையான குணங்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் வெவ்வேறு அளவில் கலந்து நிற்கின்றன. அம்மூன்று குணங்களும் எவை?**

விடை: தமோ (தாமசம்) குணம்
ரஜோ (ராஜஸம்) குணம்
ஸத்வ (சாத்வீகம்) குணம்

**வினா இல.16**

**(அத்.2: ஸ்லோ.45)**

**இம்மூன்று குணங்களிலும் இருந்து தோன்றும் இயல்புகள் (தன்மைகள்) எவை?**

விடை: தமோ– சோம்பல், மந்தநிலை,மயக்கம்
ரஜோ–உலகப்பற்றுதல், துயரம், பரபரப்பு, செயல் ஆர்வம்
ஸத்வ–அமைதி, தூய்மை

## தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இக் கற்கை நெறிகளான விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர்,அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்),இரு சக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர், அலுமினியப் பொருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர் , மரவேலை தொழில் நுட்பவியலாளர்,பெண்கள்சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும்.

இக் கற்கை நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கை நெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி , வீரசிங்கம் மண்டபம், இல,12,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் நாளை மறுதினம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மேற் கொள்ளுமாறு இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபை யாழ்.உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து கிளிநொச்சி பிரதேசத்தில் வலைப்பாடு, கிராஞ்சி, வேராவில், சாந்தபுரம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஆதிவிநாயகர் கோவில் பிரதேசம், குருமன்காடு பிள்ளையார்கோவில் பிரதேசம் ஆகிய பிரதேசத்திலும் பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## நாம் சமுதாயத்தில் புளிக்காரமாகவும் ஒளியாகவும் இருந்து புத்துணர்ச்சியுடனும் செயற்படுவோம்

இயேசு விண்ணேற்றமடைந்த திருவிழாவை நாம் இனறு கொண்டாடுகின்றோம். விண்ணேற்றம் இயேசுவின் வாழ்வில் மூன்று நிலைகளில் அர்த்தம் பெறுகின்றது: இயேசு தன் மண்ணக பணி வாழவு முடிந்து, தமது தந்தையின இல்லம் திரும்புகின்றார். தன் சீடர்களிடம் தன் பணியை ஒப்புவிக்கின்றார். தன் இறையரசுப் பணியைத் தொடர்ந்தாற்ற அவர்களுக்குக் கட்டளையிடுகின்றார். - துணையாளராம் தூய ஆவியானவரை அவர்கள் மேல் அனுப்புவதாக வாக்குறுதி

### பரமபிதா காட்டிய பாதை

தருகின்றார் .

விண்ணேற்பு விழா பற்றி நாம் சிந்திக்கின்ற போது. இயேசு ஏன் விண்ணேற்றமடைந்தார் என்ற கேள்வியை எங்களுக்குள் எழுப்புவோம். இதற்கு பின்வருமாறு பைபிளில கூறப்பட்டுள்ளதை நோக்குவது சாலப் பொருத்தம். 'நான் தந்தையிடமிருந்து வந்தேன். இப்போது உலகை விட்டு மீணடும் தந்தையிடம் செல்கிறேன்" இயேசுவிற்கு உரிய இடம விண்ணகம். அதனால் அங்கிருந்து தான் அவர் வந்ததையும் மீண்டும் அங்கு திரும்புவதையும் அவர் இதன மூலம் தெரிவிக்கின்றார்.

எங்களுடைய வாழ்வைப் பற்றி நாம் சிந்திக்கின்ற போது பைபிள்என்ன சொல்கிறது எனப பாரத்தால், கடவுள் உங்களை அன்பு செய்கின்றார். நீங்கள் என் மீது அன்பு வைத்து நான் தந்தையிடம் இருந்து வந்தேன் என்பதை நம்புகிறவர்களள. அதனால் தான் தந்தை உங்கள் மீது அன்பு செலுத்துகி றார். நான் தந்தையிடமிருந்து வந்தது போல மீண்டும் தந்தையிடம் செல்கின்றேன் என இயேசு கூறுகின்றார். இயேசு இவ்வுலகிற்கு வந்தது சிலுவையில் பாடு பட்டது மீண்டும் உயர்ந்து எழுந்தது எல்லாமே நம் மத்தியில் ஒரு கொள்கையளவிலேயே உள்ளன. ஆனால் நாம் இதனை உள்ளத்தில் பதிந்து வைத்து அது தரும் நம்பிக்கையில் வாழ்வதில்லை. இயேசு விண்ணகம் செல்லும் போது அவர் ஒரு கட்டளையை வழங்கிச் செல்கிறார். நாம் திருமுழுக்கு பெற்றது, நாம் கிறிஸ்தவர்களாக வாழ்வது நாம் மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு விடயமல்ல. தூய ஆவியானவர் வரும் போது நீங்கள் வல்லமை பெற்று உலகின் கடைசி எல்லைவரை எனக்குச் சாட்சியாக இருப்பீர்கள் என்பதே அந்த கட்டளை. இயேசு தமது வாழ்வின் மறுபக்கம் பற்றி தெரிவிககவே இங்கு வந்தார். தமது விண்ணேற்றத்தின் போது இயேசு என்ன நோக்கத்திற்காக உலகத்திற்கு வந்தாரோ அந்தப் பணியை நிறைவேற்றுகிற கடமையை நம்மிடம் ஒப்படைக்கின்றார். தூய ஆவியின் வலலமையை பெற்றபோது உலகின் கடைசி எல்லை வரை எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என அவர் கூறுகின்றார். இயேசுவின் விண்ணேற்பு விழாவில் நமக்கு ஒரு பொறுப்பைத் தந்துள்ளார். அதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். சாட்சிய வாழ்வு மிக முக்கியமானது.

உண்மைக்கு முடிவில்லை. நேர்மைக்கு அழிவில்லை நம்பிக்கைக்கு இறப்பில்லை எனக் காட்டுகின்றது. இயேசு இவ்வுலகில் தனக்கு நேர்ந்த பல துன்பங்களை இறை சித்தத்தை நிறைவேற்ற பொறுமையோடு தாங்கினார்.

ஆண்டவர் மேல் அவர் வைத்த நம்பிக்கையே அவருக்கு ஆற்றல் கொடுத்தது. இதனால் இறைவன் அவரை உயர்த்தினார். இயேசுவின் விண்ணேற்பு நாமும் இயேசுவைப் போல் உண்மைக்காக நீதி நியாயத்திற்காக அன்பிற்காக வாழும்போது உயர்த்தப்படு வோம் என்ற நம்பிக்கையை அளிக்கின்றது. உண்மை க்கு சாட்சியம் பகிர்வதே எனது பணி என்று கூறிய இயேசு தான் உயிர்த்தெழுந்த பின் அதுபற்றி உலகிற்கு அறிவிக்கவும் அதற்கு சாட்சியம் பகிரவும் அழைப்பு விடுக்கிறார். உலகில் நற்செய்தியையும் மீட்பையும் அறிவிப்பதற்காக நாம் அனுப்பப்படுகின்றோம்.

நாம் சமுதாயத்தில் புளிக்காரமா கவும் ஒளியாகவும் இருந்து புத்துணர்ச்சியுடனும் செயற்பட வேண்டும். அப்போது தான் சமுதாயம் கிறிஸ்தவ விழுமியங்களால் உரம் பெற்று உறுதியுடன் உயிர்த்துடிப்புள்ள அங்கமாக கடவுளின் பக்கம் தடம் பதிக்கும்.

இயேசுவின் விண்ணேற்பு நமது வாழ்வின் இலக்கை ஆயவு செய்ய அழைப்பு விடுக்கிறது. இவ்வுலக வாழ்வு நமக்கொரு இடைப் பயணமே.



நமது கண்களோ விண்ணகம் நோக்கியே அமைய வேண்டும். இவ்வுலக இன்பங்களில் நமது காலத்தைக் கடத்தாமல், விண் நோக்கி நமது கண்களும், இதயமும் எழும்பட்டும். இவ்வுலகில் வாழ்ந்தாலும், நாம் இவ்வுலகைச் சாராதவர்களாக, விண்ணகம் சார்ந்தவர்களாக நம் வாழ்வு அமையவேண்டும். நமது


**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**


எண்ணங்கள், சொற்கள், செயல்கள் நாம் விண்ணகம் நோக்கிப் பயணம் செய்பவர்கள் என்னும் எண்ணத்தைப் பிறருக்கு வழங்க வேண்டும். இயேசுவின் விண்ணேற்றம் இயேசுவின் உண்மையான தங்குமிடத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு மேலிருந்து வந்தவர் மேலே எழுந்து சென்றார்.

அத்தோடு மீண்டும் வருவார் என்ற விசுவாசத்தையும் வலியுறுத்துகின்றது. எனவே நாமும் விசுவாசத்தின் சாட்சிகளாவோம்.


# கிரிக்கெட் வீரர்களின் ஒரு நிமிட சம்பளம்


உலகளவில் பிரபலமான கிரிக்கெட் வீரர்கள் ஒரு நிமிடத்திற்கு இந்திய ரூபாயில் எவ்வளவு சம்பளம் வாங்குகின்றனர் என்ற பட்டியல் வெளியாகியுள்ளது.


விராட் கோலி (இந்தியா)
ரூ.5811.21


மகேந்திர சிங்டோனி
(இந்தியா) ரூ. 3638.30


கிறிஸ் கெய்ல்(மேற்கிந்திய தீவு)
ரூ.950.34


ஷாகித் அப்ரிடி(பாகிஸ்தான்)
ரூ. 798.19


விரேந்திர ஷேவாக் (இந்தியா)
ரூ. 734.71


ஷேன் வாட்சன் (அவுஸ்திரேலியா)
ரூ. 696.71


டிவில்லியர்ஸ் (தென் ஆபிரிக்கா)
ரூ. 696.71


கவுதம் கம்பீர் (இந்தியா)
ரூ. 633.15


யுவராஜ் சிங் (இந்தியா)
ரூ. 481.19


மைக்கல் கிளார்க்(அவுஸ்திரேலியா)
ரூ.367.57

## இலங்கைக்கு இங்கிலாந்தில் காத்திருக்கும் சவால்; மத்யூஸ்க்கு உதவும் ஜெயவர்த்தன-சங்கக்கார

இங்கிலாந்தில் சங்கக்கார, ஜெயவர்த்தனவின் ஆலோசனைகள் இலங்கை அணிக்கு பெரிதும் உதவியாக இருக்கப் போவதாக அணித் தலைவர் மத்யூஸ் கூறியுள்ளார்.

இலங்கை அணியின் இரு தூண்களாக இருந்த சங்கக்கார, ஜெயவர்த்தன இருவரும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டனர். இதன் பிறகு அந்த அணி தொடர்ந்து சறுக்கலை சந்தித்து வருகிறது.

இந்நிலையில் இலங்கை அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 5 ஒரு நாள் மற்றும் ஒரு டி20 போட்டிகளில் விளையாடவிருக்கிறது.

சங்கக்காரவும், ஜெயவர்த்தனவும் இங்கிலாந்தில் கவுண்டிப் போட்டிகளில் ஆடி வருவதால் அங்குள்ள சூழ்நிலைகளை நன்கு அறிந்தவர்கள். தவிர, அவர்களில் அனுபவ ஆலோசனைகளும் தங்களுக்கு உதவப் போவதாக மத் யூஸ் கூறியுள்ளார்.

இந்த தொடர் பற்றி இலங்கை அணியின் தலைவர் மத்யூஸ் கூறுகையில், சர்வதேச போட்டிகள் என்று வந்துவிட்டால் ரகசியம் என்று ஏதும் இருக்காது.

இங்கிலாந்து அணி தொடர்பாக எங்களிடம் வீடியோ உள்ளது.



அதேபோல் எங்கள் வீரர்களின் செயல்பாடு குறித்து அவர்களிடம் வீடியோ இருக்கும். ஆனால் இங்கிலாந்துக்கு எதிராக 2 தந்திரங்களை ஜெயவர்த்தன வைத்துள்ளார்.

ஜெயவர்த்தன, சங்கக்கார இருவரும் இலங்கை அணிக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்கள் தற்போது அணியில் இல்லை என்றாலும், பயமில்லாத சில வீரர்கள் அணியில் இருப்பது எங்களுக்கு பலம்.

மேலும், 2014 ஆம் ஆண்டு இங்கி லா ந்துக்கு எதிராக டெஸ்ட் தொடரை நாங்கள் கைப்பற்றினோம். அதற்கு முன்பு நாங்கள் இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது இல்லை. அது போன்று இந்தமுறை நடந்தால் வரலாற்று அடையாளமாக அமையும் என்று நம்பிக்கையுடன் கூறியுளளார். நாளை நடக்கும் பயிற்சிப் போட்டியில் உள்ளூர் அணியான சசெக்ஸ் அணிக்கு எதிராக இலங்கை அணி விளையாடுகிறது.

## பயங்கரமாக மோதிக்கொண்ட வீரர்கள் மைதானத்திலே பரிதாபமாக உயிரிழந்த வீரர்



காற்பந்து போட்டியின் போது எதிரணி வீரருடன் பயங்கரமாக மோதிக்கொண்டதில் கேமரூன் வீரர் பேட்ரிக் எகேங் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ரூமேனியாவில் நடந்து வரும் கிளப்புகளுக்கு இடையேயான முதல் டிவிஷன் போட்டியில் கேமரூன் காற்பந்து வீரர் பேட்ரிக் எகேங் (வயது26) டைனாமோ புசரெஸ்ட் அணிக்காக விளையாடினார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த விட்டோரூல் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மாற்று வீரராக களமிறங்கிய பேட்ரிக், ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் எதிரணி வீரருடன் பயங்கரமாக மோதி கீழே விழுந்தார்.

இந்த பயங்கர மோதலில் அவர் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கிடந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். எதிரணி வீரருடன் அவர் பயங்கரமாக மோதியதில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது.

மைதானத்தில் ஏற்பட்ட இந்த சம்பவம் ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## நினைத்ததை செய்து முடித்தோம் குஷியில் குதிக்கும் ரொனால்டோ

ஐரோப்பிய சம்பியன்ஷிப் லீக் க்ாற்பந்து போட்டியில் ரியல் மாட்ரிட் (ஸ்பெயின்)- மான்செஸ்டர் சிட்டி (இங்கிலாந்து) அணிகள் இடையிலான அரையிறுதியின் 2வது சுற்றுப் போட்டி மாட்ரிட் நகரில் உள்ள சான்டியாகோ பெர்னபியு அரங்கத்தில் கடந்த வியாழக் கிழமை இரவு அரங்கேறியது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரியல் மாட்ரிட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் சிட்டியை வீழ்த்தி 14வது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இந்த வெற்றி குறித்து ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோ கூறுகையில், இது மிகவும் கடினமான போட்டியாக இருந்தது. ஆனால் ரியல் மாட்ரிட் அந்த அணியை விட சிறப்பாக ஆடியதாக நினைக்கிறேன். நாங்கள் கோலுக்கு ஏற்ற வாய்ப்புகளை அதிகம் உருவாக்கினோம்.

எங்களுக்கு கோலுக்கு பிறகு சிட்டி அணி நெருக்கடி கொடுக்கும் என்பது எங்களுக்கு தெரியும். இருப்பினும் அந்த நிலையை சமாளித்து விட்டோம்.

எங்கள் அணி சிறப்பாக இருந்தது. எதை செய்ய வேண்டும் என நினைத்தோமே அதை செய்து விட்டோம். இப்போது இறுதிப் போட்டியில் இருக்கிறோம் என்று கூறியுள்ளார்.

மேலும், காயம் பற்றி அவர் கூறுகையில், நான் 100 சதவீத உடற்தகுதியுடனே இருந்தேன். அணிக்காக முடிந்ததை செய்தேன். தற்போது நாங்கள் இறுதிப் போட்டியில் இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## ஆக்ரோஷமான அணுகுமுறையை மாற்றிக்கொள்ளமாட்டேன்- கோலி

ஆக்ரோஷமான அணுகுமுறை தான் தன்னை சிறப்பாக செயற்பட உதவுவதாக பெங்களூர் அணியின் தலைவராக உள்ள விராட் கோலி கூறியுள்ளார்.

செய்தியாளர்களை சந்தித்து பேசிய விராட் கோலி, எனக்கு ஆக்ரோஷ அணுகுமுறை தான் கைகொடுக்கிறது. உலகத்தில் எந்த ஒன்றுக்காவும் அந்த அணுகுமுறையை நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்.

அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஆக்ரோஷ அணுகுமுறை அவசியமாக தேவை. ஆனால் அதை நல்ல விதத்தில் பயன்படுத்த வேண்டும், ஆணவமாக பயன்படுத்தக் கூடாது.

நான் சாதனைகளுக்காக விளையாடவில்லை. அணிக்கு எனது பங்களிப்பு தான் முக்கியம்.

மேலும், இந்தியாவில் ஒரு விளையாட்டு வீரரை மதிப்பீடு செய்வதில் போதிய காலம் எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை. தற்போது இளம் வீரர்கள் தவறாக மதிப்பீடு செய்யப்படுகிறார்கள்.

## கோலி சச்சின் ஆக முடியுமா? மனம் திறந்த யுவராஜ் சிங்

விராட் கோலியை சச்சின் டெண் டுல்கருடன் ஒப்பிட்டு பேசுவது சரியல்ல என்று இந்திய அதிரடி வீரர் யுவராஜ் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் துணைத்தலைவரான விராட் கோலி தற்போது சிறந்த நிலையில் இருக்கிறார்.

இந்திய அணிக்கு 'ரன் மிஷினாக' இருக்கும் கோலி விரைவில் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் சாதனையையும் முறியடிப்பார் என்று ரசிகர்களால் நம்பப்படுகிறது.

இது குறித்து யுவராஜ் சிங் கூறுகையில், விராட் கோலி இந்த தலைமுறையின் சிறந்த வீரர். அதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. ஆனால் அவரை சச்சினுடன் ஒப்பிட்டு பேசுவது சரியானது கிடையாது.

சச்சின் இந்தியாவின் சிறந்த ஒரு அடையாளம். சச்சினுடன் கோலியை ஒப்பிட்டு பேச அவருக்கு இன்னும் கடின உழைப்பு தேவை. ஆனால் ஒருநாள் சச்சின் போன்ற சிறந்த ஒரு வீரராக கோலி உருவெடுப்பார் என்று கூறியுள் ளார்.

மேலும், கோலியால் சச்சினின் 100 சதங்கள் சாதனையை முறியடிக்க முடியுமா என்ற கேள்விக்கு, 100 சதங்கள் என்பது நினைத்துப் பார்ப்பதற்கும் அப்பால் பட்ட விடயம் என்று அவர் கூறியுள்ளார்.

## சிறீ சபாரத்தினம் நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) முன்னாள் தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் போராளிகளின் 30ஆம் ஆண்டு நினைவஞ்சலிப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் அருகாமையில் உள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரபல இந்தியப் பத்திரிகையாளர் ஆர்.பகவான் சிங் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

மேலும் நிகழ்வின் பேச்சாளர்களாக அமைச்சர்களான மனோ கணேசன், வே.ராதாகிருஷ்ணன், ப.திகாம்பரம் மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராஜா, த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்கிரமபாகு கருணாரத்ன, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் வடக்குகிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெரு மாள், வட மாகாண சபைஅவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

## மன்னிப்பு காலம் நிறைவு

சட்டவிரோதமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்பு காலத்திற்குள் 423 துப்பாக்கிகள் கிடைத்திருப்பதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயந்த ஜயவீர கூறியுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி முதல் சட்டவிரோத துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்கான பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அது நேற்று முன்தினம் 6ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது.

குறித்த காலப்பகுதிக்குள் பிரதேச செயலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் போன்ற இடங்களில் சட்டவிரோத துப்பாக்கிகளை ஒப்படைக்க முடியும் என்று அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்ததாக பிரிகேடியர் ஜயந்த ஜயவீர கூறியுள்ளார்.

அதன்படி குறித்த காலத்திற்குள் அதிகளவில் சட்டவிரோத துப்பாக்கிகள் ஒப்படைத்த மாவட்டமாக கம்பஹா மாவட்டம் இருப்பதுடன், அம மாவட்டத்தில் இருந்து 100 துபபாக்கிகள் இவ் வாறு ஒப்படைக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (செ-12)

## சித்திரவதைகள்...

சந்திப்பின் போது இக் கருத்தை தெரிவித்துள்ளனர் அங்கு அவர் மேலும் கூறுகையில்,

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதம் மற்றும் திட்டமிட்ட குற்றங்கள் சிவில் உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றன.

அவ்வாறிருக்கையில் அதன் பேரில் இலங்கை உட்பட உலக நாடுகளில் சித்திரவதைகள் தொடர்கின்றமை கவலையளிப்பதாகவுள்ளது. எனவே அந்த விடயத்தில் ஐ.நா கூடிய கவனம் செலுத்தும்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் மேலும் உறுதிப்படுத்தப்படவேண்டுமாயின் சட்ட பொறிமுறையில் மேம்பாடுகள் அவசியமென்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை மீள்விசாரணைக்கு அழைப்பது தவறானதொரு விடயமில்லாது விட்டாலும் சிவில் உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் யூன் மாதங்களில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின் போது இலங்கை குறித்த மதிப்பீட்டு அறிக்கைகளை நாம் வழங்கவுள்ளோம்.

எமது விசாரணை நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது என தெரிவித்தனர்.

மேலும் திருகோணமலை கடற்படை முகாமிற்கு தாம் விஜயம் செய்திருந்ததாகவும், அதன்போதே இரகசிய தடுப்பு முகாம்களை கண்டதாகவும் ஐ.நா. நிபுணர் குழுவினர் கூறினார்கள்.

இந்த இரகசிய தடுப்பு முகாம்கள் கடந்த காலங்களில் பயன்படுத்தப்படவில்லை என எவரும் தமக்கு கூறவில்லை எனவும், இந்த தடுப்பு முகாம் குறித்து யாரும் கருத்து தெரிவிக்கவுமில்லை எனவும் ஐ.நா.நிபுணர்கள் இதன்போது கவலை வெளியிட்டார்கள்.

இலங்கையின் சமகால நிலைமைகளையும், உறுதிமொழிக்கு அமைவான முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான மேற்படி இரண்டு நிபுணர்களும் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

கடந்த ஒன்பது நாட்களாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், நீதி துறையை சார்ந்தவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினரையும் இவர்கள் சந்தித்துள்ளதோடு மேலும வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களையும் நேரடியாக சந்தித்திருந்த நிலையில் நேற்றைய தினம் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கடன் தொகை...

ஏற்பாட்டில் ஜேர்மனில் நடைபெற்ற 49ஆவது நிதி அமைச்சர்களுக்கான மாநாட்டில் கலந்து கொண்டு நேற்றையதினம் நாடுதிரும்பிய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, குறித்த மாநாடு தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த மாநாட்டில் பங்கேற்றமை மகிழ்ச்சியளிப்பதோடு இந்த விஜயம் வெற்றிகரமாகவும் அமைநதுள்ளது.

இந்த விஜயத்தின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்டக்குழுவுடன் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை, எதிர்கால திட்டங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஏற்கெனவே இலங்கைக்கு 250 மில்லியனை கடனுதவியாக வழங்கியுள்ளது.

இந்த தொகையை தற்போது ஆயிரம் மில்லியனாக அதிகரிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் வெளியிட்டுள்ளதோடு அத் தொகையை விரைவில் பெற்றுக கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளது என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-12)

## மின்சாரம்...

நொச்சி, முல்லைத்தீவு மாட்டங்களில் உள்ள சில பிரதேசங்களிலும் இன்று பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 5 மணிவரைக்கும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (செ-9)

## காடுகள் அழி...

அழிக்கப்பட்ட அந்தப் பிரதேசத்தைப் பார்வையிட்டுள்ள அவர், இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் மேற்கு எல்லையில் 50 ஆயிரம் ஏக்கர் காணி, மட்டக்களப்பு மாவட்ட கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது அந்தப் பகுதியில் நடந்துள்ள காடழிப்பினால் மட்டக்களப்பு கால்நடை பண்ணையாளர்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தக் காடுகள் அழிப்பின் பினணியில் பௌத்த பிக்குகள் இருப்பதாக அறிய முடிகிறது என அவர் தெரிவித்தார். (செ-12)

## மற்றுமொரு...

யில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த லோரன்ஸ் றெமின்சினா (வயது 18) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனினும் இது விபத்தா அல்லது, தற்கொலையா என்பது தொடர்பில் தாம் விசாரணை நடத்திவருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-30,4,9)

## புகையிரதம் மோதி இருவர்...

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த புகையிரதம் மோதி இரு இளைஞர்கள் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

இக்கோர சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கோண்டாவில் புகையிரத நிலையப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தற்கொலை என கூறப்படுகின்ற போதிலும் உயிரிழப்பு தொடர்பில் மர்மமாகவே காணப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் கோண்டாவில் பழனி ஆண்டவர் கோவிலடியைச் சேர்ந்த கோமதி ராஜா நிசாந்தன் (வயது 18), திருநெல்வேலியை சேர்ந்த பரமநாதன் ரஜிராம் (வயது 17) ஆகியோர் என இனம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொணடிருந்த நேற்றைய நாளுக்கான முதலாவது புகையிரதம் காங்கேசன்துறை தரிப்பிடத்தை நோக்கி அதிகாலை 5.30 மணியளவில், கோண்டாவில் பகுதியூடாக பயணித்து கொண்டுள்ளது.

இதன் போது தண்டவாளப் பகுதி இருட்டாக காணப்பட்ட போதிலும் புகையிரத வெளிச்சத்தில் கிட்டத்தில் தெளிவாகவே காணப்பட்டது.

இதன் போது விபத்து நடைபெற்ற இடத்திற்கு புகையிரதம் வந்து கொண்டிருந்தபோது, இரு இளைஞர்களும் தண்டவாளத்தில் படுத்திருந்ததாகவும், புகையிரதம் அவர்களை மிக அருகில் நெருங்கிய போதே அவர்களை காண முடிந்தது எனவும் புகையிரதத்தை செலுத்திய சாரதி பொலிசாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்,

மேலும் புகையிரதம் அவர்களை மிக அருகில் நெருங்கியமையால் புகையிரதத்தின் வேகத்தை உடனடியாக கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டதாகவும், கட்டுப்படுத்த முயற்சித்திருந்தால், புகையிரதம் தடம் புரண்டு ஏராளமானவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் எனவும் அதனாலேயே குறித்த விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

எனினும் புகையிரதம் வரும் போது ஒருவர் தண்டவாளத்திலிருந்து தலையை உயர்த்தி புகையிரதம் வந்த திசையை பார்த்ததாகவும் பொலிசாரிடம் புகையிரத சாரதி வாக்குமூலம் அளித்துள்ளார்.

சம்பவத்தில் ஒரு இளைஞர் மோதல் சிராய்ப்பு காயங்களுடன் உயிரிழந்த போதிலும் மற்ற இளைஞர் உடலிலிருந்து தலை வேறாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நடைபெற்ற இடத்தில் உடல் இரண்டும் கோரமாக காணப்பட்டதோடு, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின்னர் கோரமாக காணப்பட்ட உடல்களை பொதுமக்கள் காண முடியாதவாறு மறைப்பு செய்தனர்.

இருவரது சடலங்கள் மற்றும் சிதறிய உடல் பாகங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த விபத்து தற்கொலையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் அதேவேளை தற்கொலைக்கான காரணம் எதுவும் இவர்களுக்கு இல்லை என கூறப்படுகிறது.

இந் நிலையில் யாராவது நபர்களால் திட்டமிட்டு இவ் விபத்து ஏற்படுத்தப்பட்டிருக்குமா என்பது தொடர்பிலும் சந்தேகமாகவே உள்ளதாக விசாரணை தகவல்கள் குறிப்பிடுகின்றன. (செ-4,9,87,60,30)

## "இலங்.தமிழர்...

த்தில் உரையாற்றியபோதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து இந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து தமிழர்களின் வாழ்க்கையை ராஜதந்திர உறவுகளின் மூலம் தாம் காப்பாற்றியதாகவும் இந்தியப் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு அரசாங்கம் மக்களுக்காக உயிரோட்டத்துடன் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை எடுத்துக் கூறுவதற்காகவே இந்த விடயங்களைத் தாம் நினைவூட்டுவதாகவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக வாழ்ந்து, மககளோடு பயணிக்கின்ற அரசு வேண்டுமா, அல்லது மக்களை சிக்கலில் தள்ளுகின்ற அரசு வேணடுமா என்பதை தமிழக மக்கள் முடிவு செய்ய வேண்டும் என தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மோடி குறிப் பிட் டுள்ளார். (செ-12)

## முதலீடு செய்ய...

ட்டுக்கு உதவ புலம்பெயர்ந்த தமிழர்கள முன்வர வேண்டும் என நாட்டின் எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் பொருளாதார அபிவிருத்திகளை விரைவுபடுத்த அரசு சில திட்டங்களைத் தீட்டிவரும் வேளையில், புலம்பெயர்ந்துள்ள இலஙகைத் தமிழர்கள் அங்கு முதலீடு செயது, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வர வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டியது புலம்பெயர் தமிழ் மக்களின் கடமை என திருகோணமலையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் அவர் கூறினார்.

இலங்கை அரசும் பொருளாதார முதலீடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அந்த வாய்ப்பை புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்திக் கொண்டு, வடக்கு கிழக்கு பகுதியில் முதலீடு செய்யவேண்டும் என சம்பந்தர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே இந்த ஆண்டின் இறுதிக்குள் நீடித்திருக்கும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று எட்டப்படும் எனும் நம்பிக்கை தனக்கு உள்ளது எனவும் அவர் அந்நிகழ்வில பேசும்போது கூறினார். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## அறிவித்தல்

கணேசமூர்த்தி சிறிதரன் (842842328V) என்பவர் செல்வா ஹாட்வெயார், இல.120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எனும் எமது நிறுவனத்திலிருந்து 11.03.2016 இல் பணி விலகியுள்ளார் என்பதனை யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

மேலும் எமது நிறுவனம் சார்ந்த எந்த நடவடிக்கைகளையும் இவருடன் மேற்கொள்ள வேண்டாம் எனவும் இவருடன் தங்களால் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகட்கும் எமது நிறுவனம் பொறுப்பு நிற்காது என்பதையும் இத்தால் யாவருக்கும் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

உரிமையாளர்,
செல்வா ஹாட்வெயார்,
இல.120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-4562)

## வீடியோ எடிட்டிங் வேலைகள் செய்து தரப்படும்

பிறந்தநாள், மஞ்சள் நீராட்டு, திருமணம் போன்ற அனைத்து விழாக்களும். மிகத்தரமாக வீடியோ எடிட் செய்து தரப்படும். (HD வீடியோக்கள் மட்டுமே எடிட் செய்யப்படும்)

தொடர்புகளுக்கு :
**Creative Desk,**
146, Parameswara Junction, Thirunelvely.
(4390) T.P: 077 777 8529

## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தளபாடம், இலத்திரனியல் காட்சியறைக்கு
**Sales Boys** தேவை
ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
**SMART KINGS PVT (LTD)**
No.12, Point Petro Road, Jaffna.
(சி-4550) T.P : 021 454 6699

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-4529)

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் 2 பரப்பு காணியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. (4381)
தொடர்புகளுக்கு :
021 221 6002
077 839 2301

## நவீன மயப்படுத்தப்பட்ட காட்சியறையுடன்.....
## சாவகச்சேரி நகரில் மீண்டும் புதிய உதயம்
(வீ.எம்.கணபதிப்பிள்ளை தங்கமாளிகை)

Since 1955 V.M.K

# நியூ வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்



சாவகச்சேரி நகரில் கடந்த 61 வருடங்களாக 22 கரட் தங்க நகைகளை வழங்குவதில் வாடிக்கையாளர்களிடையே பெரும் நன்மதிப்பைப் பெற்ற சாவகச்சேரி வீ.எம்.கே ஜுவலர்ஸ் மீண்டும் அதே இடத்தில் புதுப் பொலிவுடன் வாடிக்கையாளர்களின் நலன் கருதி தரமான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் வழங்கி வருகின்றது.




தரம் அது என்றும் நிரந்தரம்
(4378)

இல: 15, நவீன சந்தை கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே: 021 227 0038

உரிமையாளர்: வீ.எம்.கே. புலேந்திரன்

## நீங்கள் தொழில் தேடுபவரா?

5 நட்சத்திர ஹொட்டேல்களில் 50,000/- வரை வருமானத்துடன் உடனடி வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்

O/L உடன் Business & **Hotel Management** UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE

With **FREE** >>> English Course
3 - 4 மாதங்களில்
Up to 30% Discount

- பகுதிநேர / முழு நேர தொழில் ஏற்பாடு.
- வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

100% JOB or VISA Guaranteed
கற்கைநெறி ஆரம்பம் 11th May 2016

அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
முழு விபரங்களுக்கு www.sikaram.lk

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(சி-4559)

## வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 4-ம் சந்திக்கு அருகாமையில் 240 சதுர அடி கொண்ட தண்ணீர், மின்சார வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு :
(4381) 021 221 6002, 077 839 2301

## பணிநிலை வேண்டுகை

கொழும்பில் அமைந்துள்ள தளபாட, இலத்திரனியல் காட்சியறைக்கு,
**Electrician, Furniture Fittings, Sales Boys** தேவை.
தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் கீழ்க்காணும் யாழ்ப்பாண முகவரியில் 9.30AM-12.00 PM சமுகமளிக்கவும். மேலதிக தொடர்புகளுக்கு.
**SMART KINGS PVT (LTD)**
No.12, Point Petro Road, Jaffna.
T.P : 021 454 6699

## புதிய பிரிவுகள் ஆரம்பம்



LONDON METROPOLITAN COLLEGE

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS**
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
HOTLINE : 0714150995 | 021 753 8395
(சி-4547)

உங்கள் இல்லநிகழ்வுகள், ஆலயநிகழ்வுகள், கலைநிகழ்வுகள், பொதுநிகழ்வுகள் எதுவானாலும் சிறந்தமுறையில் வீடியோ படம்பிடித்திடவும், போட்டோ அல்பம் தயாரித்திடவும், உங்கள் இல்லத்தில் நடைபெறும் எந்த நிகழ்வானாலும் *INTERNET* மூலம் மிகவும் தெளிவாக *HD* தொழில்நுட்பத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் நேரடியாக பார்த்துமகிழவும்




வானவில் கலையகம்

யாழ் நகரில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்
DVD COPY PROTECT

அதிநவீன தொழில்நுட்பத்தை உடனுக்குடன் அறிமுகப்படுத்தும் ஒரேநிறுவனம்
(4506)

330 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி)
0212229466 0772487550
www.vanavilstudio.com

SINGER

"உலகின் மிகச்சிறந்த **Dell Laptop** களுக்கு விசேட கொடுப்பனவுகள்"




4 வருடங்கள் வரை நீடித்துக் கொள்ளக்கூடிய உத்தரவாதம்

4G டொங்கல் இலவசம்




DELL - NB - i3 (DELL Inspiron 3543)
- Intel i3 - 5005U, 2.0GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

ரூ.71,999/-
விசேட விலை ரூ.65,999/-
மாதாந்தம் ரூ.4,333/- X12




DELL - NB - DC5G (DELL Inspiron 3543)
- Intel Dual Core 1.5GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

கலர் பிரிண்டர் இலவசம்

ரூ.62,999/-
விசேட விலை ரூ.57,999/-
மாதாந்தம் ரூ.3,999/- X12

நிபந்தனைகளுக்குட்பட்டது
(சி-4560)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) | 021-2225408 | பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | கொடிகாமம் | 077-7858232 |
| யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) | 021-2216320 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கிளிநொச்சி | 021-2280199 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021-2240555 | மானிப்பாய் | 021-2255343 | | |

SINGER Plus


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 08.05.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 64





# பங்காளிகளை கைவிட்ட மேதினம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஆலடி மாநாட்டிற்கு பண்டிதரைத் தவிர மற்றெல்லோரும் வருகை தந்திருந்தனர்.

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறை வணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து நின்றனர்.

**மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கில வேணிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நிழலே**

என்ற தேவாரத்தை விதானையார் விசுவலிங்கம் பாடினார்.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ கீதத்தை மூப்பர் இசைத்தார்.

**யாரிடம் செல்வோம் இறைவா..**

**யாரிடம் செல்வோம் இறைவா..**

எல்லாம் வல்ல பரம பிதாவே தாங்கமுடியாத வெப்பத்தைத் தணித்து அவதியற்ற வாழ்வு வாழ உமது கருணை மழையைப் பொழிந்தருளும்...

இறைவணக்கத்துடன் அனைவரும் ஆலடியில் அமர, வாத்தியார் மாநாட்டுக்கு தலைமை தாங்கினார்.

**விதானையார்:** வாத்தியார் பண்டிதர் ஐயாவின்ர உடல் நிலை எப்படி இருக்குதாம்.

**வாத்தியார்:** இன்று காலையில வைத்தியசாலைக்குப் போய்ப் பார்த்தனான். கடும் வெப்பத்தால சோடியம் உப்புக் குறைந்து போனதால ஏற்பட்ட வருத்தம் தானே.

**கங்காணி:** வயது போன நேரத்தில இந்த வெயிலில திரியிறதைத் தவிர்ப்பது நல்லது. சோடியம் குறைஞ்ச உடன அலுப்பு, சோம்பல் ஏற்படுகுது. நிலைமை கடுமையாகப் போனால் உயிராபத்தும் ஏற்படும்.

**மூப்பர்:** வெளியில திரிஞ்சால் மட்டுமல்ல வீட்டில இருக்கவும் மயக்கிற மாதிரித்தானே இருக்குது.

**கங்காணி:** மூப்பர் பொதுவில இந்த வெப்ப காலத்தில நாங்கள் அனைவரும் மிகக் கவனமாக இருக்கவேணும்.

அந்தக் காலத்தில ஒவ்வொரு வீட்டிலும் மோர்த் தண்ணி கரைத்து இருக்கும் . உப்பும் சேர்த்திருப்பினம். வெயில் காலம் எண்டால் அப்ப மோர் தானே குடிக்கிறது.

**விதானையார்:** இப்ப மோரை எங்க காணுறது. நாசமாப்போன சோடாக்கள் வந்தபிறகு மோர்த் தண்ணி, ஊறுகாய்த்தண்ணி எல்லாம் மலையேறிற்றுது.

**கங்காணி:** விதானையார் எங்கட மருத்துவர்கள் மோர்குடியுங்க என்று தானே ஆலோசனை சொல்லியிருக்கினம்.கடும் வெப்பத்தால சோடியம் இழக்கப்படுவதால் உப்புச் சேர்ந்த மோர், ஊறுகாய்த் தண்ணிகளைக் குடிப்பது நல்லது. குறிப்பாக குழந்தைகள், சிறுவர்களைக் கவனமாகப் பார்க்க வேணும்.



## நீர் இழப்பை ஈடுசெய்ய மோர் குடிப்பது நல்லது

**வாத்தியார்:** பள்ளிக் கூடங்களிலும் வகுப்பறைகளிலும் காற்றாடி வசதிகளை ஏற்படுத்திமாணவர்களுக்கு காற்றோட்டமான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அதிபர், ஆசிரியர்களின்ர கட்டாய கடமை.

**விதானையார்:** கிளி. மாவட்டத்திற்குள் அடங்கக் கூடிய ஒரு பாடசாலையில உள்ள வகுப்பறையில காற்றாடி பொருத்தப்பட்டிருக்கிறதாம். இருந்தும் காற்றாடி இயங்கினால் மின் கட்டணம் அதிகரிக்கும் என்று சொல்லி காற்றாடியை இயக்குவதற்கு அந்தப் பாடசாலை அதிபர் விடுகிறதில்லை என்று ஒரு குற்றச்சாட்டு.

**மூப்பர்:** கடவுளே! கரண்ட் காசைப் பார்க்காமல் பிள்ளைகளின்ர வசதியைப் பார்க்கவேணும். இந்தக் கடும் வெக்கைக்கு (f) பானும் இல்லை என்றால் என்ன கதி. ஆகையால ஒவ்வொரு பாடசாலைகளிலும் உள்ள வகுப்பறைகளுக்கு (f) பான் பூட்டி இயங்க வைக்கவேணும்.

**விதானையார்:** எல்லா பானும் வேலை செய்தால் அந்த மின்கட்டணத்தை அதிபர்கள் எப்படிச் செலுத்துகிறது என்றொரு பிரச்சினை எழத்தானே செய்யும்.

**வாத்தியார்:** இந்த வெப்பமான காலத்தில பாடசாலைகளில ஏற்படுகிற அதிகரித்த மின் கட்டணத்தை அரசாங்கம் ஈடு செய்யவேணும் அல்லது ஏதாவது சலுகையாவது செய்யவேணும். ஏனென்றால் கடும் வெப்பத்தால பலரும் வீடுகளுக்கு ஏசி பூட்டியிருக்கினம். மாதம் முடிய இருபதாயிரம், முப்பதாயிரம் என்று லைற்பில் வரும்.

இந்த மேலதிக செலவை ஈடுசெய்யிறது கஷ்டம் தானே. ஆகையால வெப்பகாலத்தில ஒட்டுமொத்தத்தில மின்கட்டணத்தை அரசாங்கம் குறைப்புச் செய்தால் மிகவும் நல்லதாக இருக்கும்.

(வாத்தியார் இவ்வாறு கூற அதை ஆலடி மாநாடு தீர்மானமாக நிறைவேற்றி ஜனாதிபதி, பிரதமர், மின்சார அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது)

**கங்காணி:** வாத்தியார் ஆலடி மாநாட்டிற்கு நிறையக் கடிதங்கள் வந்திருக்கு. வேலைப்பளு காரணமாக நாங்களும் ஒன்றையும் பார்க்கவில்லை.

**வாத்தியார்:** கங்காணியார் ஒன்று, இரண்டு கடிதங்களை வாசியுங்களன்.

**கங்காணி:** பள்ளிக்கூடங்களில சின்னப்பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் சிலர் அடிபோடுறதாகவும் இதனைத் தடுப்பதற்கு ஆலடி மாநாட்டில தீர்மானம் நிறைவேற்றவேணும் என்றும் ஒரு அன்பர் கேட்டிருக்கிறார்.

**விதானையார்:** கடவுளே! அதையேன் கேட்கிறியள். பிள்ளைகளுக்கு அடியாதையுங்கோ... அடியாதையுங்கோ என்று எவ்வளவுதான் சொன்னாலும் ஆசிரியர்கள் சிலர் பிள்ளைகளுக்கு அடிக்கத்தான் செய்யினம்.

**மூப்பர்:** விதானையார் பிள்ளைகள் கடும் குழப்பம் செய்தால் ஆசிரியர்கள் என்னதான் செய்யிறது.

**வாத்தியார்:** முந்தின காலத்தில நாங்கள் அடித்துத் தான் படித்தனாங்கள். ஆனால் அந்த அடி பிள்ளைகளுக்கு உடல் உள ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அந்தக்காலத்துக் பெற்றாரும் ஆசிரியர் தங்கட பிள்ளைகளுக்கு அடித்தால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கும் என்று ஏற்றுக் கொண்டினம். ஆனால் இன்றைய நிலைமை அப் படியில்லை. பிள்ளைகளுக்கு அடித்தவுடன மனிதவுரிமைகள் ஆணையம், பொலிஸ் நிலையம் இப்படியல்லவோ பெற்றோர் ஓடுகினம்.

**மூப்பர்:** வாத்தியார் அடிக்காமல், அன்பாலும் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தலாம்தானே!

**வாத்தியார்:** அடிக்கிற வாத்தியார் கோபத்தில அடித்தாலும் அன்பு இல்லாதவர் என்று நினைக்கக் கூடாது. அடித்துப் படிப்பித்த ஒரு முறைக்குள்ளால வந்த சமூகம்தானே நாங்கள். அந்த மரபுத் தொடரத்தான் செய்யுது.

எதுவாக இருந்தாலும் பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்காமல் அறிவுரை, ஆலோசனை, பெற்றோருடன் கலந்துரையாடல் என்பதனூடாக பிள்ளைகளை வழிப்படுத்துவதுதான் பொருத்தம். இதை அதிபர்களும் கண்காணித்தால் நல்லது.

இவ்வாறு வாத்தியார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# புலிகள் உருவாக்கிய கூட்டமைப்பு திட்டமிட்டு உடைக்கப்படுகின்றது




எல்லாவற்றாலும் தோற்றுப்போன ஓர் இனமாகத் தமிழினம் தன்னைப் பதிவு கொள்கிறது என்று கூறுவதில் தவறில்லை. போருக்குப் பின்பான தமிழினத்தின் அவலம் சொல்லிமாளா. போர்க்கால சூழ்நிலையில் தமிழ்மக்கள் சந்தித்த அவலங்கள் ஒரு வகை.

போருக்குப் பின்பான சமகால சூழ்நிலையில் தமிழினம் சந்திக்கின்ற அவலம் இன்னொரு வகையாகவுள்ளது.

போர்க்காலத்தில் இலங்கை அரசு நடைமுறைப்படுத்திய பொருளாதாரத் தடை, கடல் வலயத் தடைச் சட்டங்கள், போக்குவரத்து இடையூறுகள் என்பன காரணமாக தமிழ்மக்கள் தம் சீவனோபாயத்திற்காக ஏங்கிய காலங்கள் ஏராளம்.

கூடவே சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களில் தங்கியிருந்த நிட்டூரங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

இவ்வாறு போர்க்கால சூழ்நிலையில் பட்டலைந்து அனுபவித்த துன்பங்கள் ஏதோவொரு நோக்கத்திற்கானது - இலட்சியத்திற்கானது என்ற நினைப்பில் ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தும் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மண்மீட்பு என்ற உயரிய நோக்கத்திற்காக எங்கள் பிள்ளைகள் தங்கள் இன்னுயிர்களையே தியாகம் செய்யும் போது பாணுக்கும் பயணத்திற்கும் வரிசையில் நிற்பதால் கால் வலிக்காது. மாறாக அதைக் காலம் வரலாறாகப் பதிவு செய்யும் என்று கருதப்பட்டதால் போர்க்காலத் துன்பங்களின் அனுபவிப்புகள் மண்மீட்பிற்கான பங்களிப்பாகவே கருதப்பட்டன.

எத்தனையோ தியாகத்தின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட விடுதலைப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தோடு தோற்றுவிட்டது என்ற செய்தி செய்த தியாகங்களை அர்த்தமற்றதாக்கி; அனுபவித்த துன்பத்தை மேலும் உயர்த்திக் கொண்டது.

30 ஆண்டுகள் போராட்டத்தின் முடிவு இதுதானா? என்ற போது தமிழினத்தின் தலைவிதி இது வென்றால் என்ன செய்ய முடியும் என்ற இதயத்தின் வெம்பலோடு தமிழ்மக்கள் மௌனமாகினர்.

இந்த மௌனம் பேசுமாக இருந்தால், அதனை இந்த உலகம் தாங்கிக் கொள்ளாது என்பதனாலோ என்னவோ தமிழ்மக்களின் மௌனம் கலையாமலே உள்ளது.

இவை போரியல் தோல்வி தந்துவிட, போருக்குப் பின்பான ஆட்சி அதிகாரத்தின் அடாவடித்தனங்களும் அடக்கு முறைகளும் வெறுப்பை ஏற்படுத்தும் பேரினவாதக் கதைகளும் நொந்து போன தமிழ் உள்ளங்களைத் துளைத்துத் துளைத்து சேட்டைவிடுகின்றன.



## பங்காளிக் கட்சிகளை ஓரங்கட்டிய மேதினம்



நல்லாட்சி மலரட்டும் எங்கள் துன்பம் அதனோடாவது கழுவுண்டு போகும் என்று நினைத்தால் நல்லாட்சியும் தமிழர் நலன் என்றவுடன் நடுங்குகிறது.

தமிழ்மக்களின் வாக்குகளே எங்களின் வெற்றிக்குக் காரணம் என்பதுகூட மறக்கப்பட்டுப் போகுமளவில் நல்லாட்சியின் போக்கும் அமைந்துள்ளது.

ஆக, அவர்கள் ஒருபோதும் தமிழ்மக்களின் நலன்பற்றிச் சிந்திக்கமாட்டார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை தமிழினம் அழிந்தொழிந்தால் இது தனிச்சிங்கள நாடாகுவது சாத்தியமாகிவிடும் என்ற நினைப்பே உள்ளது. ஆகையால் அவர்கள் எதுவும் தரப்போவதில்லை என்ற முடிவுக்கு தமிழ்மக்கள் வருவதில் தவறில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், போருக்குப் பின்பான தமிழர் தலைமை பற்றி நினைத்தால் சிங்கள ஆட்சியாளர்கள் பரவாயில்லை என்று சொல்லிக் கொள்ளலாம். அந்தளவுக்கு தமிழ் அரசியல் தலைமை மிக மோசமான போக்கில் பயணிக்கின்றது. தமிழ்மக்களின் எதிர்காலம், அவர்கள் உரிமை, நடந்து முடிந்த போரில் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கான நிவாரணம், போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனை, போரில் குடும்பத் தலைவனை இழந்து குடும்பச் சுமையைத் தாங்கி நிற்கும் இளம் விதவைக் குடும்பங்களின் நிலைமை இவை பற்றி எந்தக் கவலையும் சிந்தனையும் இல்லாத ஒரு சுகமான பதவி அனுபவிப்பில் தமிழ் அரசியல் தலைமை உள்ளது.

போர் முடிந்து ஆறு ஆண்டுகள் கடப்பதற்கு முன்னமே பதவி ஆசையில் மூழ்கிக்கொண்டவர்கள் இப்போது விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து தனிக்கட்சியாக இயங்கி முழுப்பதவிகளையும் தாங்களும் தங்கள் குடும்பம் சார்ந்தவர்களும் ஆண்டு அனுபவிக்க திடசங்கற்பம் பூண்டு விட்டனர் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதற்கான சான்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய 2016 மேதின நிகழ்வாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கியதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில் இழுத்தடிப்புச் செய்த தமிழரசுக் கட்சியினர் கூட்டமைப்பை உடைத்து தனித்து தமிழரசுக் கட்சியை மட்டும் நிலைநிறுத்த சதித்திட்டம் தீட்டினர்.

இதன் விளைவுதான் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சி மருதனார்மடத்தில் நடத்திய மேதின நிகழ்வாகும்.

பங்காளிக் கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும் என்று அறைகூவல் விடுத்த இரா.சம்பந்தர் ஐயாவின் வயதிற்கும் அனுபவத்திற்கும் அவர் விடுத்த அறைகூவல் பச்சைப் பொய், போலித்தனம், கபடத்தனம் என்று நினைக்கும்போது, கடவுளே உன்னாலும் தமிழினத்தைக் காப்பாற்ற முடியாது என்று கூறுவதைத் தவிர வேறு எதைத்தான் நாம் சொல்ல முடியும்.

விதுரன்




# பறக்கும் முதலை

ஒரு தாய் இருந்தாள். அவளுக்கு மூன்று மகன்களும், மிக அழகான ஒரு மகளும் இருந்தனர்.

மூன்று சகோதரர்களும் வேட்டைக்குச் சென்றிருந்த போது, ஒரு பறக்கும் முதலை அந்த அழகான பெண்ணைத் தூக்கிச் சென்றுவிட்டது.

தங்கையைத் தேடி மூன்று சகோதரர்களும் புறப்பட்டனர்.

பறக்கும் முதலை, தன் உடலை வளையம் போல் வளைத்து மத்தியில் தங்கையை வைத்திருப்பதை அவர்கள் பார்த்தனர்.

மூத்த சகோதரன் முதலை மேல் ஒரு கல்லை வீசினான்.

முதலை தன் தலையைத் திரும்பிப் பார்த்த சமயத்தில் அவன் அதன் மேல் குதித்து தங்கையைத் தூக்கிக் கொண்டு ஓடினான்.

முதலை பறந்து வந்து அவர்களைப் பிடித்தது. மீண்டும் அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு பறந்தது. இரண்டாவது சகோதரன் பறக்கும் முதலை மீது அம்புகளை எய்தான். காயமடைந்த முதலை அந்தப் பெண்ணை விட்டுவிட்டது.

கீழே உள்ள பாறைகளின் மேல் விழாதபடிக்கு மூன்றாவது சகோதரன் தங்கையைத் தாங்கிப் பிடித்து அவள் உயிரைக் காப்பாற்றினான். விரைவில் அவர்கள் வீடு திரும்பினர். அவர்களுடைய அம்மா சிறந்த ஆடை ஒன்றை வைத்திருந்தாள்.

தன் தங்கையைக் காப்பாற்றியதில் முக்கிய பணியாற்றிய ஒரு சகோதரனுக்கு அந்த ஆடையை அளிக்க விரும்புவதாகக் கூறிய தாய், முக்கிய செயலை செய்தது யார்? என்று கூறும்படி கூறினாள்.

"முதலையைக் கல்லால் அடித்து நான் பலவீனப்படுத்தினேன்," என்றான் முதல் மகன்.

"நான் முதலையை அம்பெய்து கொன்றேன்," என்றான் இரண்டாமவன்.

"நான் தங்கையைத் தாங்கிப் பிடித்து உயிரைக் காத்தேன்," என்றான் இளையவன்.

அவர்கள் கூறியதைக் கேட்ட அம்மா, "மூவரும் ஒற்றுமையாக செயற்பட்டதால்தான் தங்கையைக் காப்பாற்ற முடிந்தது.

இன்னும் இரண்டு சிறந்த ஆடைகளை உருவாக்கி உங்கள் மூன்று பேருக்கும் தருவேன்," என்றாள்.

மூன்று சகோதரர்களும் மனம் மகிழ்ந்தனர்.







## விடுகதைகளும் விடைகளும்

வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
பூட்டும் திறப்பும்
காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் இருக்கக் கொப்பில்லை.
நெல்
கத்தி போல் இலை இருக்கும் கவரிமான் பூ பூக்கும் தின்ன பழம் கொடுக்கும் தின்னாத காய் கொடுக்கும்
வேம்பு
ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன?
காட்ஸ்
கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் அது என்ன?
கண்ணீர்
அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான் அவன் யார்?
மேளம்
ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?
வாய்
விடுமுறை இல்லாத கடை எது?
சாக்கடை
சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான் அது என்ன?
தீக்குச்சி
வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?
பாம்பு
யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
கண் இமை
வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?
ஆறு அல்லது அருவி
அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?
வெங்காயம்






வியாசர் பதில்கள்
அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்
வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
SMS (குறுந்தகவல்) 021 567 1532


இருபது-20இல் இலங்கை அணியின் நிலை?

ஈழத்தமிழருக்கும் இளைய தளபதிக்கும் என்ன தொடர்பு?

விராட் ஹோலியின் துடுப்பாட்டம் பற்றி?

**மதன் — கொடிகாமம்**

**லவ் பண்ணுறது மாடு மேய்க்கிற மாதிரியா?**

சரியா சொன்னீர்கள். மாடு மேய்ச்சால் சாணம் ஆவது மிஞ்சும். இந்தக் கறுமத்தில எதுவுமே மிஞ்சாதே.

**கௌசிதாஸ் — குப்பிளான்**

**நல்ல பெண்ணை எவ்வாறு இனம் காணலாம்?**

குனிந்து செல்ல வேண்டும். கையில் ஐ போன் இருக்கக் கூடாது. அன்ன நடை நடக்க வேண்டும். காலில் கீல்ஸ் இருக்கக் கூடாது. அமைதியாய் இருக்க வேண்டும். அதற்காய் பேஸ்புக்கில் இருக்கக் கூடாது. பார்க்க அழகாய் இருக்கனும். அதற்காய் பிங் பவுடர் பூசக்கூடாது இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

**கிருஷா — வரணி**

**நீங்க இந்த வெக்கையால கறுத்துப் போனீங்களாமே?**

என் சொந்தக் கலரே அதுதானம்மா.

**புகழரசன் — வல்வெட்டித்துறை**

**ஈழத்தமிழருக்கும் இளைய தளபதிக்கும் என்ன தொடர்பு?**

இளைய தளபதி இனா, ஈழத்தமிழர் ஈ யன்னா அவ்வளவுதான்.

**சுஜி — மட்டுவில்**

**சாதி மத வேறுபாட்டால் உண்மை காதலைப் பிரிக்கும் பெற்றோர்கள் பற்றி?**

இன்னும் முப்பது வருடங்களில் நீங்கள் ஒரு பெற்றோர். அப்போது இந்தக் கேள்வியை உங்களிடமே நீங்கள் கேட்டுப்பாருங்கள் அதற்கு விடைகிடைக்கும்.

**சஞ்சீவன் — யாழ்ப்பாணம்**

**உள்ளுணர்வு என்றால் என்ன?**

உங்கள் கையில் ஒரு மோதகம் இருக்கிறது அதை சாப்பிட எத்தனிக்கும் போது உங்கள் மனம் அந்த மோதகத்திற்குள் இருக்கும் பயறுடன் தேங்காய் சீனி சேர்ந்து பிசைந்து வைத்த அந்த சுவையான அமிர்தத்தை ருசிக்க எத்தனிக்கும். அப்போது அதனுள் தூளுடன் கலந்த பச்சை மிளகாய் இருந்தால் எப்படி இருக்கும். அதுபோல்தான் இந்த உள் உணர்வுகள் எப்போதும் எம்மை சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டுவிட்டுவிடும்.

**ரஜி — வல்வெட்டித்துறை**

**கோபம் வார மாதிரி ஒரு காமெடி?**

ஒரு சிறுவன் என்னிடம் வந்து வம்பிளுத்துக் கொண்டு நின்றான். நான் அவனை அவ் விடத்தைவிட்டு போகச்சொல்லி மீண்டும் மீண்டும் கூறினேன் அவன் போகவில்லை. எனக்கு கோபம் வந்துவிட்டது. அவனை அதிகாரத்துடன் வெளியேபோ என அதட்டினேன். அச்சிறுவன் அமைதியாக சொன்னான் நீங்கள் கோபப்பட்டால் சந்தானம் மாதிரி இருக்கிறது என்று.




**வேந்தன் — மட்டுவில்**

**இருபது-20இல் இலங்கை அணியின் நிலை?**

அண்மையில் இலங்கை அணி தொடர்பில் முன்னாள் அணித்தலைவர் சங்கக்கார கூறுகையில், இலங்கை அணி மீண்டும் புத்துயிர் பெறும் என கூறியிருந்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது.

**நந்தகுமார் — மானிப்பாய்**

**அரசியல்வாதிகள் பற்றி உங்கள் கருத்து?**

சண்டை என்றால் சட்டை கிழியத்தான் செய்யும் என வடிவேலு சொல்லும்போது பிணமும் எழுந்து சிரிக்கும். அப்படிப்பட்ட சண்டை பாராளுமன்றத்தில் நடந்ததே அதைப்பற்றி சொல்லவா? இல்லையென்றால் எங்கள் வாக்கில் எல்லாப் பதவிகளையும் பெற்றுவிட்டு எங்களைச் சந்திக்க வரும்போது கூட போஸ்ரர் அடிச்சு அதில் அடைமொழியெல்லாம் போட்டு கண்ட இடமெல்லாம் ஒட்டிய நாச மறுப்பைச் சொல்லவா?

**சதீஸ்வரன் — வல்வெட்டித்துறை**

**தற்போதைய வாழ்க்கைக்குத் தேவை?**

வாழ்க்கைக்கு பணம்தான் முக்கியம் என தன் மனைவி பிள்ளைகளை கவனிக்காது பணம் பணம் என அலைந்தவர் நிறையப் பணத்தை சம்பாதித்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்தார் மனைவி விவாகரத்துப் பத்திரத்தை நீட்டினாள்.

**கரன் — கரணவாய்**

**இன்றைய கல்விச் சமூகம் பற்றி?**

என் இனிய படித்த மேதைகளே, நீங்கள் KFC ல் சிக்கன் சாப்பிடுகிறீர்கள், பூட்சிற்றியில் அடித்த விலை பார்த்து பொருட்கள் வாங்குகிறீர்கள். ஆனால் தெருவோரக் கடைகளில் ஒரு கிலோ பழம் வாங்கினாலும் விலையில் அவர்களுடன் பேரம் பேசுகிறீர்கள். நீங்கள் வாங்கும் பழத்தால் கிடைக்கும் ஐந்து ரூபாய்தான் அன்றைய அவனின் இலாபமாக இருக்கும். தயவு செய்து தெருவோரக் கடைகளில் பேரம் பேசாதீர்கள்.

**ரூபகரன் — மட்டுவில்**

**ஐ.பி.எல்லில் வெல்வது யார்?**

சென்னை அணி இல்லாத ஐ.பி.எல். ஒரு ஐ.பி.எல்லா.

**உஷா — மட்டுவில்**

**பெற்றோர் ஏன் பிள்ளைகளை தனியார் கல்வி நிலயத்திற்கு அனுப்புகிறார்கள்?**

ஆறு மணித்தியாலங்களில் பாடசாலையில் படிக்காததை ஒரு மணித்தியாலத்தில் கல்வி நிலையத்தில் படிக்கும் என முட்டாள்தனமாக சித்திக்கிறார்கள் பெற்றோர்கள்.

**பிரியா**

**விராட் ஹோலியின் துடுப்பாட்டம் பற்றி?**


கிரிக்கெட் என்றால் விராட். விராட் என்றால் கிரிக்கெட்.தன்னை ஒரு கிரிக்கெட் வீரனாக ஆக்குவதற்கு போராடிய தந்தையை தனது 18 வயதில் இழந்தார். அவர் நினைவாக அவரின் ஜேர்சியில் 18 இலக்கத்தை வைத்துள்ளார்.

**சியாமளா**

**காதலித்துவிட்டு பின்னர் நண்பராக இருப்போம் என கூறும் ஆணைப்பற்றி?**

காதலியிடம் அடைய முடியாத சிலதை நண்பியிடம் சுலபமாய் அடைந்து விடலாம் என் பதற்காய் இருக்கும்.

# கவிதைக் கலசம்



நீ மின்மினி தான்
எப்போது
சூரியனை எதிர்த்திட
சபதமெடுக்கிறாயோ?
அப்போதே
நீ வீராதி வீரனாகி விடுகிறாய்
உன்னை எரித்திடும்
என்பதறிந்தும்
அவனை எதிர்த்திடத்
துணிகிறாயே
நீ வீரனல்ல மாவீரன்

மாவை. நா.கஜேந்திரன்

## கடவுளிடம் யாசகம் கேட்கிறேன்

கடவுள் இறந்து விட்டான்
இனி அவனிடம்
வாழ்க்கையைப் பிச்சை கேட்டு
யாரும் வரமாட்டீர்கள்
நீங்களே வாய்ப்புக்களை
உருவாக்கிக் கொள்வீர்கள்
மொட்டுக்களில் கிள்ளப்படும்
மலர்களும் தப்பிக் கொள்ளும்
மோட்சம் என்ற பெயரில்
கொல்லப்படுவதிலிருந்து
அன்னதானங்களை மட்டும்
நிறுத்திவிடாதீர்கள்
இதுவரை கடவுள் கொடுத்தவரம்
அது மட்டுமே
கடவுள் இல்லை எனில்
இனியேனும் கோவில்களைத்
திறந்துவிடுங்களேன்
இன்றும் வீடில்லாத எத்தனையோ
குடும்பங்கள்
வாசல் பிச்சைக் காரர்களே
நீங்கள் இடம் பெயர்வது நல்லது
இனிக் கடவுளிடம் பிச்சை எடுக்க
யாரும் வரமாட்டார்கள்.

நிலவன்

## மாளிகையானவள்

பூக்கள் மெல்ல
புதுமைகள் சொல்ல
புதினமாய் மெல்ல
அழுதிட்டே கதை சொல்ல
ஆர்வத்துடன் மெல்ல
அதிசயித்தேன் சொல்ல,
பதப்பாவை ஒன்று
கயல் மீனாய் இரண்டு
மதி முகமாய் நின்று
பூப்பறித்தது இன்று,
அழகின் அவதாரம் நாம்
கண்ணுக்கு கவர்ச்சி நாம்
கடவுள் பாதடி நாம்
காலத்தொனியிலும் நாம்
செவ்வான இரு இதழ்கள்
உடுக்கான வளை இடைகள்
மணி முத்து பற்கள்
மாளிகைக்கு அவளே சொற்கள்...

ஞா.கட்டைக்கவிதன்
நெடுந்தீவு

## குன்றிற் குமிழ்

இறுபட்ட இரு தூண் இடையில்
நீள் வட்ட முட்கம்பி நடுவில்
அடைபட்டு அகதிகளாய்
சிறைப்பட்டிருந்தோம் புலம் பெயர்வால்
அறுபட்ட கைகாலுடன்
விடுபட்ட வீடு வாசல் மறந்து -எம்
தெருவிட்ட தேஷம் கடந்து
தெரியாதிடம் ஓடினோமே....
இப் புலம் பெயர்வாலே...
உடைமைகளற்று -எம்
உறவுகள் விட்டு சின்ன
பந்தலில் பல ஒழுக்கு பள்ளமாய்
குடிசை ஒன்றை
வரிசையாய் போட்டோமே
இப் போர் செய்த
புலம் பெயர்வாலே...
ஓர்வேளை உணவுக்கு வரிசை
ஒரு பிடி கையுறையும் ஓர் நாள் வரை
ஒடுங்கிய ஓடையும் கழிவறை
ஓடும் நீரும் குடிபானமானதே
எம் வாழ்வும் குன்றில் வீழ்ந்த
குமிழியும் ஆனதே இப் புலம்பெயர்வால்

பீ.கிருஷிகன்
இளவாலை

## ஏனோ? ஏனோ?

உன் முகம் பார்த்து
முகவரி கேட்டேன்
நீயோ
மண் பார்த்து
மௌனம் சாதிக்கிறாய்
நான் -உன்
கண் பார்த்து
காதல் சொன்னேன்
நீயோ
விண் பார்த்து
விலகி ஓடிவிட்டாய்

ஏ.வி.கே.பேர்லின்

# மௌனத்தின் தேடல்- 300



## அநாதையல்ல

அன்னையின் அணைப்பில் அமுதூட்டி
அரவணைக்கும் வயதில்
அந்நியர் அட்டகாசந்தனில்
அநாதையாக்கப்பட்ட பாலகர்களே!
அன்னைக்கு அன்னையாக
ஒவ்வொருவரும்
அன்பு காட்டி
அணைத்து அமுதூட்டி
இன்பமாயிருக்கின்றீர்களே-என்னே
இறைவா உன் விளையாட்டு

பொ.புனிதன்
வரியப்புலம்

## குட்டிப் பையன்கள்

சுற்றத்தில்
சுயநலக் கிருமிகள்
பரம்பல்
குற்றச் செயலில்
ஈடுபடுத்த
முழுசாய் முதிராத
குட்டிப் பையன்கள்
தேடி...
ஏற்றம் பெற்ற
இந்தமண்
கலாசாரத்தையும்
கல்வியையும் புதைத்திட
சில விரோதங்களின்
எத்தனங்கள்....???

அராலியூர்
சோ. சிவகுமாரன்

## அவலம்

கோவணம் கட்டியோர்
கோப்பை உண்டிக்காக
சிறகிழந்த பறவைகள் போல
அந்தரிக்கின்றனரே!
உரித்துக்கள் எங்கே?
அழிந்தனரா?
காணாமற் போயினரா?
அந்தரத்தில் உலாவும்
மேகங்களே கூறுங்கள்

தான்தோன்றி
பண்டத்தரிப்பு

## மனநிறைவு

அரண்மனையில் பரிமாறப்படும்
அறுசுவை உணவை
உண்ணுவதில்
கிடைப்பதை விட அதிகமாகவே
மனநிறைவு கிடைத்து விடுகிறது
ஒரு கைபிடி சோற்றை ஊட்டிவிட்டு
உண்ணுவதில் என்பது
திண்ணம் -இங்கு
மனநிறைவில் மறைந்து
கொள்கிறது வயிற்றுப்பசி

ம.சுகின்
பூநகரி

## இறைவனின் ஆலயம்

வாட்டிய வறுமையிலும்
ஜாதி மத பேதமின்றி
ஊட்டி மகிழ்ந்து உறவாடும்
இந்தப் பிஞ்சு மனங்களே
இறைவனின் ஆலயம்

மா.செழியன்
வேலணை கிழக்கு

## உயிரும் உணவும்

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோர்
இந்த அரிய உண்மை
சிறந்த முறையிலிங்கு
வெளிப்படுத்தப்படுகின்றது
கிடைத்ததைப் பகிர்தலிலும்
உணர்வுபூர்வமாய் நெருங்கி
ஊட்டிவிடுதலென்பது
தாய்மைக்குரிய குணம்
வாய்ப்பதென்பது அபூர்வம்
நாளுமிங்கு நடப்பவைக்கு
இது பாடமாக மாறட்டும்

க.நாகராசா
நுணாவில்

## பகிர்ந்து உண்

பாத்திரத்தில் இருப்பதோ
பாதி உணவு- ஆனாலும்
பகிர்ந்து உண்கின்ற
நல்மனது -இதுபோல்
தொடரவேண்டும்
உங்கள் நல்லுறவு -அதை
கட்டிக்காக்க வேண்டியது
உங்கள் பொறுப்பு- இதுவே
எங்கள் எல்லோரதும்
பெருவிருப்பு

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## உணவே பிரதானம்

மானிட வாழ்க்கைப் பசிக்கு
பணமே பிரதானம் என
அர்த்தமற்ற புரட்சி!
நில வரட்சியைப் போக்கி
பல உணவு வகைகளின்
உற்பத்திக்கு
தொழிலாளர் புரட்சி! எழுச்சி!
இதுவே நிறைவான
உற்பத்தி திரட்சி!
மானிட வயிற்றுப் பசிக்கு
உணவே பிரதானம் என
உணர்த்தும் சாட்சியும் காட்சியும்

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் -301



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 11.05.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பாஸ்... இனி நீங்க நல்ல காற்றையும் காசு கொடுத்துத்தான் வாங்கணும்!




இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள்... உங்கள் சிறு வயதில், தெருக்களில் சிறிய வளவுகளில் டென்னிஸ் பந்தில் கிரிக்கெட் விளையாடும் போது நிகழ்ந்த சம்பவத்தை கொஞ்சம் நினைத்து பாருங்கள்.

வேர்க்க விறுவிறுக்க நீங்கள் விளையாடி களைத்து போயிருக்கும் போது, உங்கள் தெருவில் யார் வீட்டு கதவையாவது தட்டி தண்ணீர் கேட்டு இருப்பீர்கள். அவர்களும் இன்முகத்துடன் கொடுத்து இருப்பார்கள். அப்போது நிச்சயம் யாருக்கும் தோன்றி இருக்காது. தண்ணீரை ஒரு நாள் காசு கொடுத்து வாங்கும் நிலை வரும் என்று. அப்போது யாராவது, "தண்ணீர் ஒருநாள் விலைமதிப்பற்ற பண்டமாக மாறும்" என்று சொல்லி இருந்தார்கள் என்றால், இந்த சமூகம் அவரை பைத்தியமாக தான் பார்த்து இருக்கும். ஆனால் ஒரு தசாப்தத்தில் அது நடந்தது. தண்ணீர் தனி மனிதன் உரிமை என்ற நிலையிலிருந்து நிறுவனங்களின் விற்பனை பண்டமாக மாறியது. இதுதான் நாளை காற்றுக்கும் நடக்கப் போகிறது. ஆம். காற்று சந்தை பொருளாக மாறத் தொடங்கியிருக்கிறது.

### காற்றை இறக்குமதி செய்ய தொடங்கியுள்ளோம்

ஏற்கனவே, உலகில் மாசடைந்த காற்று உள்ள நகரங்களில் இந்தியாவின் டில்லி முதல் இடத்தில் உள்ளது. அந்த நகர காற்று, சுவாசிக்க தகுதியற்றதாக கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறது. எப்போதும் அனைத்து மோசமான சூழ்நிலைகளிலும் தனக்கான சந்தையை சரியாக யோசிக்கும் நிறுவனங்கள், இந்த இக்கட்டையும் தனக்கு சாதகமாக மாற்ற திட்டமிட்டு, காற்றை சந்தை பொருளாக கடை விரித்துள்ளது.

இதுநாள் வரை வாகனங்களை, மின்னணு பொருட்களை இறக்குமதி செய்து வந்த நாம், இனி காற்றையும் இறக்குமதி செய்வோம். ஆம், கனடாவை சேர்ந்த 'விட்டாலிட்டி ஏர்' என்ற நிறுவனம், கனடா காடுகளில் உள்ள தூய்மையான காற்றை, ஒரு டப்பாவில் அடைத்து வைத்து ரூ 1450 முதல் 2800 வரையிலான விலையில் விற்க தொடங்கியுள்ளது.

### எதை விற்று எதை வாங்க போகிறோம்...?

இந்த நிறுவனத்திற்கு இது புதிதல்ல. ஏற்கனவே உலகின் மாசடைந்த இன்னொரு நகரமான சீனாவின் தலைநகர் பீஜிங்கில், கடந்த ஓர் ஆண்டாக இந்த நிறுவனம் காற்றை விற்பனை செய்து வருகிறது.

குளிர்பானத்தை பல்வேறு சுவைகளில் விற்பது போல், காற்றையும் பான்ஃப் மற்றும் லேக் லூயிஸ் என்னும் இரண்டு நறுமணத்தில் ஏற்றுமதி செய்கிறது அந்த நிறுவனம்.

இது குறித்து இந்த நிறுவனத்தின் நிறுவுநர் மோசஸ், "சீனாவிலிருந்து எங்களுக்கு ஓடர் குவிகிறது. குறிப்பாக பீஜிங் மற்றும் ஷங்காய் ஆகிய மாகாணங்களிலிருந்து நாங்கள் இதுவரை 12000 போத்தல்களை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளோம்., இன்னும் ஓடர்கள் வந்த வண்ணமாகவே இருக்கிறது" என்கிறார்.

அதாவது மின்னணு உற்பத்தி துறையில் நாங்கள் தான் ஆசியாவின் தாதா என்று பிதற்றிக் கொள்ளும் சீனா, தினமும் தொன் தொன ஆக மின்னணு பொருட்களை ஏற்று மதி செய்யும் சீனா, காற்றை அதே அளவில் இறக்குமதி செய்து கொண்டு இருக்கிறது. நாளை இந்தியாவின் நிலையும் இதுதான்.

அந்த நிறுவனத்தின் அதிகாரி, "சீனாவை விட வேகமாக இந்தியாவில் காற்று மாசடைந்து வருகிறது. அதனால் எங்கள் காற்றை விற்க சரியான சந்தை இந்தியாதான்" என்கிறார்.

ஆம், அவர்கள் மிகச்சரியாகவே கணித்து உள்ளார்கள். வளர்ச்சி என்ற பெயரில் அனைத்தையும் மிக வேகமாக சுரண்டி வருகிறோம்.

நாளை நம் பிள்ளைகள் தண்ணீர் போத்தலுடன, காற்று போத்தலையும் தூக்கிச் செல்வார்கள். போத்தல் தண்ணீரை வாங்க சொல்லி நமக்கு பரிந்துரைத்த நடிகர், நடிகைகள், நாளை இந்த போத்தல் காற்றையும் வாங்கச் சொல்லி பரிந்துரைக்கலாம். இந்தியாவிற்கு அருகில்தான் நாம் இருக்கிறோம்.எனவே எமது சூழலைப் பாதுகாத்து மரம் நாட்டி மழை பொழியச் செய்து காற்றை இறக்குமதி செய்யாதிருப்போம் என சபதமிடுவோம்.

ஜூனியர் விகடன்

---

**அட! இப்படியெல்லாம் கேட் ஜெட்ஸ் இருக்கிறதா என உங்களை ஆச்சர்யப்படுத்தும் ஐந்து கேட்ஜெட்ஸ் இங்கே...**

### ஃபோன் சோப் க்ளீனர்



எல்லாவற்றையும் விட அதிக அழுக்காவது மொபைலாகத்தான் இருக்கும். இந்த ஃபோன் சோப் க்ளீனரில் ஃபோனை வைத்தால், ஒரு பக்கம் சார்ஜ் ஆகிக்கொண்டே உங்கள் ஃபோனை சானிடைஸூம் பண்ணிவிடும்.

### போட்டோ ஷேரிங் டிவைஸ்




ஒரு டெராபைட் அளவிலான இந்த சின்ன கேட்ஜெட்டில், நாலு லட்சம் போட்டோக்கள் வரை சேமித்துக் கொள்ளலாம். அதைவிட, இதிலிருந்தே நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளவும் செய்யலாம் என்பதே இதன் சிறப்பு.

### ஸ்லீப் ஹெட்பாண்ட்




பாட்டு கேட்டுக்கொண்டே தூங்கும் இசைப் பிரியர்களுக்கானது. ஸ்பீக்கரில் கேட்டால், பிறருக்குத் தொல்லை. இயர் ஃபோன் என்றால், காதை அழுத்திக் கொண்டிருக்கும் அல்லது நீளும் வயர்கள் உறங்கும்போது உங்களை உறுத்தும். அதற்காக வந்திருக்கிறது இந்த ஹெட் பேண்ட்.

சரியாக காதுக்கருகில் மிக மெல்லிய தடிமனில் ஸ்பீக்கர்கள். ப்ளுடூத்தில் இயங்கும் இதை அணிந்து கொண்டு 'வரம் தந்த சாமிக்கு' கேட்டபடியே தூங்கலாம்.

### சில்வர் மதர்



வீட்டில் வயதான தாத்தா பாட்டி இருப்பார்களென்றால், அவர்களை கவனித்துக் கொள்ள இந்த ஒரு கேட்ஜெட்டை நீங்கள் விரும்புவீர்கள். 'சில்வர் மதர்' என்ற அருமையான பெயருடைய இது நான்கு 'மோஷன் குக்கீஸ்' உடன் கிடைக்கும். அதாவது பென் டிரைவ் அளவிலான சென்சார்கள். நம் வீட்டு பெரியவர்களின் தேவைக்கேற்ப, அதை பயன்படுத்தி, அவர்களை கவனித்துக் கொள்ளலாம். ஒன்றை மெத்தைக்கு கீழே வைத்தால், அவர்களது உறக்கத்தை கவனித்து, உங்கள் போனில் இருக்கும் ஆப்-பிற்கு தகவல் அனுப்பும். மாத்திரை சாப்பிட மறந்தால் அழைத்துச் சொல்லும். இதே போன்று அவர்களது உடல்நிலை குறித்து உங்களுக்கு அறிவித்துக் கொள்வதை சேமித்து வைத்துக் கொண்டு, மருத்துவரிடம் அழைத்துச் செல்லும்போது நீங்கள் கலந்துரையாடவும் உபயோகப்படும்.

### வொண்டர் க்யூப்




உள்ளங்கைக்குள் அடங்கிவிடக்கூடிய, சதுரவடிவிலான சாதனம் இது. வொண்டர் க்யூப், சார்ஜிங் வயர், USB கேபிள், மைக்ரோ SD ரீடர், எமர்ஜென்சி சார்ஜர், ஃப்ளாஷ்லைட் எல்லாம் உள்ளடக்கிய இது வெறும் மூன்றே இஞ்ச் முதல்வன்.

# நெல்லி மரப் பள்ளிக்கூடம்



சிறுகதை

அந்தப் பள்ளிக்கூடம் கட்டப்பட்ட காலம்பற்றி இவனுக்கு எதுவும் தெரியாது.

இவனது அம்மா அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்ததாகவும் இவனது மாமா, குஞ்சியப்புமார் எல்லாம் அந்தப் பள்ளிக் கூடத்தில் படித்ததாகவும் இவன் அறிந்திருந்தான்.

மதுரமரங்கள் சூழப் பெற்ற வயல்வெளித் தாமரைக்குளத்தை தாண்டி வரம்புகளால் நடந்து ஒரு மண் ஒழுங்கையால் ஏறி இவன் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போயிருக்கிறான்.

பெரிய தாட்டான் குரங்குகள் வாகைமரங்களில் தாவுகின்ற குழைக்கடைச் சந்தியால் திரும்பி கேணியடியால் செல்லும் பிறிதொரு பாதையாலும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இவன் போயிருக்கிறான்.

சுற்றிவர மாமரங்கள் சூழப்பெற்ற கிடுகால் வேயப்பெற்ற இரண்டு மடுவங்கள் கொண்டதுதான் அந்தப் பள்ளிக்கூடம்.

இவனது அப்பு இவனைத் தோளில் உட்காரவைத்து ஒரு சரஸ்வதி பூசைக்கு மறுதினம் அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தது இவனுக்கு ஞாபகம்.

கந்தசாமி,செல்லம், சபாரத்தினம், சந்தியாப்பிள்ளை, பூமணி,கோயிலம்மா,ராசலி ங்கம், சின்னான் என்கின்ற கதிரவேலு ஆகியோருக்கு ஏடு திறந்ததும் அதேநாள் தான்.

தொய்வுக்கார மீனாட்சியம்மா என்கின்ற ரீச்சர்தான் இவனுக்கு ஆனா, ஆவன்னா சொல்லிக் கொடுத்த முதல் ரீச்சர்.

பள்ளிக்கூட வாயிலில் நெடுத்து வளர்ந்திருந்த சர்க்கரை நெல்லி மரத்தின் கீழ் வட்டமாக இருந்து 'அறஞ் செய விரும்பு' என்று கத்திக்கத்தி ஆத்திசூடி வரிகளைப் படித்ததும் இவனுக்கு நினைவிருந்தது.

வேறு பாடசாலை மாணவர்கள் 'உமா வாசகம்' படிக்க இவனும் நெல்லிமரப் பள்ளிக்கூட மாணவர்களும் 'பாலபாடம்', 'பாலபோதினி' படித்ததும் இவனுக்கு ஞாபகத்திலிருக்கிறது.

மிக நோஞ்சானாக இருந்த இவனை நாலாம் வகுப்பு காசிநாதன் 'கடுகர்' என்று செல்லமாகக் கூப்பிட்டதும் இவனுக்கு நினைவிருக்கிறது.

முரடான காசிநாதன் பின்நாட்களில் 'சண்டியன் காசி' யாகியதும் இவனது நினைவிலில்லாமலில்லை.

நெல்லிமரப் பள்ளிக்கூடத்தில் இவன் படித்த காலத்தில் பெரிய சூரியகிரகணம் ஒன்று வந்ததும் இவனுக்கு நினைவிருக்கிறது.

பொன்னையா வாத்தியார் கண்ணாடி ஒன்றில் கரும்புகை பிடித்து அதற்குள்ளால் மாணவர்களைச் சூரியன் பார்க்கவைத்ததும் இவன் நினைவில் உண்டு.

பொன்னையா வாத்தியார் கரும்பலகையில் கீறும் பூனைக்குட்டிகளின் படமும் இவனுக்கு ஞாபகமிருக்கிறது.

பொன்னையா வாத்தியாரின் மோட்டார் சைக்கிள், அச்சைக்கிளின் பின்புறமுள்ள மருந்துகள் உள்ள பெட்டி எல்லாம் அவனது ஞாபகத்திலுண்டு.பொன்னையா வாத்தியார் ஒரு முறிவு நெரிவு வைத்தியரும் விஷகடி வைத்தியரும் கூட.

நெல்லிமரப் பள்ளிக்கூடத்தின் பொறுப்பாளராக பொறுப்பாளர்போல அவர் இருந்தாலும் தலைமை ஆசிரியர் பொறுப்பு மீனாட்சியம்மா ரீச்சருக்குத்தான்.

இவன் முதலாம் வகுப்பில் படித்த காலத்தில்தான் தாமரைக்குளத்தடியில் நன்னியரின் மகன் செல்லையன் கண்டங்கருவாலை பாம்பு கடித்து மரணித்துப்போனான்.

பொன்னையா வாத்தியாரின் விஷகடி வைத்தியம் சரிவராமல் நீலம் பரிந்து சின்னானின் அண்ணன் செத்துப்போனான்.

சரஸ்வதி பூசைக்கு பூ பிடுங்குவதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும் இவனும் இவனைச் சேர்ந்தவர்களும்...பல நாட்கள் தாமரைக்குளத்தடிக்குப் போகாதிருந்ததும் இவனுக்கு நினைவிலிருந்தது.

சபாரத்தினம் தண்ணீர் அள்ளி வைக்கும் கறள் பிடித்த வாளியும் பால்பேணியும் அது வைக்கப்படும் குச்சுச் சுவரும் இவனுக்கு நினைவிலேயே இருந்தது.

பூமணி தண்ணீரள்ளி வார்க்கக் காசியும் கந்தசாமியும் இவனும் கைமண்டையில் தண்ணீர் குடித்தமையும் ஞாபகத்திலேயே இருந்தது.

இவன் அரிவரி முடித்து வகுப்பேறி முதலாம் வகுப்புக்கு வந்த சில நாட்களின் பின்பு நெல்லிமரப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு புது வாத்தியாரும் ஆங்கிலம் படிப்பிக்கவென பெரிய தோடுபோட்ட ரீச்சரும் வந்திருந்தனர்.

காசிநாதன் புதுவாத்தியாருக்கு 'முட்டுக்காய் தலையர்' என்று பட்டப்பெயர் வைத்து கதைத்ததுவும் இவனுக்கு ஞாபகம்.

குண்டான அந்த வாத்தியார் தடிப்பான ஒரு மூக்குக்கண்ணாடி போட்டிருப்பார். காதுநிறைய மயிர் சடைத்திருக்கும் அவருக்கு உண்மையிலேயே பெரிய தலை.

பல தடவைகளில் அந்த வாத்தியார் மாணவர்களை பிரம்பால் விளாசியதை இவன் அறிவான்.

பொன்னையா வாத்தியாரின் சாந்தகுணத்திற்கு நேர் விரோதம் முட்டுக்காய் தலை பஞ்சாட்சர வாத்தியார்.

நெல்லிமரப் பள்ளிக்கூடத்திற்கு மேற்கேயுள்ள வேதக்கோவில் கிராமத்தின் மாணவர்களில் பலர் இந்தப் பள்ளிக்கூடத்திலேயே படித்தவர்கள்.

ஐந்தாம் வகுப்பு வரையேயுள்ள இந்தப் பள்ளிக்கூடத்தில் மிகக்குறைவான மாணவர் உள்ள வகுப்பு ஐந்தாம் வகுப்புத்தான். அதில் ஐந்துபேரே படித்தனர்.

நெல்லிமரப் பள்ளிக் கூடத்தை உருவாக்கியவர் ஒரு சைவப் பெரியார் என்பதை இவன் அப்போது அறிந்திருக்க வில்லை. இவனது அம்மா இராமு வாத்தியார் என்கிற ஒருவரைப் பற்றி அடிக்கடி கூறியிருப்பதும் இவனுக்குத் தெரியும்.

இவனது அப்பு வேதக்கோவில் கிராமத்திற்கு பெண் எடுக்க வந்தமையால் வேதக்கோவில் கிராமத்தவரானவர்.

இவனது அம்மாவும் மாமாவும் குஞ்சியப்புமாரும் நெல்லி மரப் பள்ளிக்கூடத்தில் தான் படித்தார்கள் என இவன் அறிந்திருந்தான். இவனது மாமாவும் சின்னக் குஞ்சியப்புவும் மூன்றாம் வகுப்பில் மூன்று வருடங்கள் படித்து பின்,படிப்பை விட்டதுவும் இவனது அம்மா மூலம் இவன் அறிந்தேயிருந்தான்.

இவனது மாமாவுடன் சேர்ந்து ஆரம்ப நாட்களில் தாமரைக்குளத்தில் தூண்டில் போட்டு கெழுத்தி மீன் பிடித்தமையும் நுளம்புக்காக மதுரஸ் காய்கள் பொறுக்கியமையும் செல்லையன் செத்த பிறகு தாமரைக்குளத்துப் பாதையை மறந்தமையும்கூட இவனுக்கு நினைவிலிருந்தது.

பள்ளிக்கூடம் விட்ட பிறகு வயல் வெளியில் சின்னான் கதிரவேலுவும் சபாரத்தினமும் மல்யுத்தம் புரியும்போது கந்தசாமியே மத்தியஸ்தம் செய்வதும் கந்தசாமி சின்னானின் பக்கச்சார்பாக நிற்பதுவும் தான் சபாவின் பக்கம் நிற்பதுவும் இவனுக்கு ஞாபகம்.

ஒரு தடவை செல்லம் தன் கல்லுச் சிலேற்றால் இவனை அடித்தபோது சபாதான் இவனுக்காக செல்லத்தின் சிலேற்றை வாங்கி உடைத்தமையும் இதற்காக இவனது அப்பு செல்லத்திற்கு ஒரு புதுச் சிலேற் வாங்கிக்கொடுத்தமையும் இவனுக்கு ஞாபகம்.

சின்னச்சின்னச் சண்டைகளில் சபாவும் காசியும் இவனுக்கு துணையாக இருந்தமையை இவன் மறந்திடவில்லை.ஆனால் முட்டுக்காய் தலையர் இவனை அடித்த போது சபாவும் காசியும் கந்தசாமியும் செல்லமும் துணைக்கு வரவேமுடியாமல்போனமை இவனுக்கு ஞாபகத்திலிருந்தது.

'வாத்தியார் இவன் கிணத்துக்கட்டிலை ஏறி துலாக்கயித்தைப் பிடிச்சவன்' ஜீவகாருண்யம் தான் இந்த விசயத்தைப் பஞ்சாட்சர வாத்தியாருக்கு சொல்லிவைத்தான்.

இரண்டாம் வகுப்பில் படிக்கும் கடுகரென்ற நோஞ்சானுக்கு அன்று விழுந்த அந்த அடிகள்...இரண்டு பிரம்புகள் முறிந்து தும்பு தும்பாக.....

அடுத்துவந்த நாட்களில் வேதக்கோவில் கிராமத்து மாணவர்கள் எவரும் பள்ளிக்கூடம் போகவில்லை...கிராமமே உறுதியாக இருந்தது.

பொன்னையா வாத்தியாரின் மோட்டார் சைக்கிள் பல தடவைகள் வேதக்கோவில் கிராமத்திற்கு வந்துபோனதைப் பலர் பார்த்தார்கள்.

ஒரு தடவை தொய்வுக்கார மீனாட்சியம்மா ரீச்சரும் அவரது கணவரும் வந்து போனார்கள்.

பஞ்சாட்சர வாத்தியாருக்கு மாற்றம் கிடைத்து கிழக்கு ஊர் போனதாக ஒரு வதந்தி யும்...சிலகாலம் கிராமத் தில் உலாவியது. யாரும் அதை காது கொடுத்துக் கேட்கவே யில்லை.

வேதக்கோவில் கிராமத்தில் திடீரெனப் பள்ளிக்கூடம் ஒன்று உருவாகியது.தென்னங் குற்றிகளில் பலகை அடிக்கப் பட்ட வாங்கு மேசைகளில் மாணவர்கள் படிக்கத் தொடங் கினார்கள். காசிநாதன் சண்டிய னாக அறியப்பட்டது போலல் லாமல் சின்னான் கதிரவேலு வின் பெயர் வேதக் கோவில் கிராமத்திற்குமப்பால் பெருமை யோடு பேசப்படும் வண்ணம் அவன் இறந்து போனான்.

நெல்லிமரப் பள்ளிக்கூடம் சிலகாலம் நெசவுசாலை யாகவும்....ஒரு தற்காலிக அச்சுக்கூடமாகவும் இயங்கிப் பின்னர் வெற்று நிலமாகிவிட்டதாக இவன் அறிந்து கொண்டான்.

இவனது நண்பர்கள் சபா,ராசலிங்கம்...சந்தியாப் பிள்ளை, காசி, சின்னான் கதிரவேலு ஆகியவர் களை ப்போல... இவனது நினைவுக ளில் இன்னும் பொன்னையா வாத்தியார்,மீனாட்சியம்மா ரீச்சர்,பஞ்சாட்சர வாத்தியார்...அதோடு சிதைந்துபோன...நெல்லிமரப் பள்ளிக்கூடமும்.

**நந்தினி சேவியர்**

அன்பு வாசகர்களே நீங்களும் சிறுகதைகளை சங்குநாதம் பகுதிக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

"ஆசிரியர்"
சங்குநாதம்
சிறுகதைப்பகுதி
இல.03, 02ஆம் ஒழுங்கை
பிறவுண் றோட் ,யாழ்ப்பாணம்.

# அடிக்கடி பசி எதனால்?



**அடிக்கடி பசிப்பது "என்னடா இது" என்று எரிச்சல் தருவதாக மட்டுமல்ல நீங்கள் உங்கள் உடல் எடையைக் குறைக்க அல்லது இருக்கிற உடல் எடையை அப்படியே நிறுத்திக் கொள்ள நினைப்பவரானால் அது உங்கள் திட்டத்தைப் பாழ்படுத்தி விடும்.**

நீங்கள் அடிக்கடி சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் சரியான உணவு வகைகளை உட்கொள்ளவில்லை என்றால் அல்லது போதிய அளவு தண்ணீர் குடிக்கவில்லை என்றால் உங்கள் பசியை உங்களால் அடக்க முடியாது.உங்கள் உணவு முறையை மாற்றி போதியளவு நீர் அருந்தி பசியை தள்ளி வையுங்கள். இது வேலை செய்யவில்லை என்றால் வேறு ஏதேனும் மருத்துவக் காரணங்கள் இருக்கின்றதா? என்பதை அறிய உங்கள் மருத்துவரைப் பாருங்கள்.

எப்போதும் பசிப்பதாக நீங்கள் உணர்கிறீர்கள் என்றால் நீங்கள் போதிய கலோரிகள் உட்கொள்ளாததால் இருக்கலாம். உடல் ரீதியான நடைமுறைகளுக்கு உங்கள் தேகத்திற்கு கலோரிகள் தேவைப்படுகிறது. உங்களுக்குத் தேவையான கலோரிகள் எவ்வளவு என்பதை உங்கள் வயது பாலினம் சுற்றுச்சூழல் வளர்சிதை மாற்றம் மற்றும் உங்கள் தேகச் செயற்பாடு நிர்ணயிக்கிறது.

உங்கள் தேகத்திற்குத் தேவையான கலோரிகளை நீங்கள் உட்கொள்ளவில்லை என்றர்ல் அது எப்போதும் பசி இருப்பது போன்ற உணர்வு தோன்ற காரணமாகலாம்.

தேவைப்படும் கலோரிகள் ஆளுக்கு ஆள் மாறுபடும் என்றாலும் நீங்கள் தினம் குறைந்தபட்சம் 1200 கலோரிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குக் கீழ் போகக் கூடாது.

நீங்கள் உண்ணும் உணவில் சுத்திகரிக்கப்பட்ட மாவுச்சத்து அதிகமாகவும் போதிய அளவு புரதமும் கொழுப்பும் இல்லையென்றால் பசியிருப்பதுபோல உணர வேண்டியிருக்கும். அதுவும் சாப்பிட்டு கொஞ்ச நேரத்திலேயே பசி எடுப்பது போல் தோன்றலாம். புரதமும் கொழுப்பும் வயிறு நிரம்பிய உணர்வை நீண்டநேரம் தருவதோடு நாள் முழுக்க பசியையும் குறைக்கும்.



மீன், முட்டை, பால், பால் சார்ந்த பொருட்கள் பீன்ஸ் மற்றும் கொட்டை வகைகள் எடுத்துக் கொள்ளுங்கள்.

அடுத்த தடவை உங்களுக்கு பசிப்பதுபோல் தோன்றினால் உண்மையில் அது பசிதானா அல்லது உங்களுக்கு போரடிக்கிறதா என்று பாருங்கள். உடல்ரீதியான பசியென்றால் வயிற்றுக்குள் குமுறல், தலைவலி இருக்கும். ஒரு வேலையில் முழு கவனமும் செலுத்த முடியாது.

உங்களுக்கு உண்மையில் பசியிருந்தால் சாப்பாட்டின் மேல் விருப்பம் எழும். அப்படி இல்லாமல் நொறுக்குத் தீனியைத்




தேடினால் அது உணவு நாட்டம் ஆகத்தான் இருக்கும். காலை உணவில் சுகம் தேடும் உணவுப் பழக்கம் உங்களுக்கு இருக்கலாம். அடுத்த முறை அப்படி பசிக் கிற போது கொஞ்சம் உலாவுங்கள் அல்லது ஏதாவது புத்தகம் எடுத்து படிக்கத் தொடங்குங்கள். நொறுக்குத் தீனியில் இருந்து மனதை விலக்கி வையுங்கள்.

போதிய அளவு நீர் அருந்தியும் உணவில் மாற்றங்கள் செய்தும் அடிக்கடி பசியென்றால் வேறு ஏதேனும் காரணம் மறைந்திருக்கலாம்.

நீரிழிவு நோய் காரணமாக அதிகம் பசியெடுக்கலாம். ஹைபர்தைராடிசம் ஒரு காரணமாக இருக்கலாம். பதற்றமும் இங்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும். கிரேவ்ஸ் (Grave's disease) அல்லது ஹைபோகிளைசீரியா கூட காரணமாகலாம்.

சில குறிப்பிட்ட மருந்துகளும் பசியைத் தூண்டி விடலாம். மனச்சோர்வுக்கு எடுத்துக் கொள்ளும் மாத்திரைகளுக்கு பசியைத் தூண்டும் பக்கவிளைவுகள் உள்ளனவாம்.

அடிக்கடி ஏற்படும் பசிக்கு மருத்துவக் காரணங்கள் எதுவும் இல்லை என்பதை உங்கள் மருத்துவரிடம் காட்டி உறுதி செய்து கொள்ளுங்கள்.

## தட்டிக் கொண்டே இருங்கள்!



பிரபல தொழிலதிபரைப் பார்த்து ஒரு இளைஞன் உங்களது வெற்றியின் இரகசியம் என்ன என்று சொல்ல முடியுமா? என்று கேட்டார்.

***அதற்கு தொழிலதிபர்***

இரகசியம் என்று எதுவுமில்லை வாய்ப்புக் கிடைக்குமா என்று எதிர்பார்த்து கதவைத் தட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

***இளைஞன் கேட்டான்***


வாய்ப்பு எப்போது கிடைக்கும்? கதவு எப்போது திறக்கும் என்று எப்படி கண்டுபிடிப்பது?

***தொழிலதிபர் சொன்னார்***

கண்டுபிடிக்க வழியில்லை திறக்கும் வரையில் தட்டிக் கொண்டே இருக்க வேண்டும்!



# கண் சார்ந்த விபத்துக்கள்!





**குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் தேவை. அவற்றின் காரணமாக கண் பார்வை பறிக்கப்பட்ட குழந்தைகள் ஏராளம்.**

குழந்தைகளின் வயதுக்கேற்ப விளையாட்டுப் பொம்மைகளை தேர்ந்தெடுப்பது அவசியம். குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொம்மைகளின் அட்டைகளில் வயது குறிப்பிட்டிருந்தாலும் குழந்தைகளின் தனித்திறனை அறிந்து அதற்கேற்ப விளையாட்டுப் பொருட்களை தேர்ந்தெடுப்பது தான் புத்திசாலித்தனம்.

**லேசர் துப்பாக்கி பொம்மைகள் மற்றும் லேசர் பொயின்டர்கள்**

தற்போது கல்லூரிகளில் வகுப்புகள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களின் கருத்தரங்குகளில் பயன்படுத்தப்படும் லேசர் பொயின்டர் ஒளியானது கண்களின் மீது செலுத்தப்படும்போது கண்களில் உள்ள விழித்திரையில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. எனவே அவற்றை கையாளத் தெரியாத நிலையில் அவற்றைப் பயன்படுத்துவதை தவிர்க்கலாம்.



பாதுகாப்புக் கவசம் அணியாமல் விளையாடுவது ஆபத்து!

**லேசர் விளையாட்டுத் துப்பாக்கிகள்**

அதேபோன்று லேசர் விளையாட்டுத் துப்பாக்கிகளும் குழந்தைகள் விளையாடுவதற்கு பயன்படுத்துவது அவர்களை நிரந்தரமான பார்வை இழப்பிற்கு அழைத்துச் செல்லும் விளையாட்டு என்பதை பல குழந்தைகளின் பார்வை இழப்பிற்குப் பின்னர் அமெரிக்காவின் எப்.டி.ஏ. அமைப்பு எச்சரிக்கை செய்துள்ளது.

**பங்கீ கார்டு(Bungee Cords) வடங்கள்**

பங்கீ கார்டு (Bungee Cords) வடங்கள் பயன்படுத்துவதும் பட்டங்கள் விடுவதற்காக மாஞ்சா ஏற்றிய நூல்களை பயன்படுத்துவதும் கண்களைப் பாதிக்கும் செயல்களே.

**போம் பார்ட்கன்**

நுரைகள்பொங்கி வருவதைப் பார்த்து குதூகலிக்கும் குழந்தைகள், அந்த நுரைகள் கண்களில் பாய்ந்து துடிக்கும் காட்சிகள் இப்போது அதிகரித்து விட்டது. அவற்றைத் தடுப்பது புத்திசாலித்தனம்.

**பார்ட்டி போம்**

பிறந்தநாள் பார்ட்டிகளில் தற்போது அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. பல பிறந்த நாள் பார்ட்டிகளில் இது நெருப்புக் காயத்தினை ஏற்படுத்துகின்றது. இதனைத் தலையில் தடவிக் கொண்டு மெழுகுவர்த்தியைக் குனிந்து ஊதி அணைத்தபோது கண்களில் நெருப்புக் காயம் ஏற்பட்ட காட்சிகளையும் வாட்ஸ்அப்பில் பார்த்திருக்கின்றோம். இவற்றைத் தடுப்பது அறிவுடைமை.

**கிரிக்கெட் விளையாட்டும் கண் விபத்துகளும்**

கிரிக்கெட் வீரர்கள் ஹெல்மட் அணிந்து தான் பட் செய்வார்கள். நம் குழந்தைகள் எந்தவொரு பாதுகாப்புக் கவசமும் அணியாமலேயே விளையாடுகிறார்கள். வேகமாகப் பாய்ந்து வந்த கிரிக்கெட் பந்துகள் குழந்தைகள் கண்களைக் குருடாக்கிய சம்பவங்கள் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளாகிவிட்டன. பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் குழந்தைகளை விளையாட அனுமதிப்பது நல்லது.

**பென்சில் மற்றும் பேனாக்கள் ஆயுதமாகிப் போன அவலங்கள் நம்**

தொலைக்காட்சித் தொடர்களும் திரைப்படங்களும் குழந்தைகளைக்கூட கயமைத்தனம் உள்ளவர்களாக்கிவிட்டது. 6 வயது மாணவன், பென்சிலால் சக மாணவன் கண்களை குத்தி குருடாக்கிய செய்தியையும் இப்போது படிக்கிறோம்.

**ஆசிரியர் அடித்து பார்வை பறி போன மாணவன்**

இதுவும் அவ்வப்போது செய்தித்தாள்களிலும்தொலைக்காட்சிகளிலும் வருகின்ற ஒன்று. சிறந்த ஆளுமை பண்பு இல்லாமல் போனதற்கான உதாரணமே மேற்கண்ட நிகழ்வாகும். மேற்கூறிய இரண்டு ச ம்பவங்களும் முறையான கல்வி அறிவின் மூலம் சரிசெய்யக்கூடிய ஒன்றே.

**வோட்டர் பலூன் மற்றும் வோட்டர் கன்**

தண்ணீர் நிரப்பிய பலூன்களும் அடர்த்தியாக துப்பாக்கியிலிருந்து வெளியேறும் தண்ணீரும் பார்வையைக் குருடாக்கும் ஆயுதங்களே என்பதை எத்தனையோ கண் வைத்தியசாலைகளின் அனுபவங்கள் பாடங்கள் ஆகும்.

**கண்களில் தூசு போன்ற ஏதே னும் விழுந்து விட்டால்...:**

கண்களில் தூசு போன்ற ஏதேனும் விழுந்து விட்டால் அவற்றை எடுப்பதற்காக கண்களைக் கசக்காதீர்கள். கண்களை இலேசாக திறந்து மூடினாலே கண்ணீர் பெருக்கெடுத்து அவற்றைத் தானே வெளியேற்றிவிடும். உறுத்தல் அதிகமாக இருக்குமேயானால் சுத்தமான தண்ணீரினால் கண்களை சுத்தம் செய்வதன்மூலம் தூசுகளை அகற்றிவிடலாம்.

**கண்களில் இரசாயனப் பொருட்களால் காயம் ஏற்பட்டால்...**

கண்களில் ஏதேனும் இரசாயனப் பொருட்கள் அல்லது அசிட் தெறித்து விட்டால் கண்ணில் சுத்தமான தண்ணீரினால் கண்களின் எரிச்சல் நிற்கும் வரை அலம்பவேண்டும். பின் உடனடியாக கண் வைத்தியரைச் சந்தித்து ஆலோசனை பெறுவது நல்லது.

**பட்டாசு/ வெடி கண் விபத்துகள்**

வெடி விபத்தினால் முகத்தில் காயம் ஏற்பட்டு கண்ணிலும் காயம் ஏற்பட்டு விட்டால் முகத்தையும் கண்ணையும் தண்ணீர் விட்டு கழுவவே கூடாது. சுத்தமான துணியைக் கொண்டு முகத்தை இலேசாக மூடி உடனடியாக வைத்தியரிடம்காண்பிக்கவேண்டும். மேலும் தீக்காயம் ஏதேனும் கண்ணில் பட்டுவிட்டால் மஞ்சள் தூள், பர்னால், பேனா மை, ஜெர்ஷியன் வைலட், பக்கத்துவீட்டார் சொல்லும் ஒயின்மென்ட் ஆகியவற்றைப் போடக்கூடாது. இதனால் எந்த அளவுக்குக் காயம் ஏற்பட்டுள்ளது என்பதை சரியாகத் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். மேலும் அவற்றைச் சுத்தம் செய்வதிலும் சிரமம் ஏற்படும்.

**தொழிற்சாலை கண் விபத்துகள்**

தொழிற்சாலைகளில் பணியாற்றும் போது கண்களில் ஏதேனும் துரும்புகள் விழுந்துவிட்டால் அவற்றை நாமே எடுக்க முயற்சி செய்யக்கூடாது. கண் மற்றும் கண்ணைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதிப்பு அதிகமாகுவதற்கு வாய்ப்பு உண்டு. ஈரமான துணி ஒன்றை கண்ணை அழுத்தாதவாறு வைத்து மூடிக்கொண்டு உடனடியாக கண் வைத்தியரைச் சந்திக்க வேண்டும். அப்போது கண்ணில் விழுந்த பொருளின் மாதிரி இருந்தால் அதனையும் எடுத்துச் செல்லவேண்டும். கண்ணில் சுற்றுப்பகுதி மரத்துப்போவதற்கு மருந்து போட்டுவிட்டு கண்ணில் விழுந்த பொருளை மிகவும் இலாவகமாக கண் வைத்தியர் எடுத்துவிடுவார்.

**கண் விபத்துகளும் சிகிச்சைகளும்**

சில கண் சார்ந்த விபத்துகளின் போது ஆழமான காயம் ஏற்பட்டவர்களுக்கு நிரந்தரமான பார்வையிழப்பினைத் தவிர்ப்பதற்காக உடனடி சிகிச்சை அல்லது அறுவைச்சிகிச்சை தேவைப்படலாம்.

கண்ணின் மேற்பரப்பில் இலேசான அடி மற்றும் காயம் ஏற்பட்டிருந்தால் வைத்தியர் ஆலோசனைப்படி மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள தேவையிருக்கலாம். இருப்பினும் நோய்த்தொற்று ஏதேனும் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

**கார்னியாவில் சிராய்வு (Carn eal Abrasion)**

நமது கண்களில் உள்ள கார்னியா என்பது மிகவும் மென்மையான ஒளி ஊடுருவச்செல்லக்கூடிய இரத்தக்குழாய்கள் ஏதும் இல்லாத நிறமே இல்லாத ஒரு திசுவாகும். பொதுவாக கண்களில் முன்புறம் வெளிப்பகுதியில் காயம் ஏதேனும் ஏற்பட்டால் அதிக பாதிப்புக்குள்ளாவது இந்த கார்னியா எனப்படும் விழிவெண்படலம்தான்.மேலும் கார்னியாவைச்சுற்றியிருக்கும்வெண்மையான ஸ்க்ளீரா எனப்படும் விழி வெண்படலமும் பாதிப்படையலாம். காயத்தின் காரணமாக நோய்த்தொற்று வாய்ப்பு அதிகம் என்பதால் உடனடியாக வைத்தியரின் கவனிப்பு அவசியம். பிரச்சினையைப் பொறுத்து பார்வையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மருந்து சிகிச்சை முதல் சத்திரசிகிச்சை வரை தேவைப்படலாம். நமது விரல் நகங்கள், பென்சிலைக் கூராக்கும்போது வெளிப்படும் மரத்தூள்கள், காபன் துகள் கூட கார்னியாவில் சிராய்ப்பினை . ஏற்படுத்தலாம்.

**கண்ணுக்குள் வெளிப் பொரு ட்கள் விழுதல் (Foreign Body Sensation)**

கண்ணுக்குள் ஏதேனும் விழுந்துவிட்டால் ஆங்கிலத்தில் அதனை (Foreign Body Sensation) என்பார்கள். இரும்புத்துகள்களோ, இரசாயனப் பொருட்களோ, சிறுபூச்சிகளோ அல்லது தொழிற்சாலைகளில் எதேனும் உலோகப் பொருட்களோ கண்ணுக்குள் விழுந்து விட்டால் விழுந்து விட்ட பொருளின் மாதிரியை வைத்தியரிடம் காட்டுவதற்காக எடுத்துக்கொண்டு உடனடியாக கண் வைத்தியசாலைக்கு செல்வதே சிறந்தது. காயப்பட்ட பகுதி அல்லது பாதிக்கப்பட்ட கண் மரத்துப்போவதற்கு சொட்டு மருந்திட்டு அந்தப் பொருட்களை வைத்தியர்கள் எடுத்துவிடுவார்கள். தாமாகவே எடுப்பதற்கு முயற்சிப்பது ஆபத்தானது.

**கண்ணில் இரத்தம் வடிதல் (Sub conjunctival Hemorrhages- Eye Bleeding)**

கண்ணில் உள்ள விழி வெளிப் படலத்திற்கும் (Sclera)- ஸ்கிளீரா) மற்றும் இமை இணைப்புப் படலத்திற்கும் (Conjunctiva- கன்ஜங்க்ட்டிவா) இடையே உள்ள இரத்தக் குழாய்களில் பிளவு ஏற்படுவதால் இரத்தம் வெளியேறி கண் வெந்து போகலாம். இது பொதுவான சிறிய பிரச்சினைதான். கண் வைத்தி யரிடம் ஆலோசனை பெற்று உடனடி சிகிச்சை எடுத்துக்கொள்ளலாம். விரைவில் சரியாகிவிடும்.

**கருவிழியில் காயம்: (Traum atic Iritis)**

கண்ணின் முன்பகுதியில் ஏதேனும் ஒரு வகையான பொருள் பந்து அல்லது கைகள் மோதுவதால் ஏற்படுவது இதற்கு உடனடிசிகிச்சை அவசியம். பார்வை குறைவதற்கான வாய்ப்பும் அதிகம் உள்ளது.

**கண்ணின் புற அமைப்பு சிதைவது (Hyphemas and Orbital Blowout Fractures)**

கிரிக்கெட் மட்டை ஹொக்கி மட்டை பேஸ் போல் அல்லது மட்டை போன்ற பொருட்கள் தாக்கி கண்ணின் முன்னறையில் (Anterior Segment) இரத்தம் வருவது மற்றும் கண்ணின் முன்புற அமைப்பு சிதைவது. இதற்கு உடனடி தீர்வு கண் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவை தொடர்பு கொள்வதே. அடிபட்டவர் கண்



ணாடி அல்லது கொன்டாக்ட் லென்ஸ் அணிந்திருந்தால் உடனடியாக அவற்றை பக்குவாகஅகற்றி விடுவது அவசியம். பாதிப்புக்கு ஏற்றவாறு கண் வைத்தியர் தனித்தோ அல்லது பிறதுறை வைத்தியரின் துணை கொண்டோ உரிய சிகிச்சையை வழங்குவார்.

**முக்கிய அறிவுரை**

வேலைவாய்ப்பு ,தொழில் அதிலும் விரும்பிய கனவுவேலை மற்றும்தொழில்வாய்ப்பு அமைவது ஒரு வரம். ஒருவேளை நீங்கள் ஆசைப் படும் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலுக்கு ஏற்ற உடல் தகுதி தேவையெனில் அந்த உடல் தகுதி உங்களுக்கு இருக்கிறதாஎன்று கவனித்து செயற்படுவது அவசியம்.

குறிப்பாக கண்ணின் பார்வைத்திறன் நீங்கள் விரும்பும் கனவுப் பணிக்கு ஏற்றபடி இருக்க வேண்டும். மாறாக ஏமாற்றி அந்தக் கன வுப் பணியில் சேர்வது மிகவும் ஆபத்தான ஒன்று.

உங்கள் கனவு மற்றும் இலட்சிய வேலை வாய்ப்புக்குத் தேவைப்படும் பார்வைத்திறன் (Power) ஐ சிகிச்சை மூலம் பெற்றுக்கொண்டு அந்தப் பணியில் சேர்வது எதிர்காலத்திற்கு ஆபத்தானதாகக் கூட முடியலாம். எனவே பாதையை மாற்றிக்கொண்டு வேறு பயணத்திற்கு வேறு வேலை வாய்ப்பிற்கு முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்.

ஏனெனில் நம்வாழ்வின் செயற்பாடுகளில் 75 சதவீதம் நமது கண்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

# எட்டு கப்டன்களை உருவாக்கிய டோனி



சிலர் கிங்காக இருப்பார்கள், இன்னும் சிலர் கிங் மேக்கர்களாக இருக்கார்கள். கிங்காகவும், கிங் மேக்கராகவும் இருக்க முடியும் என்றால், அவர் இரண்டு உலகக் கோப்பையை வென்றிருக்க வேண்டும். இக்கட்டான சூழலில் அணியை கூலாக வெற்றிக்கு அழைத்து செல்பவராக அவர் இருக்க வேண்டும். அதற்கு அவரது பெயர் மஹேந்திர சிங் டோனியாகவும் இருக்க வேண்டும்.

கிரிக்கெட் என்ற விளையாட்டு இருக்கும் காலம் வரை அதில் சிறந்த கப்டன் பட்டியலில் டோனி முதல் வரிசையில் இருப்பார். ஹெலிகொப்டர் ஷாட் கிங், கடைசி பந்தில் சிக்ஸர் என எத்தனையோ சாதனைகளை அடுக்கினாலும் கோப்பையை வாங்கி இளம் வீரர்களிடம் கொடுத்து விட்டு, ஒரு ஓரமாக நின்று அவர்களின் சந்தோசத்தை கண்டு மகிழ்வதை பார்த்தால், அவரை வெறுப்பவர்கள் கூட விரும்புவார்கள்.

ஒரு கப்டன் சிறந்த அணியை மட்டும் உருவாக்குவதில்லை. அணியில் இருக்கும் அனைவரையும் சிறந்த வீரனாகவும், அணியை வழி நடத்தும் திறனையும் உருவாக்குவார். தான் இல்லாத காலத்திலும் அணி சிறப்பாக செயற்பட, சிறந்த கப்டன்களை உருவாக்குவதிலும் டோனி செஞ்சுரி அடிக்கிறார்.


விராட் கோலி, ரோஹித் ஷர்மா, முரளி விஜய், சுரேஷ் ரெய்னா, பாப் டூப்ளஸிஸ், பிராவோ, ஜாசன் ஹோல்டர், ஜோர்ஜ் பெய்லி என




பட்டியல் நீளுகின்றது.

விராட் கோலி

இந்திய அணியின் தற்போதைய டெஸ்ட் கப்டன், வருங்கால இந்திய அணியின் கப்டன், பெங்களூர் அணியின் கப்டன், டோனியின் தளபதி என சொல்லிக் கொண்டே போகலாம். இவர் இந்திய அணிக்கு வரும் முன்னரே, 19 வயதுக்கான உலகக் கோப்பையை இந்தியாவிற்கு பெற்றுத் தந்தவர். கப்டனாக முன்னரே சிறப்பாக செயற்பட்டு இருந்தாலும், டோனியிடம் இருந்து நிதானத்தை கற்றுக் கொண்டார். தனது ஆக்ரோஷமான அணுமுறையை குறைத்து, டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு வருகிறார். டோனி குறித்து கோலி கூறுகையில், "ஒரு அணியின் தலைவராக எல்லாவற்றிலும் சிறப்பாக பணியாற்ற கூடியவர். அவருடன் வெகு நாட்களாக இருக்கிறேன் என்ற முறையில் கூறுகிறேன், இன்னமும் நிறைய இருகின்றது அவரிடம் என்றார்.



**ரோஹித் ஷர்மா**

இந்திய அணியின் முக்கிய தூண்களில் ரோஹித் ஷர்மாவும் ஒருவர். நடுவரிசையில் களமிறங்கி ஆடி வந்த இவரை சச்சின், ஷேவாக் காலத்திற்கு ,பிறகு தொடக்க ஆட்டக்காரராக களம் இறக்கினார் டோனி. அதன் பிறகு இவர் செய்த சாதனைகள் பல. இரண்டு முறை இரட்டை சதம், அதிலும் இலங்கை அணிக்கு எதிராக அடித்த 264 ஓட்டங்கள் மகத்தான சாதனையாகும். ஐ.பி.எல் தொடரில் மும்பை அணிக்காக வாங்கப்பட்டபோது பொண்டிங், அந்த அணியின் கப்டனாக இருந்தார். அவர் தொடர்ந்து பார்ம் இல்லாமல் தொடர, கப்டன் பதவி ரோஹித் ஷர்மாவிடம் கொடுக்கப்பட்டது. பொண்டிங், சச்சின் போன்ற ஜாம்பவான்கள் பெற்று தர முடியாத கோப்பையை மும்பை அணிக்காக இரண்டு முறை வென்று அசத்தினார்.

**சுரேஷ் ரெய்னா**

இந்திய அணியில் டோனிக்கு கோலி தளபதிஎன்றால், சென்னை அணியில் டோனியின் தளபதி சுரேஷ் ரெய்னாதான். சென்னை அணிக்கு தடை விதிக்கப்பட்ட



போது, சென்னை அணி வீரர்கள் புனே மற்றும் குஜராத் அணிகளில் பிரிந்து ஆடும் சூழல் ஏற்பட்டது. மக்கலம், பிராவோ போன்ற உலக கப்டன்கள் அணியில் இருந்த போதும், ரெய்னாவைத்தான் கப்டன் பதவி தேடி வந்தது. அதற்கு முக்கிய காரணம் அவர் டோனியுடன் அதிகமாக விளையாடிய அனுபவம் கொண்டவர் என்பதால்தான் என்கிறார்கள். "சென்னை அணியில் டோனியின் தலைமையில்தான் நான் அதிகம் கற்றுக்கொண்டேன். என்னை ஒரு முதிர்ந்த வீரராக மாற்றியது சென்னை சுப்பர் கிங்க்ஸ்தான்" என்கிறார் ரெய்னா. சென்னை அணியில் முதல் போட்டி முதல் கடைசி போட்டி வரை அனைத்து போட்டியிலும் ஆடியவர் ரெய்னா என்பது குறிப்பிடத்தக்கது.

**முரளி விஜய்**

சென்னை அணியில் தொடக்க ஆட்டக்காரராக ஜொலித்தவர் முரளி விஜய். ஐ.பி.எல். தொடரில் வெளிநாட்டு வீரர்கள் மட்டும்



சதங்கள் அடித்து வந்த நேரத்தில், இந்திய வீரராக இருந்து இரண்டு சதமடித்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்த தமிழன். தற்போதைய பஞ்சாப் அணியின் கப்டனான இவர், இதற்கு முன்னர் கப்டனாக பெரிய தொடர்களை எதிர்கொண்ட அனுபவம் இல்லாத போதும், சென்னை அணியில், டோனி தலைமையில் ஆடியது ஒன்றையே போதுமான தகுதியாக பஞ்சாப் அணி நிர்வாகம் கருதியது போலும்.

**டிவைன் பிராவோ**

மே.இ. தீவுகள் அணியின் நட்சத்திர ஆல் ரவுண்டர். மும்பை அணியில் இருந்து 2011 ஆம் ஆண்டு ஏலத்தில், சென்னை அணிக்கு வாங்கப்பட்டார். டோனிதான் அவரை "டெத் ஓவர்ஸ்" என்று அழைக்கப்படும் கடைசி கட்ட ஓவர்களை போட பயன்படுத்துவார். சென்னை அணிக்காக பெரும்பாலும் தனது நான்கு ஓவர்களையும் கடைசியில்தான் வீசுவார் பிராவோ.



இன்று அவர் டெத் ஓவர்களின் கிங் என்று அழைக்கப்படுகிறார். இவரும் மே.இ. தீவுகள் அணியின் கப்டனாக சிறப்பாக பணியாற்றினார். டோனியின் கப்டன் யுக்திகள் தனக்கு எப்பொழுதும் ஆச்சரியம் தருவதாக கூறுகிறார் பிராவோ.

**ஜோசன் ஹோல்டர்:**

மேற்கு இந்திய தீவுகள் அணியின் உயரமான ஆல் ரவுண்டர். அந்த அணிக்காக அவர் அறிமுகமான இரண்டு நாட்களிலேயே, 2013 ஆம் ஆண்டில் சென்னை அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். அந்த ஒரு தொடரில் ஆடிய அவருக்கு, மேற்கு இந்திய தீவுகள் அணியை வ்ழி நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. 23 வயதில் அந்த அணியின் கப்டனாக ஆனார் ஹோல்டர். மே.இ. தீவுகள் அணியின் இளம் கப்டனாக வலம் வந்து, 2015 ஆம் ஆண்டு உலககோப்பை தொடரில், அந்த அணியை அரையிறுதி வரை அழைத்து சென்றார்.




**பாப் டூப்ளஸிஸ்**

தென்னாபிரிக்க அணியின் இருபது- 20 அணியின் கப்டன். 2011 ஆம் ஆண்டில், சென்னை அணி இவரை ஏலத்தில் எடுக்கும்போது இவர் யார் என்று பலருக்கு தெரியாது. அதே பாப் டூப்ளஸிஸ், 2013 ஆம் ஆண்டில், அந்த அணியின் முழு நேர இருபது- 20 அணியின் கப்டனாக அறிவிக்கப்படுகிறார். இவர் தொடர்ந்து சென்னை அணியில் 2015 வரை ஆடியவர். சென்னை அணி தடை செய்யப்பட்டபோது டோனி தலைமையிலான புனே அணியில் இடம் பிடித்தார்.

**ஜோர்ஜ் பெய்லி**

2012 ஆம் ஆண்டில், அவுஸ்திரேலிய அணியின் இருபது-20 கப்டனாக ஜோர்ஜ் பெய்லி அறிவிக்கப் பட்டபோது, பலருக்கு ஆச்சரியம். காரணம், அவர் அதுவரை எந்த சர்வதேச போட்டிகளிலும் ஆடவில்லை. எந்த சர்வதேச போட்டியும் ஆடாமல் கப்டன் ஆகும் இரண்டாவது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெரு




மையை பெற்றார். முன்னதாக 2009 முதல் 2012 வரை சென்னை அணியில் இடம் பிடித்திருந்தார் அவர். சென்னை அணிக்காக சில போட்டிகள்தான் அவருக்கு விளையாட வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இந்த நான்கு வருடங்களும் சென்னை அணியுடன் பயணம் செய்தார் ஜோர்ஜ் பெய்லி. பின்னர் அவுஸ்திரேலிய அணியின் ஒருநாள் போட்டியிலும், துணை கப்டன் பதவி அவரை தேடி வந்தது.

இந்தியாவில் மட்டுமல்லாது, உலக அரங்கிலும் டோனியின் கப்டன் யுக்திகள் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதற்கு இது பெரிய சான்றாகும். தற்போது புனே அணியில் ஆடி வரும் இலங்கை அணியின் திசர பெரேரா, விரைவில் இலங்கை அணியின் கப்டனாக அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இத்தனை சாதனைக்கு சொந்தக்காரரான டோனியின் புனே அணி, தற்போது ஐ.பி.எல் தொடரில் மோசமாக ஆடி வருகின்றது. இது குறித்து டோனி கூறுகையில்,

விரைவில் புதிய முறையில் இந்த தொடரை எதிர்கொண்டு வெற்றிப் பாதைக்கு வருவோம் என்றார்.



# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: நெஞ்சில் ஓர் ஆலயம்
பாடல்: நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
குரல்:பி.வி.ஸ்ரீநிவாஸ்
வரிகள்: கண்ணதாசன்



நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை
நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை
முடிந்த கதை தொடர்வதில்லை இறைவன் ஏட்டினிலே
தொடர்ந்த கதை முடிவதில்லை மனிதன் வீட்டினிலே

(நினைப்பதெல்லாம்)

ஆயிரம் வாசல் இதயம் அதில் ஆயிரம் எண்ணங்கள் உதயம்
யாரோ வருவார் யாரோ இருப்பார் வருவதும் போவதும் தெரியாது
ஒருவர் மட்டும் குடியிருந்தல் துன்பம் ஏதுமில்லை
ஒன்றிருக்க ஒன்று வந்தால் என்றும் அமைதியில்லை

(நினைப்பதெல்லாம்)

எங்கே வாழ்க்கை தொடங்கும் அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லம் மாறிவரும் பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்து கொண்டால் மயக்கம் தெளிந்துவிடும்

(நினைப்பதெல்லாம்)

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் சந்திரன், சிவகு மாரன் குடும்பம், சண்முகதாஸ், ஜோன்சன்ஸ் குடும்பம்-அல்லைப்பிட்டி, ரேவதி, புவனேஸ்வரி, விமலதாஸ், வீரசிங்கம். அந்தோனிப்பிள்ளை குடும்பம்.**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா


## உயிர்வலி குறும்படம்-ஓர் விமர்சன நோக்கு

உயிர்வலி திரைப்படம் ஷாலினி சாள்ஸினால் எழுதி நெறிப்படுத்தப்பட்ட குறும்படமாகும். இக்குறும்படமும் விழிப்புணர்வு குறும்பட வகைக்குள் சேர்க்கப்படக் கூடியதாக படம் வெளிவரும்போது கூறப்பட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்தில் ஊடுருவியிருந்தாலும், நேரடியாக பெண்களின்மேல் செலுத்தப்படாத வன்முறைகள் இளவயது காதலின் மூலமும் நிகழ்த்தப்படுகின்றது.

ஒரு பாலர் இன்னுமொரு பாலரின் மீது ஏற்படுத்திக் கொள்ளும் நாட்டத்தினால் ஏற்படும் விளைவுகளின் தொகுப்பு, வாழ்க்கையை முற்று முழுவதுமாக புரட்டிப் போடும் தன்மையையும் கொண்டிருக்கின்றது. அப்படியானவொரு விடயத்தினை அகழ்ந்தெடுத்து உயிர்வலி குறும்படம் மூலமாக தர முயன்றுள்ளார் இயக்குநர் ஷாலினி சாள்ஸ்.

பாடசாலையில் படிக்கும் பெண்ணொருவர் பெற்றோருக்குத் தெரியாமல் ஒரு இளைஞரை காதலிக்கிறார்.

பகுதிநேர வகுப்புகளுக்குச் செல்லாமல் காதல் களிப்பில் அவளுடைய பெரும்பாலான நேரங்கள் கரைகின்றன.




இன்னும் நெருக்கமான உறவு அவள் காதலிக்கும இளைஞருக்குத் தேவைப்பட, அவள் அவனை உதாசீனம் செய்கிறாள. ஆனால், மீண்டும்காதலனை சமாதானப் படுத்த சம்மதிக்கிறார். அதன் பின் ஏற்படும் விளைவை திரைக்கதை உத்தியின் ஊடாக சுவாரசியப்படுத்த முயல்கிறார் இயக்குநர். குறும்படத்தில் மழைக்காலம் உடபட பருவ காலங்களின் மாற்றங்கள் கூட உள்வேண்டப்பட்டுள்ளது.

குறும்படத்தின் முடிவின் உற்சக்கட்டம் திடுக்கிட வைக்கும் முடிவாக இருந்தாலும் அதற்கான நன்பகத் தன்மையை முதலிலே சில காட்சிப்படிமங்களாக கொடுத்திருக்கவேண்டும்.

முக்கியமாக தந்தையின் கதாபாத்திர சித்திரிப்பு. நுண்மையற்ற நெறியாள்கை இவ்வாறன தருணங்களில் வெளிப்படுகின்றன.


பேருந்தில் சந்திக்கும் அறிமுகமற்ற பெண்ணிடம் வேறு உரையாடல்கள் இன்றி, வெறும் அறிமுகத்துடன் முகநூல் முகவரியை வேண்டி நட்பழைப்பை விடுப்பதாகச் சொல்லும் இடங்கள் இயல்புவாதத்தை மீறியிருக்கிறது. பேருந்தில் செல்லும் அப்பெண்ணின் பாத்திர கட்டுமானம், அப்பெண் பேருந்தில் இருக்கும் ஆண்களை பார்ப்பதில் இருந்து கண்டுகொள்ள முடிகின்றது. அதனை நுணுக்கமாக இயக்குநர்கையாண்டிருக்கிறார்.

ஒளிப்பதிவு குறும்படத்தை மொத்தமாகத் தாங்கிப்பிடிகின்றது. இக்குறும்படத்தின் அழகியலை அட்டகாசமாக ஒப்பேற்றுவதில் பெரும்பங்கை ஒளிப்பதிவே வகித்திருக்கின்றது. இயக்குவதோடு மட்டும் நில்லாமல் முக்கிய வேடம் ஒன்றிலும் இயக்குநர் நடித்திருக்கிறார்.

அவரின் நடிப்பு அட்டகாசமாக பாத்திரத்தின் குணாம்சங்களில் ஒன்றவைகின்றது. பின்னணி இசையும் படததின் காட்சித்தொகுப்பும் குறும்படத்தை இன்னும் வலுப்படுத்துகின்றன.

**-அனோஜன் பாலகிருஷ்ணன்-**

## தேடிவரும் யாவர்க்கும் அருளும் அமைதியும் வழங்குகின்ற பேரருட் தலமாக விளங்கும் புதுமடம் கர்த்தராலயம்



மனிதனாய் அவதாரம் தரித்து மானிட விடிவிற்காய் தன்னுயிரைத் தியாகித்த அன்பின் வடிவம் ஆண்டவர் இயேசுவின் விண்ணகப் பெருநாளை திருநாளாகக் கொண்டாடும் புதுமடத் திருச்சபையில் இன்று பெருமகிழ்வுத் திருநாள். வலிகாமப் பெருவூரின் உடுவிலென்னும் கிராமத்தின் தென்திசையில் நீண்டிலங்கும் புதுமடம் சிற்றூரில் கர்த்தர் எனும் நாமத்தில் நூற்றாண்டுகள் கடந்திலங்கும் அற்புதத் திருத்தலம் இதுவாகும்.

சுவாமி ஞானப்பிரகாசியாரின் நேரடிக் கண்காணிப்பில் அவரது வழிநடத்தலில் தோற்றம் பெற்றது இவ்வாலயம். சிறு மண் கொட்டிலில் சாணகத்தால் மெழுகப்பட்ட தரையின் மீது திருப்பலிகண்ட சிற்றாலயம். கிராமத்தின் கத்தோலிக்கர்களால் மெய்யன்போடு தரிசிக்கப்பட்டது. மெல்ல மெல்ல வளர்நிலை நோக்கி நகர்ந்த இவ்வாலயம் இனந்தெரியாதவர்களால் தீவைக்கப்பட்டது. அத்தீயினாலே ஆலயம் முழுவதும் எரிந்து விட்ட நிலையில் கர்த்தரின் திருச்சொரூபத்தின் தலைப்பகுதி மட்டும் எவ்வித சேதத்திற்கும் உள்ளாகாமல் அப்படியே இருந்தது. அந்தத் தலைப்பகுதியை வைத்துச் செய்யப்பட்ட திருச்சொரூபமே இன்றுவரை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மெல்ல மெல்ல கட்டடங்கள் கட்டப்பட்டு இவ்வாலயம் அழகியதோர் ஆலயமாக மிளிர்ந்தது. கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி இந்து சமயத்தவர்களும் போற்றுதற்குரிய தலமாக மாற்றம் கண்டது.1995 இடப்பெயர்வின் போது யாழ். குடாநாடு முழுவதும் வெறிச்சோடிப் போனது. மக்கள் ஆராதனை செய்ய முடியாத நிலை ஏற்பட்ட போது அனைத்து ஆலயங்களிலிருந்தும் நற்கருணை ஆயர் இல்லத்தின் உத்தரவின் பேரில் யாழ்.பேராலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அவ்வாறு கர்த்தராலயத்தின் நற்கருணையை எடுத்துச் செல்வதற்காக அருட்தந்தை ஒருவர் வந்திருந்தார்.

இந்த நேரத்தில் மக்கள் யாவரும் இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். அவ்வேளை ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஆலயத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பத்தை சேர்ந்தவரும் ஆலய பரிபாலகர் பாரம்பரியத்தைச் சேர்ந்தவருமான திருமதி சின்னப்பு கனகம்மா என்பவர் “நான் இடம்பெயர்ந்து போக மாட்டேன்.இங்கே தான் இருப்பேன்.ஆதலினால் நற்கருணையை எடுத்துச் செல்ல அனுமதிக்கமாட்டேன்” என தந்தை அவர்களோடு வாதிட்டார். நீண்ட நேர வாதாட்டத்தின் பின்னர் முழந்தாள் படியிட்டு நற்கருணையை வணங்கிய அருட்தந்தை “தினமும் விளங்கேற்றுங்கள்” எனக்கூறி நற்கருணையை விட்டுச் சென்றார். சுமார் ஆறு மாதங்களாக சுவாம்பிள்ளை எனப்பட்ட பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவரோடு இணைந்து தினமும் விளக்கேற்றி நற்கருணையை வணங்கி வந்தார் 80 வயது நிறைந்த மூதாட்டியான திருமதி சின்னப்பு கனகம்மா அவர்கள்.

இவ்வாறு இக்கட்டான சூழ்நிலையிலும் இவ்வாலயத்தில் மட்டும் நற்கருணை இருந்தமை இவ்வாலயத்தின் புனிதத்திற்கு எடுத்துக்காட்டாகும். இன்றும் உத்தானத்தின் ஆண்டவர் திருச்சொரூபத்தின் முன் மண்டியிட்டுக் கேட்கும் அனைத்துத் தேவைகளும் நிறைவேற்றப்படுவது பலரின் சாட்சியங்களினூடாக வெளிப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே.

அது மட்டுமன்றி ஈழத்தில் அமைந்துள்ள கர்த்தர் ஆலயங்களில் பெரிய ஆலயமும் தனிச்சிறப்பினை உடையதும் இவ் ஆலயமே என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். நாற்பது நாட்களிலும் புனித வாரங்களிலும் பல பகுதிகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இங்கு கூடி வழிபட்டுச் செல்வது வழக்கமானதொன்றாகும். புனித வெள்ளியின் இரவில் ஆசந்தி சுற்றுவதும் இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

அவ்வகையில் தேடிவரும் யாவர்க்கும் அருளும் அமைதியும் வழங்குகின்ற பேரருட் தலமாக விளங்குகின்ற இவ்வாலயத்தினிலே இன்று விண்ணேற்புத் திருவிழா பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. பக்தியும் புனிதமும் நிறைந்த பங்குத் தந்தை அருட்திரு ஜெயரஞ்சன் அடிகளாரின் தலைமையில் புதுமெருகு பெற்று விளங்கும் இவ்வாலயம் வெள்ளென இலங்குவதைப் போல் பங்குத்திருச்சபையினராகிய எமது மனங்களும் இலங்க இறை தரிசனத்திற்காக பிரார்த்திப்போம். அன்பும் சாந்தியும் நிலவி மனங்கள் யாவும் புதுப்பிக்கப்பட அருள் வரங்களை தருகின்ற இறைமகன் திருவடியில் சரணடைவோம். தேரேறி வருகின்ற தேவமைந்தன் திருவருள் யாவர்க்கும் நிறைந்திட அவர் பாதங்களைப் பயபக்தியுடன் பணிவோம். யாவர்க்கும் இனிய விண்ணேற்புத் திருநாள் வாழ்த்துக்கள்.

**ஜே.ம.ஜோஷப்மேரி**
**ஆசிரியர்**

சினிமா செய்தி

# 24 திரைவிமர்சனம்



காலத்தை கடந்து செல்லும் ஜன்ஸ் டீனின் Time Machine கதைக் களத்தை கொண்டு ஹொலிவுட்டில் பல படங்கள் வந்துள்ளன.

அந்தவரிசையில் தமிழில் இயக்குநர் விக்ரம், கே குமார் இயக்கத்தில் சூர்யா முதன் முறையாக ஒரு மாறுபட்ட கதாபாத்திரத்தில் நடித்து வெளிவந்திருக்கும் படம்தான் 24.

கதைக்களம்

1990 இல் இரட்டை சகோதர்களான தம்பிசூர்யா (சேதுராமன்) தனது ஆராய்ச்சியான Project 24 வாட்சை கண்டுபிடிக்கிறார்.

அதை அண்ணன் சூர்யா(ஆத்ரேயா) தனக்கு சொந்தமாக்க முயற்சி செய்ய தனது தம்பி சூர்யாவையும், அவருடைய மனைவி நித்யா மேனனையும் கொலை செய்கிறார்.

ஒரு கட்டத்தில் ஒரு விபத்தில் தம்பி சூர்யாவின் குழந்தையையும், அவர் அடைய நினைத்த Project 24 யும் தவறவிட்டு கோமாவுக்கு செல்கிறார் ஆத்ரேயா.

பின்னர் 26 வருடம் கழித்து நிகழ் காலத்தில் அவர் அடைய நினைத்த Project24 ஐ அடைந்தாரா? மகன் சூர்யா பெரியப்பாவை பழி வாங்கினாரா? என்பதை பல சுவராஷ்யங்களுடன் கொடுத்திருக்கிறார் இயக்குநர் விக்ரம், கே.குமார்.

படத்தை பற்றிய அலசல்

சூர்யா சூர்யா சூர்யா... ஒருவர் இருந்தாலே மிரட்டுவார், இதில் 3 சூர்யா ஒவ்வொரு கதாபாத்திரத்திலும் கதைக்கு தேவையானதை அழகாக செய்திருக்கிறார்... அதிலும் ஆத்ரேயா அடுத்த வருட பெஸ்ட் வில்லன் விருது எடுத்து வைக்க வேண்டியது தான்.

ஆரம்பத்தில் அதிரடியாக களம் இறங்கி பின் கோமாவிற்கு சென்று வீல் சேரில் உட்கார்ந்தாலும் மிரட்டல் தான்.

சூர்யாவே முழுப்படத்தையும் ஆக்ரமிக்கிறார். சமந்தா, நித்யா மேனன் எல்லாம் பெரிதான கதாபாத்திரம் இல்லை. காதல் காட்சிகளில் டைம் மிஷின் பயன்படுத்தியது அழகாக இருக்கிறது.


படத்தின் காட்சியமைப்புக்கள் தான் தனி அப்லாஸ் கொடுக்க வேண்டும். முதன் முறையாக ஒரு ஒளிப்பதிவிற்காக ரசிகர்கள் கைதட்டுகிறார்கள். திரு சுப்பர் சார்.

ஹொலிவுட் தரம். அதிலும் அந்த மிஷினில் சாவி போட்டு திறக்கும் போது அத்தனை நுணுக்கம்... கண்டிப்பாக ஆர்ட் டைரக்ட்ரையும் பாராட்டியே ஆகவேண்டும். படத்தின் முதல் 20 நிமிடம் பிரம்மிக்க வைக்கின்றது.

ஏதோ ஸ்டின்பன் ஸ்பில்பர்க் படம் பார்ப்பது போல் இருந்தது. அடுத்தடுத்து அதே அதிரடியை கையாண்டு இருக்கலாம். கொஞ்சம் ஜனரஞ்சக ரசிகர்களுக்காக காதல் காட்சிகள் சேர்த்திருப்பது படத்திற்கு எந்த விதத்தில் பலம் என்று தெரியவில்லை.

டைம் மிஷின் மட்டுமின்றி ப்ரீஸ் (Freeze) என்ற கான்செப்ட்டும் வருகிறது. அதில் டோனியுடன் செல்பி எடுக்கும் காட்சி எல்லாம் அட்ராசிட்டி. கற்பனைக்கு அப்பாற்பட்டு ரசிக்க வைக்கின்றது.

டைம் மிஷின் என்றால் பல வருடங்கள் பயணம் செய்வதை மட்டும் பார்த்து வந்த நமக்கு 10 நிமிடத்திலிருந்து ஒரு நாள் வரை முன்னோக்கி பின்னோக்கி செல்லும்படி திரைக்கதையில் மிரட்டியிருக்கிறார் விக்ரம் குமார்.



குறிப்பாகக் கிளைமேக்ஸில் காலம் கடந்து செல்லும் காட்சி. என்ன டைம் மிஷினில் மட்டும் கவனம் செல்லுத்தியிருக்கலாம், காதலை தவிர்த்து...!. அதிலும் கிளைமேக்ஸ் அரைமணி நேரம் டைம் மிஷினுக்கே உரிய திரைக்கதையில் விளையாடுகிறார். ஏ. ஆர்.ரகுமான் எப்போதும் போல் பின்னணியில் முன்னணி என்று நிரூபித்து விட்டார்.

க்ளாப்ஸ்

சூர்யாவின் ஆத்ரேயா கதாபாத்திரம் இன்னும் நிறைய ரசிகர்களை சூர்யாவிற்கு கொடுக்கும்.படத்தின் இரண்டாம் பாதியில் வரும் டுவிஸ்ட்கள் ஆர்வத்தை தூண்டுகிறது.

ஆய்வு கூடம் 1990களுக்கு ஏற்றாற் போல் தத்ரூபமாக இருக்கிறது படத்தின் டெக்னிக்கல் விடயம். குறிப்பாக படத்தின் இரண்டாவது ஹீரோ ஒளிப்பதிவாளர் திரு. கிளைமேக்ஸ் அரைமணி நேரம் மற்றும் படத்தின் முதல் பாதி.

பல்ப்ஸ்

காதல் காட்சிகள், குறிப்பாக இரண்டாம் பாதியில் வரும் காதல் காட்சிகள் பொறுமையை சோதிக்கின்றது. அடிக்கடி சூர்யா தன்னை வாட்ச் மெக்கானிக் என்று அடிக்கடி சொல்வது சலிப்பை தட்டுகின்றது.

மொத்தத்தில் 24 டைம் மிஷினுக்குள் நம்மை அழைத்து சென்று ஒரு விஷுவல் ட்ரீட்டை கொடுத்துள்ளது.

42/100



## கபாலி சாதனை

### இந்திய அளவில் நம்பர் -1
### உலகளவில் டொப் -5

கபாலி படத்தை எப்போது திரையில் பார்க்க வேண்டும் என கோடிக்கணக்கான ரசிகர்கள் வெயிட்டிங்.

இந்நிலையில் கபாலி டீசர் நாளுக்கு நாள் சாதனை படைத்து வருகின்றது.ஏற்கனவே 1 கோடி ஹிட்ஸை தாண்ட தற்போது இந்த டீசரில் லைக்ஸ் 3.32 லட்சம் லைக்ஸ்"களை பெற்றுள்ளது.

இதன் மூலம் இந்தியாவில் நம்பர் - 1 என்பது மட்டுமல்லாமல் உலக அளவில் டொப் 5 இடத்திற்குள் கபாலி வந்துள்ளது.

நெருப்புடா



# பாதுகாப்புக்காக பாராளுமன்றத்தில் மோதிய எம்.பிக்கள்







அவசியமற்ற சூழ்நிலையில் அரசியல் தலைவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பை வழங்குவது சட்டவிரோதமான செயல் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவப் பாதுகாப்பு கடந்த 02 (02.05. 2016) ஆம் திகதி திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சால் நீக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ எம். பியின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்ட விவகாரம் மறுநாள் பாராளுமன்றத்தில் பூதாகரமாக வெளிப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து சண்டையிட்டு விழுந்தெழும்பி வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளனர்.

பலரின் உடைமைகளும் தவறவிடப்பட்டுள்ளதாக செய்திகள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை பாராளுமன்றத்தில் மோதிக்கொண்ட ஐ.தே.கவின் பாலித தெவரப்பெரும, ஐ.ம.சு.முவின் பிரசன்ன ரணவீர ஆகியோர் ஒருவார காலம் சபை அமர்வில் பங்கேற்க முடியாத தடையுத்தரவு சபாநாயகரால் கடந்த (02.04. 2016) வியாழக்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற இந்த மோதல் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டதே.

பாராளுமன்ற உறுப்பினர்கள் விசுவாசத்துக்காக மோதிக் கொண்டனர் என்றால் அது நல்ல விடயம்தானே என்று சிலர் கருதிக்கொள்ளலாம்.

தம்மைத் தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு தங்களின் பிரதிநிதியாக அனுப்பி வைத்த மக்களுக்காக இவர்கள் மோதியிருந்தால் அது உண்மையில் வரவேற்கத் தக்கதே.

மோதல் நடவடிக்கையில் ஈடுபடுவதை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது என்றாலும் போராட்டம் மூலம்; எதிர்ப்பு நடவடிக்கை மூலமே பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர முடியும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்படும் பட்சத்தில் மோதல் நடவடிக்கைகளை ஆதரிப்பவர்களுமுள்ளனர்.

ஆனால், கடந்த செவ்வாய்க்கிழமை (03.05.2016) அன்று நடைபெற்ற மோதல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகவும் தேவையற்ற ஒன்றாகவும் கருதப்படுவதால் பலரின் விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் கேலி, கிண்டலுக்கும் உள்ளானது.

நாட்டின் மிக உயரிய சபையான பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டதும் மோதலை தடுக்கச் சென்றவர்கள் சந்தர்ப்பவாதிகளாகமாறி தமது கோபத்தைத் தீர்த்துக்கொண்டதும் தெரியவந்துள்ளது.

மக்கள் பிரதிநிதிகளா? இவர்கள் என்று மக்கள் கருதும் அளவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்டதை எக்காரணம் கூறினாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது.

இராணுவப் பாதுகாப்புத்தான் வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மகிந்த ஆட்சிக்காலத்தில் கோரவும் இல்லை. அவ்வாறு கோரியிருந்தாலும் மகிந்த அரசு ஒருபோதும் வழங்கியிருக்கவும் மாட்டாது.

மகிந்தவுக்காக இன்று பாராளுமன்றத்தில் கூச்சலிடும் அவரது விசுவாசிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களும் கூட்டு எதிரணியினரும் சந்திரிகாவுக்காக எதையும் கூறாமல்மௌனமாக இருந்தனர்.

மகிந்தவுக்கு இராணுவப் பாதுகாப்புத்தான் வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளால் அவரது உயிருக்கு ஆபத்து என்று பதறுபவர்கள் சந்திரிகாவும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் அவரின் பாதுகாப்பும் நீக்கப்பட்டு உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. குண்டு வைத்து கொலை செய்ய முயற்சித்தனர் என்பதையெல்லாம் மறந்து செயற்பட்டனர்.

மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படும் வரை மக்களுக்கு பல்வேறுவகையான வாக்குறுதிகளை அள்ளி வீசி விட்டு பதவி கிடைத்ததும் தமது சுயநலத்துக்காக அதிகார ஆசையில் செயற்படுகின்றனர்.

மகிந்தவின் பாதுகாப்புக்காக மல்யுத்த களமாக பாராளுமன்றத்தை மாற்ற எத்தணித்தவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்குடன் செயற்பட்டதில்லை. இனியும் செயற்படுவார்களா என்பதும் சந்தேகமே.

எதிர்காலத்தில் பாராளுமன்றம் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்து ஜனநாயக உரிமைகளை உதறித்தள்ளி எதன் மீதும் நம்பிக்கையற்றவர்களாக வாழும் சூழ்நிலையை இந்த மோதல் சம்பவங்கள் ஏற்படுத்தி விடும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்போதுதான் வன்முறையற்ற சமூகத்தையும் பெயருக்கேற்ற நல்லாட்சி நடைபெறவும் வழிவகுக்கும்.

வன்முறைக்கு வன்முறைதான் தீர்வு என்று மக்கள் பிரதிநிதிகளே தீர்மானமெடுத்து அடிதடியில் ஈடுபட்டு அராஜகத்தில் நாட்டம் காட்டினால் நாடு நாசமாகப் போய்விடும்.

நல்லாட்சி அரசுக்கு நீங்காத களங்கத்தை ஏற்படுத்திய பாராளுமன்ற மோதல் சம்பவம் போன்று இனியொருபோதும் இடம்பெறக்கூடாது. அவ்வாறு இடம்பெறாது என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மக்கள் மதிக்க வேண்டும். அவர்களை தமது பிரதிநிதிகளாக ஏற்று, கொண்டாட வேண்டும். அத்தகைய சிறப்புக்களை மக்கள் பிரதிநிதிகள் கொண்டிருப்பது மிகமிக அவசியம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டதற்காக பாராளுமன்றத்தில் மோதல் இடம்பெற்றது அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியது என்பதை யாருமே மறுக்க முடியாது.


இதுபோன்ற சம்பவங்கள் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடே. மோதலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபாநாயகரால் வழங்கப்பட்ட தடையுத்தரவு தண்டனை போதாது என்றும் நாடாளுமன்றில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கருத்துக்களையும் கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்துவதைவிடுத்து இனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுக்க வேண்டும்.

நாடாளுமன்றின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை ஒரு சிலரின் நலனுக்காக கெடுத்துக்கொள்ள சந்தர்ப்பமளிக்கக்கூடாது. நல்லாட்சியில் நாடாளுமன்றில் நடந்த சம்பவம் வேறு எந்த ஆட்சியிலும் தொடராது நல்லாட்சியாளர்களே இத்தகைய சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

**எஸ்.ஆர்.கரன்**

# facebook

# ஊமை நெஞ்சின் ஓசைகள்



பால் வைச்சு தண்ணியும் வாத்து பிள்ளை குளிச்சிட்டும் வந்திட்டுது. இனிமேல் பிள்ளை வெளிக்கிட்டு வெளியாலவர எப்பிடியும் குறைந்தது மூண்டுமணித்தியாலம் எண்டாலும் எடுக்கும். சொந்த பந்தங்கள் எண்டு நிண்ட சனாங்களும் திருப்பி வெளிக்கிடவெண்டு வீடுகளுக்குப் போனதாலேயும், வீடீயோ அண்ணையும் கோலை ஒருக்கா படம் பிடிக்க போனதாலேயும், மேக்கப்புக்காரியும் பிள்ளையின்றை அம்மாவும், நானும் தான் வீட்டில தனியா நிண்டோம். எனக்கு பொழுது போகாதபடியால் அங்கு மேசையில் இருந்த சில விளம்பரப் பேப்பர்களை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு மனிசன் மெல்லெனக் கதவைத் திறந்து அடிக்குமேல் அடிஎடுத்து.., கிட்டத்தட்ட ஒரு வெறிகாரன் போல பக்கத்திலிருந்த கதிரையையும் பிடித்து நடந்து வந்து, மூச்சையிழுத்துக் களைப்பாறுவது போல், சாடையாக என்னையும் பார்த்துப் புன்னகைத்தபடி முன்னிருந்த சோபாவில் அமர்ந்தார். என்னடா இந்த மனுசன் விடிகாலையிலேயே வெறியுடன் வந்திருக்கிறாரே எண்டு மனம் சங்கடப்பட்டுக் கொண்டது.

அந்தவீட்டுக்கார மனுசியும் ஆ... கயனண்ணை இந்தாங்கோ பலகாரம் சாப்பிடுங்கோ தேத்தண்ணி குடியுங்கோ எண்டு ஒரு பலகாரத் தட்டையும் தேத்தண்ணியையும் முன்னால் வைத்து விட்டு நகர்ந்து விட்டாள்.

எனக்குஅவரைப் பார்க்கும் போது எங்கேயோ பார்த்த முகம் போல இருந்தாலும் உடனே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அண்ணை நீங்களும் பலகாரம் சாப்பிடுங்கோவன் என்று என்னைப்பார்த்துக் கேட்க, நானும் இப்பதான் சாப்பிட்டனான் எனச் சொல்லி மறுத்துவிட்டேன். அவர் கொஞ்சம் குனிந்து, தட்டிலிருந்த பலகாரத்தை எடுக்க அவர் பட்ட கஷ்டத்தை என்னால் பார்க்க முடியாமல் இருந்தது.

கைவிரல்கள் நடுங்கியபடியே அதை எடுத்து வாயில் போடும்போது அவர் பட்ட அவஸ்தையும் அதற்கெடுத்த நேரமும் அவர் வெறியில் இல்லை. அவர் ஒரு சுகமில்லாதவர் என்பதை என்னால் தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருந்தது.

நான் பார்த்த பேப்பரை வைத்துவிட்டு உங்களுக்கு என்ன,பெயர் எங்கே இருக்கின்றீர்கள் எனக் கேட்க, ஒருகொஞ்சத் தூரத்திலேதான் இருக்கிறன், தன்ரை பெயர் கஜேந்திரன் என்றும், கஜன் எண்டு கூப்பிடுவினம் எண்டு சொல்லிப் போட்டு என்னையும் விசாரித்தார்.

அவர் கதைக்கும்போது தலையும் சேர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தது. நான் இங்கே படமெடுக்கவந்தனான் என, நான் இருந்து வந்த சிற்றியின் பெயரையும் சொன்னபோது, அப்ப என்னைத் தெரிந்திருக்க வேண்டுமே..? நான் அப்போது உங்கட இடத்துக்குப் பக்கத்திலுள்ள சிற்றியிலேதானே புட்போல் விளையாடினனான் எண்டும், கஜன் எண்டால் என்னைக் கனபேருக்குத் தெரியும் எண்டும், ஒருபெருமிதச் சிரிப்போடு அவர் சொன்னபோது எனக்கு வியப்பாகவும், பெரும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

அந்தக் கஜனா.., நீங்கள்..!

ஆம் என்று ஒரு குழந்தைபோலச் சிரித்தார். என்ரை மனம் ஒருகணம் ஆடி அடங்கி நின்றது.

அந்தக் கஜனா..? அவனா இவன்..!? அவன் எங்கே..!இவன் எங்கே..!? அவனின் அந்த அழகுத் தோற்றம், கம்பீரம், விளையாட்டு வீரனுக்கான அந்த ஸ்ரைல் எங்கேயெல்லாம் மறைந்து போனது?

ஆனால் இவனோ.., முகமெல்லாம் அதைச்சு கண்களெல்லாம் உள்ளேபோய் முதுகும் வளைந்து கூனிக்குறுகிப் போய்..

கஜன் அப்ப என்னையும் தெரிந்திருக்கவேணுமே..? அப்போ எங்களுடைய சிற்றிக்காக நானுந்தானே விளையாடியவன். ஞாபகம் இருக்கா என்று கேட்டபோது கண்களைக் கசக்கியபடியே, என்ன பெயர் சொன்னீங்கள் என்று திரும்பக் கேட்டு யோசித்தபடி.., அப்போ பாட்டெல்லாம் பாடுறவன் நீதானே என்று கேட்க நானும் தலையாட்ட, அவன் முகத்திலே அளவில்லா ஆனந்தத்தைக் காணக்கூடியதாய் இருந்தது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 714

Search for people, places and things Nagendram Home


அச்சு




மது




புகழ்



சுரேஸ்குமார்



தர்சினி




நிசாந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 32

## அநாவசிய கட்டுப்பாடுகள் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல

பகுதி -4

மகிழ்ச்சியான வாழ்க்கை முறை ஆரோக்கியத்தின் அடிநாதமாக இருக்கிறது. மகிழ்ச்சியான வாழ்க்கை முறையை குழப்பும் அநாவசியமான கட்டுப்பாடுகளை தளர்த்த முயற்சிப்பது பயனுடையதாக அமையும்.

தினமும் 30 தொடக்கம் 90 நிமிடங்கள் வரை TV பார்ப்பது சுகாதார சீர்கேடுகள் எதனையும் ஏற்படுத்திவிடாது.நண்பர்கள், குடும்பத்தவர்கள், அயலவர்களுடன் சிறிது நேரம் அரட்டை அடிப்பது ஆரோக்கியமானது.

இது மூளையின் சில பகுதிகளுக்கு அமைதியையும் ஓய்வையும் கொடுக்கும். கணனி, கைத்தொலைபேசி என்பன எமது வேலைகள் பலவற்றை இலகுவாக்குகின்றன. இவற்றை தேவைக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவது தவறு ஆகாது. ஆனால் இவற்றை தவறான நடவடிக்கைகளுக்கு பாவிப்பதையும் அவற்றிற்கு அடிமையாவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எமது உடலை பராமரிப்பதற்கு நேரம் எடுத்துக் கொள்வதும் விரும்பியோர் ஆபரணங்கள் அணிவதும், வாசனைத்திரவியங்கள் பயன்படுத்துவதும் தவறு ஆகாது.

இது மனதிற்கும் உடலிற்கும் புத்தூக்கத்தை கொடுத்து ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். ஆனால் இவை கலாசார மரபுகளுக்கு பங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

பகற்கனவு காணாதே! என்று உபதேசிப்பவர்கள் பலர். ஆனால் ஒவ்வொருவரும் தனது எதிர்காலம் பற்றியும், தனது குடும்பம், சமூகம் என்பவற்றின் எதிர்காலம் பற்றியும் கனவு காண்பது ஆரோக்கியமாகவும் பயனுடையதாகவும் இருக்கும். ஆனால் அந்தக்கனவுகளும் திட்டங்களும் பிறரை பாதிப்பதாக அமைந்து விடக்கூடாது.

பிள்ளைகளின் மன உணர்வுகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக இருப்பது பிள்ளைகளுக்கு செல்லம் கொடுப்பது என்று அர்த்தப்படாது.

பிள்ளைகளுக்கு செல்லம் கொடுக்கக்கூடாது என்று கருதி பிள்ளைகளுடன் அளவுக்கதிகமாக கடுமையாக நடந்து கொள்வது பல எதிர்மறையான விளைவுகளை தோற்றுவிக்கும்.மற்றவர்களின் மன உணர்வுகளை விளங்கிக் கொண்டு ஆதரவு கொடுத்து அனைவரையும் நல்வழிப்படுத்தி வாழ முயற்சிப்பது பயனுடையதாக அமையும்.

தொடரும்...

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

## மார்பக புற்றுநோய்



### உங்கள் மார்பகத்தில் கட்டிகள் இருக்கிறதா என்பதை நீங்களே எவ்வாறு பரிசோதித்து பார்ப்பது?

மார்பக புற்றுநோயானது பெண்களுக்கு ஏற்படும் பொதுவான புற்றுநோய்களில் ஒன்றாகும். இது உருவாவதற்கான சாத்தியக்கூறானது வயதானவர்களிலும், குடும்பத்தில் மார்பக புற்றுநோய் உள்ளவர்களிலும் , பிள்ளைகள் அற்றவர்களிலும், மாதவிடாய் நின்றபின் அதற்காக மருந்துகள் பாவிப்பவர்களிலும், இளவயதில் கதிர்வீச்சுக்கு உள்ளானவர்களிலும் அதிகமாக காணப்படுகிறது.

இப் புற்றுநோயானது சிறிதாக இருக்கும்போது கண்டுபிடிக்கப்படின் இதற்கு முறையான சிகிச்சை வழங்கமுடியும். இவ்வாறு இதை கண்டுபிடிக்க உங்கள் மார்பகங்களை ஒழுங்கான இடைவெளியில் பரிசோதிக்க வேண்டும்.

### எப்போது இதை செய்ய வேண்டும்?

இப்பரிசோதனையை நீங்கள் ஒழுங்குமுறையாக குறிப்பிட்டகால இடைவெளியில் செய்துவந்தால் உங்கள் சாதாரண மார்பகத்தைப்பற்றி நீங்கள் தெளிவாக அறிந்து கொள்வீர்கள். இதனால் கட்டிகள் உருவாகும் போது அவற்றை இலகுவாக அடையாளம் காண முடியும்.

உங்களுக்கு மாதவிடாய் இப்போதும் வருகின்றதெனின்,நீங்கள் இரத்தப்போக்கு முடிந்து மூன்று,நான்கு நாட்களின் பின் செய்யுங்கள். ஏனெனில் மாதவிடாய் நேரத்தில் உங்கள் மார்பகங்கள் வீக்கமாகவும், நோத்தன்மை உள்ளதாகவும் காணப்படும். இதனால் மார்பகத்தை சோதிப்பது சிரமமாகும்.

உங்களுக்கு மாதவிடைச்சக்கரம் நின்றுவிட்டதெனில் மாதத்தில் குறிப்பிட்ட திகதியை தேர்ந்தெடுத்து ஒழுங்காக பரிசோதியுங்கள்.


### இப்பரிசோதனையில் எதை நீங்கள் அவதானிக்க வேண்டும்?

- கட்டிகள் உருவாதல்
- முலைக்காம்பினூடாக பால் தவிர்ந்த ஏனைய பதார்த்தங்கள் வெளியேறல் (இரத்தம்)
- மார்பு வீக்கமடைதல்
- முலைக்காம்பில் மாற்றங்கள் உருவாதல்
- மார்பகத்தில் உள்ள தோலில் பள்ளங்கள் உருவாதல்

### எவ்வாறு இந்த பரிசோதனையை சுயமாக செய்வது?

- நீங்கள் உங்கள் மார்பகங்கள் இரண்டும் அடங்கக்கூடிய வகையில் அகலமான கண்ணாடியின் முன் சென்று நில்லுங்கள்
- உங்கள் மார்பகங்களில் ஏதும் வித்தியாசம் இருக்கிறதா என்பதை பாருங்கள்
- பின்னர் உங்கள் கைகளை கோர்த்து பிடரியில் வைத்துக்கொண்டு மீண்டும் அவதானியுங்கள். இதன்மூலம் உங்கள் மார்பகத்தின் கீழ்பகுதியை அவதானிக்க முடியும்.
- பின் உங்கள் கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு நெஞ்சை சிறிது முன்னோக்கி வளைத்து மீண்டும் அவதானியுங்கள்
- பின்னர் முலைக்காம்புகளை அழுத்திப் பாருங்கள் ஏதும் முலைக்கம்பினூடாக வருகிறதா என்று
- பின்னர் வசதியாக படுத்துக்கொள்ளுங்கள்
- பின் ஒரு கையை தலைக்கு பின்னால் வைத்து, மற்ற கையால் அப்பக்க மார்பகத்தை பரிசோதியுங்கள்
- பரிசோதிக்கும் போது கை விரல்கள் நெருக்கமாகவும் கை மடியாமலும் இருக்க வேண்டும்
- பரிசோதிக்கும் போது சுழற்சி முறையில் மார்பகத்தை அழுத்த வேண்டும்.
- மார்பகத்தின் எல்லாப்பகுதிகளையும் நடு நெஞ்சுப்பகுதியையும் கமக்கட்டு பகுதியையும் பரிசோதிக்க வேண்டும்
- வலது கையால் இடது மார்பகத்தையும், இடது கையால் வலது மார்பகத்தையும் பரிசோதிக்க வேண்டும்
- இதன் பின்னர் நின்ற நிலையில் குளித்துக் கொண்டு மேற்கூறியவாறு மீண்டும் மார்பகங்களை பரிசோதிக்க வேண்டும்.
- எப்போதும் பரிசோதிக்கும் போது குறிப்பிட்ட ஒழுங்கை கடைப்பிடியுங்கள்.
- இவ்வாறு பரிசோதிக்கும் போது ஏதும் பிரச்சினைகள் தென்படின் வைத்தியரை நாடுங்கள். அவர் உங்களை பரிசோதித்துவிட்டு வேறு பரிசோதனைகளை செய்வார்

Dr.க.சிவசுகந்தன்







மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.